Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 79 | ஞாயிற்றுக்கிழமை 13 பெப்ரவரி 2022 | மாசி 01 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+16 | விலை: 40/=

## போராட்டத்திலிருந்து தாதியர்கள் விலகல்

கொழும்பு, பெப். 13
நீதிமன்ற உத்தரவுக்கு அமைய பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைக் கைவிடுவதற்கு அரச தாதிய உத்தியோகத் 15

## சுகாதார ஊழியர்களை மக்கள் தாக்கவேண்டும்

### கூறுகிறார் ஆளும்கட்சி எம்.பி.

கொழும்பு, பெப். 13
போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார சேவை தொழிற்சங்க ஊழியர்களுக்கு எதிராக மக்கள் 15



## யாழ். போதனா முன்பாக சுகாதாரத்துறையினர் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 13
பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார சேவைத் தொழிற்சங்கங்களின் யாழ்ப்பாண் மாவட்ட மருத்துவமனைகளில் கடமையாற்றும் ஊழியர்கள், யாழ்ப்பாணம் 14

# மோடி - கூட்டமைப்பு அடுத்த மாதம் சந்திப்பு

### இரா. சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 13
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கைக்கு வந்தால் அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரில் சந்திக்கும். தமிழர் விவகாரம் தொடர்பில் அவருடன் நாம் விரிவாக - விளக்கமாக பேசுவோம் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். 04

## அத்தியாவசிய சேவையாக சுகாதார சேவை பிரகடனம்!

### ஆனாலும் தொடர்கிறது போராட்டம்

கொழும்பு, பெப். 13
மருத்துவ சேவைகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன. இதன் 15

## 90 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 13
யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த மூன்று நாள்களில் 90 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளதாக 15

## ச.தொ.ச.வில் பலர் பணி இடைநீக்கம்

கொழும்பு, பெப். 13
நிதி முறைகேடுகள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் ச.தொ.ச. நிறுவனத்தின் தலைவர் 13

## சிறுபோக நெற்செய்கை படையினரும் ஈடுபடுவர்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13
சிறுபோகத்தில், நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில், அனைத்து மாவட்டக் குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், இராணுவ 16

## எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 13
குருநகர் தண்ணீர்த் தாங்கி அருகே உள்ள வீட்டில் நேற்று முன்தினம் இரவு எரிவாயு அடுப்பு வெடித்தது.
இரவு உணவைத் தயாரித்த பின்னர் அடுப்பை நிறுத்திவிட்டுச் சென்ற நிலையில் 04

## வேம்பு வீழ்ந்தது: அரசு எழுந்தது

### கொக்கிளாயில் சீருடையினர் கைங்கரியம்



முல்லைத்தீவு, பெப். 13
முல்லைத்தீவிலிருந்து கொக்கிளாய் செல்லும் வீதியில் மணலாறு செல்லும் பாதை பிரிந்து செல்லும் மூன்று சந்தியில் செழிப்பாக வளர்ந்து வந்த வேப்ப மரத்தை வெட்டி அகற்றிவிட்டு, வெள்ளரச மரக்கன்றை அதே இடத்தில் நட்டு வளர்க்கும் 15

### அதிவேகம்

## சுவருடன் மோதி இளைஞன் சாவு!



யாழ்ப்பாணம், பெப். 13
ஆபத்தான வீதி வளைவில், அதிவேகத்தில் பயணித்த இளைஞன், வீதியோரத்திலிருந்த 14

## கொழும்பின் ஆட்சி மாற்றத்துக்கு தமிழர்களுக்கும் வலை விரிப்பு

### இனஅழிப்பை மூடிமறைக்கும் சதி என்கிறார் பொஸ்கோ

யாழ்ப்பாணம், பெப். 13
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் தமிழின அழிப்பை மூடி 15

# வளங்களைச் சுரண்டி நிலங்களைப் பறிக்காதே

### கொக்கிளாயில் கொதித்தெழுந்து மக்கள் நேற்றுப் போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 13
கனிய மணல் கூட்டுத் தாபனத்தால் இல்மனைட் அகழ்வுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான கொக்கிளாய் தொடக்கம் செம்மலை கிழக்கு வரையான தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக நிலங்களை அளவீடு செய்து ஆக்கிரமிக்கும் செயற்பாட்டுக்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டக்ளஸுடனான சந்திப்பு பயன் இல்லாதது

## மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவிப்பு

மன்னார், பெப். 13

மன்னாரில் நேற்று நடைபெற்ற கடற்றொழில் அமைச்சர் டக்ளஸுடனான சந்திப்பு பயனில்லாதது என்று மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாச தலைவர் முகமட் ஆலம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்ற சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான இன்றைய கூட்டம் எமக்கு திருப்தி அளிக்கவில்லை. மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பல முக்கிய விடயங்கள் பேசப்படவில்லை. இதில் தடை செய்யப்பட்ட தொழில்களான சுருக்குவலை, சிலிண்டர் மூலம் மீன் பிடிப்பது, அட்டை பிடிப்பது மீன் மற்றும் அட்டைப் பண்ணைகள் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடப் பட்டது. எனவே இந்தக் கூட்டத்தால் மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர சிறு மீன் பிடித்தொழிலாளர்கள் பயனடையப் போவதில்லை - என்றார். மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், மாவட்டத்தில் உள்ள கிராமிய கடற்றொழிலாளர்கள் சங்கத்தினர் மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ம-213)

# இலங்கையில் தற்போது 99 சதவீதம் ஒமிக்ரோன்!

## மருத்துவ நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துடாவ தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.13**

**நாட்டில் தற்போது 99 சதவீதம் ஒமிக்ரோன் பரவலே காணப்படுகிறது. இதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு மூன்றாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக்கொள்வது அவசியமாகும். 16 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 42 சதவீதமனோர் மாத்திரமே இதுவரையில் மூன்றாம் கட்டத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.**

இவ்வாறு சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துடாவ தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் இதுவரையில் 59 இலட்சத்து 42 ஆயிரத்து 255 பேர் மாத்திரமே மூன்றாம் கட்டத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இது 16 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 42 சதவீதமாகும். எனினும் 60 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 60 சதவீதமானோருக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் பதிவாகும் மரணங்களில் 70 சதவீதமானவை 60 வயதுக்கு மேற்பட்டோருடையதாகும். எனவே 60 வயதுக்கு மேற்பட்டோர் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும்.

ஆரம்பத்தில் தனிமைப்படுத்தல் காலம் 14 நாள்களாகக் காணப்பட்டது.

பின்னர் 10 நாள்களாகக் குறைக்கப்பட்டு, தற்போது 7 நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. காரணம் தற்போது நாட்டில் 99 சதவீதம் ஒமிக்ரோன் பரவலே காணப்படுகிறது. ஒமிக்ரோன் வைரஸானது விரைவாக தொற்றி, விரைவாக குணமடையக்கூடியதாகும்.

ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளாகி 5 நாள்களின் பின்னர் தொற்றாளரிடமிருந்து அது மீளப் பரவாது.

அதனால்தான் 7 நாள்கள் தனிமைப்படுத்தல் காலம் போதுமானதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வித தொற்று அறிகுறிகளும் இல்லையெனில் 7 நாள்களின் பின்னர் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளை முன்னெடுக்கத் தேவையில்லை- என்றார். (எ-இ)

## மாவுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, பெப்.13

நாட்டில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர். மா தட்டுப்பாடு காரணமாக வெதுப்பகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்படும் கோதுமை மாவின் அளவு 35 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான நிறுவனங்கள் தற்போது ஒரு கிலோ கோதுமை மாவினை 145 ரூபாவுக்கு வழங்குகின்றன என்றும், கோதுமை மாவின் விலை அதிகரிப்பால் தங்களுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று வெதுப்பக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)



## சேதன உர விவசாய முயற்சி திருகோணமலையில் வெற்றி

திருகோணமலை, பெப்.13

திருகோணமலை மாவட்டத்தில் சேதனப்பசளையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பெரும்போக நெற்செய்கையிலிருந்து சிறந்த விளைச்சல் பெறப்பட்டுள்ளது என திருகோணமலை மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சின் அனுசரணையுடன் கண்டி தேசிய அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் மேற்கொள்ளப்பட்ட மாதிரி நெற்செய்கையின் ஆய்வறிக்கை வெளியீடு திருகோணமலை பதவிஸ்ரீபுர பிரதேசத்தில் கமநல சேவை நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த திருகோணமலை மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன்,

திருகோணமலையில் கந்தளாய், சேருவெல, பதவிஸ்ரீபுர ஆகிய இடங்களில் சேதன உரமும் இரசாயன உரமும் 70க்கு 30 என்ற வீதத்தில் சேர்க்கப்பட்டு, நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. சேதன உரம், சேதன திரவ பசளை ஆகியன வற்றை பயன்படுத்திச் செய்கை பண்ணப்பட்ட வயலில் அதிகளவான விளைச்சல் கிடைத்துள்ளது. அதன் படி, சாதாரணமாக செய்கை பண்ணப்பட்ட வயலில் 80 புசல் நெல்லும், சேதன உரம், திரவப் பசளையைப் பயன்படுத்தி செய்கை பண்ணப்பட்ட வயலில் 160 புசலும் விளைச்சல் கிடைத்துள்ளது.

பசுமை விவசாயம் திருகோணமலை மாவட்டத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது - என்றார். (வ-19)

## தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, பெப். 13

பளைப் பிரதேசத்தில் கொரோனாத் தடுப்பூசி இதுவரை ஏற்றிக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராமஅலுவலர் பிரிவு ரீதியாக ஆரம்பிக்கப்பட்ட பணியில் நேற்று முகமாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-ரி1-9)

## தென்மராட்சியில் பெப்ரவரியில் மட்டும் 100 பேருக்குக் கொரோனாத் தொற்று!

சாவகச்சேரி, பெப். 13




தென்மராட்சியில் பெப்ரவரி மாதத்தின் முதல் பத்து நாள்களில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 100ஐத் தாண்டியுள்ளது என்று சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரையான காலப்பகுதியில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 101ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பெப்ரவரி பத்தாம் திகதி வரையான காலப்பகுதியில் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 180ஆக காணப்படுகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-ரி1-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனிலிருந்து தப்ப பேச்சு அவசியம்!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

**கொழும்பு, பெப். 13**

**சர்வதேச கடன் பொறிக்குள் சிக்கிக்கொண்டுள்ள நாம் உடனடியாக சகல நாடுகளுடனும் பேச்சுக்களை முன்னெடுத்து கடன் செலுத்துவதில் மீள்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக்கொள்ளவேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன்களை மீளச் செலுத்துவதிலுள்ள நெருக்கடிகள் தொடர்பாக ஆராயும் விதமாக நாடாளுமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற நிதிக் குழுக்கள் ஒன்றிணைந்து கடந்த வியாழக் கிழமை கொழும்பில் கலந்துரையாடியிருந்தனர்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதைய நிதி நெருக்கடி நிலைமைகளை நாம் சகலரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தச் சூழ் நிலையில் ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொண்டு இருக்காது அடுத்த கட்டத்தில் முன்னெடுக்கவேண்டிய தீர்மானங்கள் என்ன என்பதையே ஆராய வேண்டும். அதற்கு முன்னுரிமை கொடுக்கும் விதமாக நாம் பொது இணக்கப்பாட்டை கண்டுள்ளோம். நாடாளுமன்ற நிதிக் குழுக்களின் தலைவர்களும் இதே நிலைப்பாட் டைத்தான் கொண்டுள்ளனர். அரசாங்கத்துக்கும் இதை அறிவிக்கவுள்ளோம் - என்றார். (ஏ-இ)

## சர்வதேசத்தின் தேவைக்கேற்ப அரசாங்கம் செயற்படாதாம்!

### நாமல் ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு, பெப். 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அல்லது வேறு சர்வதேச அமைப்பினருக்கும் தேவையான வகையில் அர சாங்கம் கைதிகள் சம்பந்தமான தீர்மானங்களை எடுக்காது என அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் கைதிகளை விடுதலை செய்யவில்லை என்பதற்காக ஜெனிவாவில் அரசாங்கத்துக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. ஜனாதிபதியின் கொள்கை அறிக்கையில் இதுபற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதுதான் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது. சிறைச்சாலையில் காணப்படும் இட நெருக்கடிக்குத் தீர்வு காண்பது குறித்தும் கூறப்பட்டுள்ளது. பலர் எந்த வழக்குகளும் இன்றி விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர். அவர்களை அப்படியே வைத்திருக்க முடியாது. இது அநீதி. நானும் சிறைக்குச் சென்றேன். இந்தக் கைதிகள் இருந்த விடுதியிலேயே இருந்தேன். கிராமத்தில் கையை வெட்டியவர் சிறையில் இருக்கும் நிலையில், கடந்த ஆட்சிக் காலத்தில் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டார். கையை வெட்டியவரை சிறையில் வைத்துக்கொண்டு என்ன செய்வது. ஜெனிவாவோ வேறுநாட்டின் தேவைக்காக நாங்கள் அரசியல் முடிவுகளை எடுக்கமாட்டோம். நாங்கள் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தோம் என்பதை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. அதை விரும்பாத நாடுகளும் இருக்கின்றன. விரும்பாதவர்களுக்கு நாங்கள் என்ன செய்தாலும் விருப்பமில்லை. அவர்களுடன் நட்பாக முடியாது- என்றார். (ஏ-இ)

## அல்லைப்பிட்டியில் கஞ்சாவுடன் கைது



ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட அல்லைப் பிட்டி பகுதியில், 102 கிராம் கேரளக் கஞ்சாவுடன் 42 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கஞ்சாவுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் ஊர்காவற்றுறை பொலிசாரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-27)

## மோடி - ...

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 5 ஆவது பல்துறை தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார கூட்டுறவுக்கான வங்காள விரிகுடா முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட பிம்ஸ்டெக் அமைப்பின் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் அரச தலைவர்களும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். இந்நிலையில், இந்தியப் பிரதமரின் இலங்கைப் பயணத்தின் போது. சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏதாவது தகவல் தெரிவிக்கப்பட்டதா என்று அதன் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம் தொடர்பில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடமிருந்து எமக்கு உத்தியோகபூர்வ தகவல் எதுவும் கிடைக்கவில்லை. எனினும். இந்தியப் பிரதமர் அடுத்த மாதம் இலங்கை வந்தால் அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரில் சந்திக்கும். தமிழர் விவகாரம் தொடர்பில் அவருடன் நாம் பேசுவோம். கடந்த காலங்களில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்த வேளைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அவர் தவறாமல் சந்தித்துவிட்டே சென்றார். இம்முறையும் அவர் இலங்கை வந்தால் எம்மை அவர் கட்டாயம் சந்திப்பார்' - என்றார். (அ-ஔ-5-22)

## எரிவாயு...

திடீரென எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (ஔ-20)

**மருந்தாளர்கள் தேவை**

மருந்தகம் ஒன்றுக்கு மருந்தாளர்கள் தேவை.
(Pharmacyist சான்றிதழ் உடையவர்கள்)
தொடர்பு 077 867 1786

**பணிப்பெண் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றின் இரண்டு பிள்ளைகளை தங்கி நின்று பராமரிப்பதற்கு 35-50 வயது உள்ள பெண் தேவை. சம்பளம் 35,000/= தங்குமிட வசதியுடன்.
தொடர்புகளுக்கு:
077 937 0000, 075 988 0000

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**

**பிரிவு-35**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Sinhala

★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: 1) நேரடி வகுப்புகள் (Direct Class)
சனி, ஞாயிறு 9 am - 2 pm
4 pm - 6 pm
2) On-line classes (Zoom)
செவ்வாய், வியாழன் 5.30 pm -6.30pm
3) அலுவலக உத்தியோகத்தர்கட்கு
வார, வார இறுதி நாட்களில் 5.30 pm -6.30pm

குறிப்பு:-
- 2018, 2019, 2020 உயர்தர மாணவர்கட்கு உயர்கல்வியில் வட்டியில்லாத கடன் திட்டம்
- IELTS புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன (Academic, General, Training)
- தொலைக்கல்வி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பேராதனை யாழ். (கலை) விரிவுரைகள் நடைபெறுகின்றன.

ஆரம்பம்
19/02/2022
10.00 AM

IPS to your future
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
T.P: 021 4340229 / 076 685 2529
e-mail:degreeinfo21@gmail.com

**மரண அறிவித்தல்**

மலர்வு 17 . 05 . 1945
உதிர்வு 11 . 02 . 2022



**ஆறுமுகம் அன்னலட்சுமி**

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் மடத்தடி சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அன்னலட்சுமி நேற்று முன்தினம் (11.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் கந்தையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும். பசுபதி சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கனகரட்ணம் (கனடா). புஸ்பவதி (சரசாலை). சுந்தரலிங்கம் (அப்பன் - ஜேர்மனி). காலஞ்சென்ற பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும். அரவிந்தன் (ஜேர்மனி). அகலிகை (மஞ்சு -நோர்வே). ஆகியோரின் பாசமிகு தாயாரும். தர்சினி (ஜேர்மனி). வதனதாஸ் (நோர்வே). ஆகியோரின் அன்பு மாமியாரும். அருண். அகன். அனிஷ். ஆகவி. அஜீனா. ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

அரவிந்தன் (மகன்) 075 0869860
சீலன் (பேறாமகன்) 0776172448, 077 1194 757
மஞ்சு (மகள்) - 004747165320

தகவல்: குடும்பத்தினர்.
(CR 37...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாயுறுப்பானது தன்னகத்தே தாங்கி இருக்கக்கூடிய பற்கள், பற்களை தாங்கி இருக்கின்ற முரசுப்பகுதிகள், நாக்கு, உமிழ் நீர் சுரப்பி, வாய் மென்சவு பகுதி, உதட்டுப்பகுதி மற்றும் உட்தொண்டை பகுதி என அவை யாவற்றையும் தன்னகத்தை கொண்டமைந்ததுதான். அதிலும் கொரோனாப் பெருந்தொற்றின் பரவுகைக்கும் வாய் ஒரு முக்கிய காரணியாக இருக்கின்றமையால் வாய் சுகாதாரத்தை உச்சபட்டசமாகப் பேண வேண்டியது இன்று யாவருக்கும் அவசியமானதாகும். அத்துடன் அது காலத்தேவையுமாகும்.

வாயில் வரக்கூடிய நோய்களான முரசு கரைதல், பல் தேய்வடைதல் மற்றும் வாய் புண்கள் ஏற்படுதல் போன்ற தொற்றுநோய்களில் இருந்து எம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும். ஆரோக்கியமான உணவுக் பழக்கத்தின் மூலமும் வாய்ச் சுகாதாரத்தை நல்லபடியாகப் பேண முடியும்.

வாய் துர்நாற்றம் ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. உணவுத் துகள்கள் பல் இடுக்குகளில் மாட்டிக்கொண்டு வாய் கொப்பளிக்கும்போதோ அல்லது பல் துலக்கும்போதோ வெளியேறவில்லை என்றால் அழுகிப்போய் துர்நாற்றம் வீசலாம். தொண்டையில் நோய்த் தொற்று ஏற்பட்டு துர்நாற்றம் வீசலாம். ஈறு நோய், சொத்தைப் பல், வயிறு தொடர்பான பிரச்னைகளால் துர்நாற்றம் வீசலாம். இதுபோன்று இன்னும் வேறு பல காரணங்கள் உள்ளன.

ஒரு நாளைக்கு காலை மற்றும் இரவு என இருமுறை பல் துலக்குவது மிகவும் அவசியம். பற்கூச்சம் போன்ற பிரச்னை உள்ளவர்கள் மென்மையான பற்தூரிகைகளையும், மற்றவர்கள் நடுத்தர வகைத் தூரிகைகளையும் மட்டுமே பயன்படுத்தவேண்டும். பல் வரிசையின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று சுத்தம் செய்ய வசதியாக கைப்பிடி நன்றாக சௌகரியமாக இருக்க வேண்டும். அது மாதிரியான தூரிகைகளை மட்டுமே வாங்க வேண்டும். பல் துலக்கிய பிறகு ஈறுகளை மென்மையாக அழுத்தி மசாஜ் செய்ய வேண்டும். நாக்கில் உள்ள பசையை அகற்ற வேண்டும். 60 முதல் 90 நாள்களுக்கு ஒரு முறை தூரிகையை மாற்றுவது நல்லது.

பொதுவாகவே பற்களின் முரசுகளில் ஒரு நிறமற்ற படலமாக பக்டீரியாக்கள் படிகின்றன. பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களின் ஆரம்ப நிலையில் ஏற்படும் இத்தகைய படலம் "பிளாக்" என்று அழைக்கப்படுகிறது. இந்தப்படலமானது ஆரம்பத்தில் இலகுவாக விரல் நகம் கொண்டு அகற்றப்படக்கூடியளவு இளகலாகக் காணப்படும். இது அகற்றப்படவில்லை என்றால் 48 மணி நேரங்களுக்குள் கடினமடைந்துவிடும். மேலும் பத்து நாள்கள் சென்ற பின்னர் மேலும் தீவிரமடைந்து அகற்ற முடியாததாகவே ஆகிவிடும். ஒழுங்காக பல் துலக்காதவிடத்து இத்தகைய சிக்கல்கள் பற்சிதைவு, பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களைத் தோற்றுவிக்கும்.

எமது வாயுறுப்பானது பேசுவதற்கு, உணவை மென்று, ருசித்து சாப்பிடுவதற்கு எமது முகத்துக்கு அழகிய தோற்றத்தை தருவதற்கு இன்னோரன்ன பல உதவிகளை செய்கின்றது. ஆகவே நாம் எமது அழகிய தோற்றத்தை பிரதிபலிப்பதற்கு எமது வாயுறுப்பும் மேல் கீழ் தாடையில் அமைந்துள்ள பற்களின் வரிசையும் எமக்கு முக்கியமாக இருக்கின்றன. ஆகவே நாம் அவற்றை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

சீனித்தன்மை கூடிய உணவுப்பொருள்களை அடிக்கடி நாங்கள் வாயிலிட்டு மெல்வது, எமது பற்களின் ஆரோக்கியத்தை பாதிக்கும் ஒன்றாகும். அது மாத்திரமல்லாது, வெற்றிலை சாப்பிடுவது, புகைப்பது, மதுபானங்களை அருந்துவதும் எமது வாய் ஆரோக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துடன் முக அழகையும் இல்லாமலாக்கிவிடும். பல்லுப்போனால் சொல்லுப்போகும் என்பார்கள். ஆதலால் வருடத்துக்கு இரண்டு தடவையேனும் பல் வைத்தியரிடம் சென்று எமது வாயை பரிசோதித்துக்கொள்ள வேண்டும்.

பற்கள் உடல் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பளிச்சென்ற பற்களும், அழகான புன்னகையும், அன்பான வார்த்தைகளும் நம்மை மற்றவர்கள் மத்தியில் உயர்வாக அடையாளம் காட்டுகின்றன. அத்தகைய அழகான பற்களையும், ஈறுகளையும், வாய் ஆரோக்கியத்தையும் பேணிக்காப்போம். புன்னகைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"இந்த உலகை மாற்றுவதற்கு உங்களால் பயன்படுத்தக்கூடிய மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் கல்வி".
-நெல்சன் மண்டேலா

## நம்பிக்கை தகர்வது நலமன்று!

இலங்கையில் மீண்டும் ஐ.நா. தொடர்பான பேச்சுக்கள் மேலெழ ஆரம்பித்திருக்கின்றன. உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு நடக்கும் காலப்பகுதியில் ஐ.நா. பேசுபொருளாவது வழமையாகியிருக்கின்றது.


இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. கடந்த ஆட்சிக் காலத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கமும் அனுசரணை வழங்கியிருந்தது. தற்போது ஆட்சியில் உள்ள கோத்தாபய ராஜபக்ச அரசு, அந்தத் தீர்மானத்தில் இருந்து விலகியிருக்கின்றது. இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பமாகவிருக்கின்றது.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் சர்வதேசத்தின் துணையுடன் மௌனிக்கப்பட்ட பின்னர், தமிழ் மக்களின் பெரும் நம்பிக்கையாக ஐக்கிய நாடுகள் சபை இருந்தது. தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தமிழ் மக்கள் பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால் போர் முடிந்து தசாப்த காலம் கடந்திருக்கும் நிலையில், இலங்கையைப் பொறுப்புக்கூறல் நோக்கி ஓரடி கூட உந்தித்தள்ள முடியாத நிலைமையிலேயே சர்வதேசம் இருக்கின்றது. அடக்குமுறைக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு, நீதியை எதிர்பார்த்திருக்கும் தமிழ் மக்களுக்கு இது பெரும் ஏமாற்றமே.

இந்த ஆண்டும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தைச் சமாளிப்பதற்கான தகிடுதத்தங்களை ஆரம்பித்திருக்கின்றது. இலங்கை நாடாளு மன்றத்தில் அரசாங்கம் அவசர அவசரமாக பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்த வரைவைக் கொண்டுவருவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரே முக்கியமான காரணம் என்பது வெள்ளிடைமலை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தங்கள் மீது ஏற்படும் நெருக்கடிகளைக் குறைக்கும் நோக்கிலேயே அரசாங்கம் இந்த நகர்வை முன்னெடுத்திருக்கின்றது. ஆனால் பயங்கரவாதத் திருத்தச் சட்ட வரைவு சர்வதேச நியதிகளுக்கு ஏற்ப இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி வெளியிட்டிருக்கின்றது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கு இந்த மாத இறுதியில் பயணங்களை மேற்கொள்ளத் திட்ட மிட்டிருக்கிறார் என்றும் அறியமுடிகின்றது.

போர் முடிந்து தசாப்த காலம் கடந்த பின்னரும் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்றோ, கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்றோ கிஞ்சித்தும் எண்ணம் கொள்ளாது தொடர்ந்து சர்வதேச சமூகத்தையும், தமிழ் மக்களையும் ஏமாற்றவே முற்படுகின்றது. இதை உணர்ந்து சர்வதேச சமூகம் இலங்கை மீது இறுக்கமான அழுத்தங்களை வழங்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.

வாக்குறுதிகளை வழங்குவதும், பின்னர் அவற்றை மீறுவதுமான இலங்கையின் போக்கை பல தடவைகள் கண்டபின்னரும் சர்வதேசம் இலங்கையின் மீது மென்போக்கைக் கடைப்பிடிப்பது ஐக்கிய நாடுகள் சபை மீதும், சர்வதேசம் மீதும் தமிழ் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை தகர்க்கும். தமிழ் மக்களின் நம்பிக்கை தகர்வது இலங்கையின் எதிர்காலத்துக்குப் பெரும் ஆபத்தாக முடியும் என்பது உண்மை.




# காத்திரமான திட்டமிடல் அரசாங்கத்திடம் இல்லை

## செல்வம் எம்.பி தெரிவிப்பு



**வவுனியா, பெப். 13**

**உரிய திட்டமிடல்கள் இல்லாததால்தான் இன்று நாடு இந்தளவு பின்னடைவுக்குள் சென்றுகொண்டிருக்கின்றது. அரசாங்கத்திடமோ அல்லது ஜனாதிபதியிடமோ எந்தத் திட்டமிடல்களும் இல்லை என்று தெரிவித்தார்**

வவுனியா-பாரதிபுரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்ததுத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
இன்று அரசாங்கம் கடும் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டுள்ளது. விவசாயிகளின் வயிற்றில் கை வைத்ததால் இந்த நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. விலை நிர்ணயம் என்பது அறவே இல்லாமற் போய்விட்டது. ஒவ்வொரு பொருள்களும் ஒவ்வொரு மாதிரியாக விற்கப்படுகின்றன. அரசாங்கத்திடமோ அல்லது ஜனாதிபதியிடமோ எந்தத் திட்டமிடல்களும் இல்லை. விவசாய நடவடிக்கைகளில் திட்டமிடல்கள் இருந்திருந்தால் இன்று உணவுப்பஞ்சம் என்ற நிலைக்கு நாடு சென்றிருக்காது - என்றார்.
(ம-110)

# பாரவூர்தி, டிப்பர் விபத்து குளிர்பானங்கள் வீதியில்!

மன்னார், பெப். 13
மன்னார் - பெரியபாலம் பிரதான சோதனைச் சாவடி அருகில் நேற்றுகாலை 6 மணியளவில் டிப்பரும் பாரவூர்தியும் மோதி விபத்துக்கு உள்ளாகின. விபத்தை அடுத்து பாரவூர்தியில் இருந்த குளிர்பானங்கள் வீதியில் விழுந்தன.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:



குறித்த சோதனைச்சாவடி அருகில் கொழும்பில் இருந்து குளிர்பானங்கள் ஏற்றி வந்த பாரவூர்தி நிறுத்தப்பட்டிருந்தது. மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள கூராய் ஆற்றுப்பகுதியில் இருந்து மணல் ஏற்றி வந்த டிப்பர் குறித்த பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் இரு வாகனங்களுக்கும் சேதமேற்பட்டுள்ளது. வாகனத்தில் இருந்தவர்களுக்கு காயங்கள் ஏற்படவில்லை. பாரவூர்தியில் இருந்த குளிர்பானங்கள் வீதியில் விழுந்து சேதமடைந்தன.
(ம-213)

**14.02.2022**
**திங்கட்கிழமை**
**மாசி 02**
சுபநேரம் : 12.33 - 02.03
ராகுகாலம் : 08.03 - 09.33
**பிரதோஷ விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# மனித உரிமை விவகாரத்தில் பாகுபாடு காட்டாதவர் மங்கள

## மனோ கணேசன் புகழாரம்



**கொழும்பு, பெப். 13**

**மனித உரிமைகள் விவகாரத்தில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடு காட்டாதவர் முன்னாள் அமைச்சர் அமரர் மங்கள சமரவீர என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன்.**

மங்கள சமரவீரவுக்கான அனுதாபப் பிரேரணை தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கட்சிகளிலேயே மங்கள போன்று யார் இன்று இருக்கிறார்கள்? ஆளும் தரப்பு பக்கமும் பார்க்கிறேன். எதிர்த்தரப்பு பக்கமும் பார்க்கிறேன். தலையை திருப்பித் திருப்பிப் பார்க்கிறேன். யாரும் இல்லையே!


மங்கள 1988களில் தென்னிலங்கையில் இடம்பெற்ற சிங்கள இளைஞர்களை கடத்திச் சென்று கொல்லும் மனித உரிமை மீறல்களை எதிர்த்தார். அன்று அவருடன் நிமல்கா பெர்னாண்டோ போன்றோர் அன்னையர் முன்னணியை அமைத்தார்கள். அன்று அவருடன் இருந்த வேறு சில நபர்களின் பெயர்களை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் அன்று சிங்கள இளைஞர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டதை எதிர்த்தவர்கள், பின்னாளில் எமது மக்கள் கொல்லப்பட, கடத்தப்பட காரணங்களாக அமைந்தார்கள்.

ஆனால், மங்கள அப்படி இருக்கவில்லை. 2006 முதல் 2012 வரை எமது மக்கள் மீது நடத்தப்பட்ட கொடூரமான மனித உரிமை மீறல்களையும் எதிர்த்ததன் காரணமாகவே அவர் அன்றைய அரசில் இருந்து விலக்கப்பட்டார். 2007ஆம் ஆண்டு ஆளும்தரப்பு பக்கமிருந்து இந்த எதிர்தரப்புக்கு வந்து அமர்ந்தார். இன்று நான் இருக்கும் இந்த ஆசனத்துக்கு அடுத்த ஆசனத்திலேயே அவர் அன்று வந்து அமர்ந்தார். சமீப காலத்தில் இந்நாட்டு முஸ்லிம் மக்களுக்கு எதிராக செய்யப்பட்ட இனவாத முன்னெடுப்புகளுக்கு எதிராக மங்கள செயற்பட்டார். பலாத்காரமாக ஜனாசாக்களை எரித்திடும் அரசின் செயன்முறைக்கு எதிராக எங்களுடன் சேர்ந்து குரல் எழுப்பினார். இந்த நாடு சிங்கள பௌத்த நாடு அல்ல என்று சொன்னார். அதாவது சிங்களம், பௌத்தம் மட்டும் என்ற கொள்கையை அவர் எதிர்த்தார். இது சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு. இது பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க நாடு. இதுவே அவரது கொள்கை - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
17 . 07 . 1941



இறப்பு
08 . 02 . 2022

## சின்னத்துரை சிவநாதன்

**(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)**

யாழ் குரும்பசிட்டி வீதி கட்டுவன் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவநாதன் அவர்கள் கடந்த (08.02.2022) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலட்சுமி அவர்களின் பாசமிகு கணவரும், சயந்தினி (Paris), அனுசன் (பிரித்தானியா), றமேஷன் (பிரித்தானியா), யாழினி (Paris), ஆகியோரின் அன்புத்தந்தையாரும், மோகன்ராஜ், விஜி, கவிதா, கோபிநாத் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சிவதேவி மற்றும் சிவமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோபாலகிருஷ்ணன், காலஞ்சென்றவர்களான சற்குணராஜா, பரமகுருநாதன், சரவணபவாணந்தன் மற்றும் கமலாதேவி, சாரதாதேவி, சண்முகநாதன், கலாநிதி, சாந்தினி, குகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கௌதமராஜ், வினோராஜ், ராம்ராஜ், அசோக்ராஜ், வீமன்ராஜ், யதுஷ், டனுஷ், ரணுஷ், வினுசா, விசால், வினோயா, வினுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15.02.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10:00 மணி முதல் பிற்பகல் 12:30 வரை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தெல்லிப்பளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளிற்கு**
0776753561 தனலட்சுமி (மனைவி )
0765496921 (சசி )
0033753410203 (சயந்தினி)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மகள் - சயந்தினி.**

(CS 42894)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லவுள்ள ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, பெப்.13
இந்த மாத இறுதி வாரத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சில ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்யத் தயாராகி வருகிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.


ஜெனிவா மனித உரிமைகள்சபைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் யோசனை சம்பந்தமாக பேச்சை நடத்துவதற்காக அமைச்சர் அந்த நாடுகளிடம் நேரத்தை கோரியுள்ளார்.

சிலநாடுகள் இந்த கோரிக்கைக்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளதுடன் மேலும் சில நாடுகள் இதுவரை பதிலளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

கடந்த வாரம் இந்தியாவுக்குச் சென்ற வெளிவிவகார அமைச்சர் ஜெனிவா விடயம் தொடர்பாகவும் இந்தியா வழங்கும் கடனுதவி தொடர்பாகவும் பேச்சுக்களை நடத்தினார் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, அடுத்து வரும் சில தினங்களில் அமைச்சர் பஸில் ராஜபக்ச புதுடில்லிக்கு செல்லவுள்ளார் என்று தெரிய வருகிறது. இவரது இந்தப் பயணம் தொடர்பில் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட இந்தியாவின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை புதுடில்லியில் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## மரண அறிவித்தல்



மலர்வு
28 . 05 . 1930

உதிர்வு
11 . 02 . 2022

### திரு. குழந்தைவேலு விஜயரத்தினம்

*Justice of Peace, All Island*

வேலணையை பிறப்பிடமாகவும், 60 ½ உருத்திரா மாவத்தை, கொழும்பு 06இல் வசித்தவருமான குழந்தைவேலு விஜயரத்தினம் அவர்கள் கடந்த (11.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான குழந்தைவேலு இராசம்மா தம்பதியினரின் ஏக புதல்வனும், காலம்சென்றவர்களான சதாசிவம்பிள்ளை பவளநாயகி தம்பதியரின் மருமகனும், காலம்சென்ற லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் மற்றும் காலம் சென்றவர்களான அன்னலட்சுமி, இராசலட்சுமி, பரமேஸ்வரி மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயகுமாரன், சிவகுமாரி, விஜயகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஷ்பராஜன், சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமனாரும், மிதுஷன், கும்குமி, சங்கவி ஆகியோரின் பாசமிகு தாத்தாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.02.2022) காலை 8.00 மணி முதல் பொரளை A.F.றேமன்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக்கிரிகைகள் இடம்பெற்று, முற்பகல் 10.30 மணியளவில் பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விஜயகுமாரன் - 077 7811 466
சிவகுமாரி - 072 6921877

(CR 37562) 1-6

## நாற்று மேடைகள் வழங்கல்

சாவகச்சேரி, பெப். 13
'சௌபாக்கியா' தேசிய வீட்டுத்திட்ட விவசாய அபிவிருத்தித் திட்டத்தில், தென்மராட்சியில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய ஒவ்வொரு பிரிவிலும் சுமார் 20 பேர்ச் நிலப்பரப்பில் நாற்று மேடைகள் தயாரிக்கப்படவுள்ளன. அத்துடன் இந்த நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்படும் நாற்றுகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாட்டை பிரதேச சமுர்த்தி அலகினர் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இதற்கென பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட நாற்று மேடையாளர்களுக்கான பயிற்சி வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன. (ம-ரி1-9)

## பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, பெப். 13
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 39ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். மன்றத் தலைவர் ந.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும். (வ-9)

## வெளிவந்தது ஞானச்சுடர்

யாழ்ப்பாணம், பெப்.13
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் நூலின் 286, 287 ஆவது மலர் வெளிவந்துள்ளது. (ம-ரி)

# அரசாங்கத்தின் தவறாலேயே தொழிற்சங்கப் போராட்டம்!

### அரச மருத்துவ அதிகாரிகள் கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.13**
**பேச்சுக்களின் மூலம் அரசாங்கம் உறுதியளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்குமானால், சுகாதார சேவையினரின் தற்போதைய தொழிற்சங்க போராட்டம் இடம்பெற்றிருக்காது.**

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் கூட்டமைப்பின் தலைவர் ருக்ஷான் பெலன்ன தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுகாதார சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி நேற்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை வரவேற்கின்றோம்.

தொழிற்சங்கப் போராட்டத்துக்கு எதிராக விதிக்கப்பட்ட கொழும்பு மாவட்ட நீதிமன்ற தடையாணையை ஊடகங்கள் வெளியிட்ட நிலையிலும், எமக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று போராட்டத்தை தொடர்வது யதார்த்தமற்றது.

சுகாதாரத்துறையின் தற்போதைய போராட்டம், அரசியல் நோக்கம் கொண்டது. பொது மக்களை வீதிக்கு இறக்குவதே தொழிற்சங்கங்களின் இலக்கு - என்றார். (எ-இ)

# சஹ்ரானின் படம் வைத்திருந்த 9 பேர் மட்டக்களப்பில் கைது!

கொழும்பு, பெப்.13
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹஷீமின் படங்கள் உள்ளிட்டவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டின்கீழ் 9 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு-கொழும்பு வீதி ரிதிதென்னை பொலிஸ் சோதனைச் சாவடியில் அக்குரனையில் இருந்து காத்தான்குடி நோக்கி பயணித்த வாகனம் ஒன்றை நேற்று இராணுவத்தினர் சோதனையிட்டபோது கையடக்க தொலைபேசியில் சஹ்ரான் ஹஷீம் படங்கள் இருந்ததை அடுத்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான 9 பேரும் விசாரணைக்காக வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவமுகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்குரனையில் இருந்து காத்தான்குடி நோக்கி வாகனத்தில் பயணித்த சந்தேகநபர்களை வீதிச்சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவத்தினர், கொரோனாத் தடுப்பூசி செலுத்தியுள்ளீர்களா என்று கேட்டு விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது அதில் பயணித்த முகமட் பாரூக் முகமட் ஆசாத் என்பவர் தனது கையடக்க தொலைபேசியில் தடுப்பூசி ஏற்றியதற்கான அட்டையின் படத்தை காட்ட முற்பட்டார். இதன்போது கையடக்க தொலைபேசியில் உயிர்த்த ஞாயிறுத் தின தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹஷீமின் படங்கள் உள்ளிட்டவையை வைத்திருந்ததை கண்டுள்ள இராணுவத்தினர் அவருடன் பயணித்த 9 பேரையும் தடுத்தி நிறுத்தினர்.

அதையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ முகாமுக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரால் உதவித்திட்டங்கள்

முல்லைத்தீவு, பெப். 13

இராணுவத்நால் பொதுமக்களுக்கான பல்வேறு சேவைகள் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் (இலக்கம் 1) அ.த.க. பாடசாலையில் வைத்து நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப் பட்டன.

கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி, இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், மின்சாரம்பெற முடியாதுள்ள குடும்பங்களுக்கான சூரிய மின்கலங்கள் வழங்கல், மரக்கன்றுகள் வழங்கல் போன்ற பணிகள் இதன்போது முன்னெடுக்கப்பட்டன. (ம-வ-113)



# அற்றோனிப்பத்திரத்தை ரத்துசெய்தல்

இல. 207, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்ததும் 21.10.2017 ஆம் திகதி நொத்தாரிஸ் அ.இராஜரட்ணம் அத்தாட்சிப்படுத்திய 10385 ஆம் இலக்க உறுதிக்கு உட்பட்ட எனக்கு சொந்தமும் ஆட்சியுமான ஆதனம் தொடர்பாக இல.276, ஆடியபாதம் வீதியில் வசித்தவரும் தற்போது இல.44, ராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் குகநேசன் என்பவருக்கு 21.10.2017 ஆம் திகதி நொத்தாரிஸ் அ. இராஜரட்ணம் அத்தாட்சிப் படுத்திய 10386 ஆம் இலக்க விசேட அற்றோனித் தத்துவத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்தை கைமீட்டு ரத்தாக்கியுள்ளதால் குறித்த ஆதனம் தொடர்பாக குறித்த அற்றோனித் தத்துவத்தின் கீழ் குறித்த ஆறுமுகம் குகநேசனுடன் எதுவித உடன்படிக்கை ஒப்பந்தம் செய்ய வேண்டாம் என்றும், மீறி அவ்வாறு செய்யின் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறித்த 10385 ஆம் இலக்க உறுதிப்படி கனகசபை சிவராசா குறித்த ஆதனத்துக்கு சொந்தக்காரர் என்பதையும் அவரால் 10386 ஆம் இலக்கத்தில் அற்றோனித் தத்துவம் நிறைவேற்றப்பட்டதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

(cs.42835) (2.6)


கனகசபைமுதலி சிவராசா

# மரண அறிவித்தல்

## கந்தையா ஞானசேகரம்

பிறப்பு 05.01.1933

இறப்பு 10.02.2022



அராலியைப் பிறப்பிடமாகவும் 131, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஞானசேகரம் கடந்த (10.02.2022) அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சரஸ்வதிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், ஞானசேகரம் - தவமணியின் அன்புக் கணவரும், ராசசேகரம், காஞ்சனா தேவி, காலஞ்சென்ற பேரழகன் மற்றும் பவானி, கமலினி, காலஞ்சென்றவர்களான தவசர்மா, ஞானசர்மா மற்றும் வரதராஜன் (பிரான்ஸ்), நாகராஜேஸ்வரி, பாலசரஸ்வதி (லண்டன்), ஜெயலட்சுமி, குமராஈஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மலர்விழி, மனோகர ராசா (டோகா), சமுகராசா, விஜயகாந்தினி (பிரான்ஸ்), குமார குலசிங்கம், சிவபாலன் (லண்டன்), சுரேந்திரன் ஆகி யோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அராலி கிழக்கு, முனம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 37557) 1-6

தகவல் : குடும்பத்தினர்.

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 05 . 1946

உதிர்வு 10 . 02 . 2010



## திருமதி ருக்மணி நடராசா

திதி: 13.02.2022

அம்மா மாதிரி யாரும் இல்லை மனசுல உள்ள
கவலையை சொல்லி அழ தோள்கள் இல்லை
கதறி அழுதாலும மீண்டும் வரமாட்டாள்
நம்மை தாலாட்டியவள் அவள் தொப்புள் கொடியில்
உருவாகியது நமது உயிர் அவளின் உயிர்
மரண வாசலை எட்டிப்பார்த்து நம்மை ஈன்றாள் அதை
நாம் ஒரு போதும் மறந்திட கூடாது அம்மா அம்மா
சொல்லும் போதே மனசு உருகிடுது கண்ணிலே
கண்ணீர் தேங்கிடுது எனக்கு வேண்டும்
மீண்டும் ஒரு வரம் உன்னை என் கருவில் சுமக்க

138 A, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(cs.42844) (2.6)

நடராசா (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 04 . 06 . 1947

மறைவு 15 . 01 . 2022



கடந்த (15.01.2022) சனிக்கிழமை சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் தங்கராசா ஆறுமுகானந்தன்

(தங்கராசா ஜுவல்லரி மாட் - உரிமையாளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.02.2022) ஞாயிற்றுக் கிழமை காலை ஊறணி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (14.02.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

[illegible]பாணன்,
சந்தை வீதி, உடுப்பிட்டி.

(cs.18620) (2.6)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் நியூ லிலிதா நகை மாளிகைக்கு பின்வரும் வேலைக்கு ஆள்கள் தேவை.

1. கணக்காளர்
2. ஆடிட்டர்
3. விற்பனையாளர்
4. பொது உதவியாளர்

ஆண்கள், பெண்கள், முதியோர் போன்றோர் தேவை.
தங்குமிட வசதி உண்டு. நேரில் சமூகமளிக்கவும்
சம்பளம் : 20.000 - 45.000 வரை

A9, வீதி, கிளிநொச்சி,
இலங்கை வங்கி, மங்கள் வங்கி முன்பாக

(cs.42880) (2.6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பிறந்த இத்தாலி P.R மணமகனுக்கு ஐரோப்பாவில் மணமகள் தேவை.

(cs.42845) 2.6)

076 148 8378

## உடனடி வேலைவாய்ப்பு

மிருசுவிலில் உள்ள Tokyo Cement Company இற்கு Operation Officer, கனரகவாகன சாரதி, வாகன உதவியாளர்கள், ஆய்வு கூட உதவியாளர் (Slump Checker) போன்ற வேலைக்கு ஆட்கள் தேவை.

(cha 632) (2.6)

தொடர்பு: 0771607804

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு Water Proofing

மழை காலங்களில், உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்கள் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவு, ஊறல் போன்ற பிரச்சினைகளை உத்தரவாதத்துடன் சீர்செய்து தருகின்றோம்.
மேற்பரப்பினை (மாபிள் போன்றவற்றில்) ஏற்படும் நீர்க் கசிவு பிரச்சினைகளை செலவை அதிகப்படுத்தாது சிறந்த இரசாயனம் மூலம் சீர் செய்து தருகிறோம்.

**Skyline Holders (Pvt) Ltd**
**No.89, Old Park Road, Jaffna.**
0777 220095 / 076 663 6481 / 021 221 4994
முல்லைத்தீவு/கிளிநொச்சி - 0777 414 960 மன்னார் / வவுனியா - 077 279 0743

(CS 42892)1-6

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 07 . 1940
மறைவு 25 . 01 . 2021

அமரர் திருமதி
### தங்கம்மா ஆறுமுகம்

துவாதசி திதி: (13.02.2022)

உயிர் தந்து, உதிரம் தந்து
உணர்வு தந்த தாயே - நீங்கள்
உதிர்ந்து ஓராண்டு ஆனதம்மா
உறக்கம் இன்றி, உண்ண மனமின்றி
உருக்குலைந்து வாடுகின்றோம் - இருந்தும்
உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்கு
இறையாசியை நாடுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

நின்பிரிவால் துயருறும்
நின் அன்புப் பிள்ளைகள்

(cs.42849) (2.6)

## காணி விற்பனைக்கு
### மன்னார் விடதல் தீவு

மன்னாரில் இருந்து 15Km தூரத்தில், பூநகரி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் (A32), வீதியை முகப்பாக கொண்ட (800M), திருக்கேதீஸ்வரம் திருக்கோவிலுக்கு 10Kmகள் தூரத்தில், தூய உறுதியுடன் சுற்றிவர வேலி கட்டபட்ட, வடக்கு - கிழக்கு எல்லையினூடாக அருவி அமைந்திருப்பதால் வருடம் முழுவதும் நன்நீர் வசதியுடைய காணி விற்பனைக்கு உண்டு

இறால் வளர்ப்பு பண்ணை, குடிநீர் திட்டங்கள், மீன் வளர்ப்பு, தென்னை பயிர்ச்செய்கை சுற்றுலா அபிவிருத்தி, பெற்றோல் நிலையம் போன்றவற்றிற்கு உகந்தது.

எதிர்பார்க்கும் விலை ஒரு ஏக்கர் ரூபா. 10 இலட்சம்
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

0777 897 477 / 077 3077 313 (திரு)

குறிப்பு:- இரண்டு படுக்கையறை, தண்ணீர், மின்சாரம் மற்றும் இணைந்த குளியலறையுடன் வீடு ஒன்றும் இக் காணியில் உள்ளது.

## காணி விற்பனைக்கு

- சாவகச்சேரி, சங்கத்தானை, மீனாட்சி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் 2 1/2 பரப்புக் காணியுடன் மூன்று அறைகளைக் கொண்ட வீடும் சுற்றுமதிலுடன் பத்துக்கு மேற்பட்ட தென்னை மரங்களுடன் வீடு விற்பனைக் உண்டு.
- சாவகச்சேரி நுணாவில் சரஸ்வதி பாடசாலைக்கு அருகாமையில் 2 1/2 பரப்புக்காணி (பருத்தித்துறை வீதி) விற்பனைக்குண்டு
- நுணாவில், மட்டுவில் பகுதியில் A-9 Road இல் இருந்து 400m தூரத்தில் 61/2 பரப்புக்காணி 4 அறையுடனான வீடு விற்பனைக் குண்டு.
- சாவகச்சேரி, சரசாலை, கமலாசினி பாடசாலையிலி ருந்து 400m தூரத்தில் 10 பரப்புக்காணி விற் பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 074 239 5790
074 018 1128
0044 798 342 9645
(Athavan)

(cs 42881) (2.6)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1942 11 04
உதிர்வு 2022 01 14



அமரர்
### வேலுப்பிள்ளை பரமேஸ்வரன்

தேன் கலந்த தெள்ளமுதாய் நின்தீன்சுவை மென்பேச்சை
எங்கு நாம் இனியிப் புவிதனிற் கேட்போம்.
வான் உயரப் புகழ் கூடிவரும் போதும் வஞ்சமில்லா
உள்ளமதை நாடித்தான் இனி எங்கு போவோம்
காந்தமென கவர்ந்திழுக்கும் இருவிழிகள் கூறும்
கருணைமிகு பார்வைதனை காணவும் மாட்டோமா
கூர்மதி நிறைந்த நல் அறிவுரை செறிந்திடும்
வார்த்தையேனும் செவி வந்து சேராதோ - விழி
நீர் தழும்பி நின்றழுதோம் நினைவழியா உங்கள்
பேரலையாய் பெருகிவரும் நினைவுகளால் ஐயனே!

109/7, மனிங் பிளேஸ்
வெள்ளவத்தை.
தொ.பே.இல:- 0773504336

உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும் குடும்பத்தினர்

(aco.18159)

## நெருக்கடி தீர்ந்தபின்பே வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, பெப். 13

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட்டதன் பின்னர், வாகனங்களை மீள இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக் கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் செயற்பாடு கடந்த 2020 மார்ச் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை, அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்கான தடையை நீக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் இலங்கைக்கு கோரிக்கை விடுத்திருந்தது.

(எ-இ)

## அறைகள் வாடகைக்கு

யாழ். சீனிவாசகம் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 071 3048, 077 728 3811

## கணினி அறிவுள்ளவர்கள் தேவை

(MS-Office) கணினி அறிவுள்ள பணியாளர்கள் தேவை.
தொடர்பு: 077 7722 215

## கடை/வீடு வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தியிலிருந்து 50 m தூரத்தில் வீட்டுடன் கடை வாடகைக்குண்டு.
077 507 5487

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பத்திற்கு கொக்குவில், கோண்டாவில், இணுவில் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
077 6621 783

## பணிப்பெண் தேவை

உரும்பிராய் வீட்டில் தங்கியிருந்து குழந்தை ஒன்றை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை..
074 016 7518
070 278 1401

## AC Technician தேவை

யாழ்.K.K.S வீதியில் இயங்கும் AC Technics நிறுவனத்தில் AC வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்களும் தேவை.
077 129 8297

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் (K.K.S) 15, 12, 9 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0740 147 422

## வாடகைக்கு வீடு தேவை

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் அல்லது நல்லூர் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:
077 329 2259

## பெண் பணியாளர் தேவை

நெல்லியடி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் LOVELY Flower Center இற்கு கணினி அறிவுடைய பெண் பணியாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 400 5023

## காணி விற்பனைக்கு

சரவணை கிழக்கு சரவணையில் 13 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
077 255 0807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Visa Consul tant Services

சகலவிதமான நாடுகளுக்கும் Visa பெற்று கொடுக்கப்படும். Visaக்கு தேவையான அனைத்து ஆவணங்களும் செய்துதரப்படும்.

Whatsapp No.
075 929 2921

## பணிப்பெண் உடன்

வவுனியாவில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்குப் பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.

(cs 00965) (2.6) 077 386 4642

## வாடகைத் தாய் தேவை

திருமணமான தம்பதியினருக்கு, IVF ஊசி மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாக பெண் ஒருவர் தேவை. சன்மானம் வழங்கப்படும், இரகசியம் பேணப்படும்.

077 637 5294

## வேலையாள்கள் தேவை

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள **விருந்தினர் விடுதி** ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- விடுதி பராமரிப்பாளர் - 02
- வரவேற்பாளர் - 01

குறிப்பு: ஆங்கிலம், தமிழ், சிங்களம் சரளமாக பேசக்கூடியவர்கள் 50 வயதிற்கு உட்பட்டவர்கள் தொடர்புகொள்ளவும்.

(cs 42887) (2.6)

076 419 6187

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயு, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காளி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

**நியூ லங்கா பாம்**
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள விநியோக சேவைக்கு Sales Rep தேவை. மாதம் வருமானம் 65,000/= +

விபரங்களுக்கு:
070 374 4444, 077 473 7737

## பிரத்தியேக வகுப்புக்கள்

- ✣ **க.பொ.த.உயர்தரம்**
  **பொருளியல்** மற்றும் **வணிகக்கல்வி**
- ✣ **க.பொ.த.சாதாரண தரம்**
  **குடியியற்கல்வி** தனியாகவும், குழுவாகவும் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (cs 18675)(2.6)

077 900 7597, 077 906 4595

## காணி வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி - 3 பரப்பு 48 M
நல்லூர் வீதி - 5 பரப்பு 80 M
திருநெல்வேலி - 3 பரப்பு 44 M
முத்துமாரி அம்மன் வீதி வீடு - 2 பரப்பு 22.5M
மருதடி வீதி வீடு - 2 பரப்பு 35 M
Jaffna Town - 10 பரப்பு
Commercial Building - 150 M

காணி வீடு வாங்க விற்க Property 360 Tant Pvt
தரகர் வேண்டாம்

077 5222 613

## தேவை

கிளிநொச்சியில் உள்ள பிரபல **புடைவை வியாபார** நிறுவனத்திற்கு **விற்பனையாளர், உதவியாளர்** தேவை.

(cs 42893) (2.6) 077 260 4233

## மணமகள் தேவை

1982 ஆனி மாதம் பிறந்த தற்போது கனடாவில் B.Sc Electrical Engineering, MSc Bio Medical Engineering ஆக தொழில் புரியும் மணமகனுக்கு (8இல் பாவம் குறைந்த செவ்வாய்), ஆங்கில அறிவு பட்டப்படிப்புடைய யாழ். மீசாலைப் பகுதியில் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மண மகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முதல் தொடர்பிலேயே முழு விபரத்தையும் அனுப்பி வைக் கவும். தேவை ஏற்படின் ஜாதகம் அனுப்பி வைக்கப் படும். வெளிநாடுகளில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். **E-mail:selval2345rogers.com**

தொடர்புகளுக்கு: 077 323 6041

## விற்பனைக்கு

பிளீச்சிங் பவுடர் (குளோரின்)
விற்பனைக்குண்டு.
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- 0777 559 717 (ஜீவா) (CS 42890) 1-6

## உடனடி பயணம்



**கனடா, லண்டன்**

ஐரோப்பா நாடு ஒன்றிற்கான அவசர வேலை வாய்ப்பு

(CTC) கப்பல் பயிற்சி பெற்றவர்கள்
கப்பலில் வேலை செய்தவர்களுக்கு விசேட உடனடி
குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் உடன் பயணம்

Hotline ✆ 077 6222631

## சேவை

Royal T Construction நிறுவனம் மூலமாக யாழ்ப்பாண மண்ணில் குறைந்த செலவில் இலகுவான பண தவணை முறையில் வங்கி கடனுடன் உங்கள் கனவு இல்லத்தை அமைத்திடுங்கள்.

**Free Visiting and Estimate**
**Call: 077 5222 613**
**Royalt.lk**

(ACO 18160A) 1-6

## Show Room Administrator தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ் ஏற்றுமதி நிறுவனத்திற்கு கணினி அனுபவமுள்ள Administrator தேவை. A/L or Diploma level தகைமையுடன் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு:- 078 843 5093 (ACO 18162) 1-6

## கணக்காளர் தேவை



இங்கிலாந்தை (U.K) தலைமை
காரியாலயமாக கொண்டு
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்
Accounting Firm இற்கு
4 கணக்காளர்கள் தேவை

**தகைமை :**

**குறைந்த பட்சம் 2 வருட** UK Based Accounting Firm **இல் வேலை பார்த்த முன்னனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.**

Salary Depends on Experience and qualification. **ஆர்வமுள்ளோர் தங்கள்** 'CV' **இனை** inforpaper@protonmail.com **எனும் மின்னஞ்சலுக்கு 28.02.2022 இற்கு முன் அனுப்பவும்**

**காரியாலய இடம்: Jaffna Town** (CS 42836) (3/6)

# சிறி நாகபூஷணி கல்யாணமாலை

## மணமகள் தேவை

- ஆண் யாழ் இந்து கௌரவ குடும்பம் 1986 இல் பிறந்த திருவாதிரை நட்சத்திரம், செவ்வாய் இல்லை. பாவகிரகம் -40, A/L அரசபணி.
- ஆண் யாழ் இந்து கௌரவ குடும்பம்.1978 இல் பிறந்த பூராட நட்சத்திரம் செவ்வாய் 7 இல் 32 மொத்த பாவ கிரகம் -68 லண்டன் நிரந்தர வதிவிடம்
- ஆண் யாழ் இந்து கௌரவ குடும்பம் 1990 இல் பிறந்த அவிட்டம்-1 செவ்வாய் இல்லை, பாவக்கிரகம் -48, பிரான்ஸ் நிரந்தர வதிவிடம்.
- ஆண் யாழ் இந்து கௌரவ குடும்பம் 1989 இல் பிறந்த பூராட நட்சத்திரம், செவ்வாய் + சூரிய-12 இல் புள்ளி 8 மொத்த பாவக்கிரகம் 37.A/L,அவுஸ்ரேலியா நிரந்தர வதிவிடம்.
- ஆண் யாழ் இந்து கௌரவ குடும்பம் 1981 இல் பிறந்த பூச நட்சத்திரம் சூரிய + செவ்வாய் 2இல், பாவ கிரகம் -23 A/L அரசபணி.
- ஆண் யாழ் இந்து 1984இல் பிறந்த அச்சுவினி செவ்வாய் 12 இல் புள்ளி8, மொத்த பாவக்கிரகம் 54, B.A அரசபணி.
- ஆண் யாழ் இந்து 1983 இல் பிறந்த பூரம்,செவ்வாய் இல்லை, பாவக்கிரகம் 12,சுயதொழில்.
- ஆண் யாழ் இந்து கௌரவ குடும்பம் 1987 இல் பிறந்த பரணி சூரியன் + செவ்வாய், செவ்வாய் இல்லை, பாவக்கிரகம் 22, சுயதொழில்.
- ஆண் யாழ் இந்து கௌரவ குடும்பம் 1987 இல் பிறந்த அச்சுவினி சூரியன் + செவ்வாய் 10 இல் பாவக்கிரகம் 11, BSC அரசபணி.
- ஆண் யாழ் இந்து கௌரவ குடும்பம் 1987 இல் பிறந்த அச்சுவினி சூரியன் + செவ்வாய் 11 இல் பாவக்கிரகம் 24, B.A அரசபணி.

## மணமகன் தேவை

- பெண் யாழ் இந்து கௌரவ குடும்பம் 1994 இல் பிறந்த பூராடம் செவ்வாய் 8 இல் புள்ளி8, மொத்த பாவக்கிரகம்-16 BSC லண்டன் தேவை.
- பெண் யாழ் இந்து 1993 இல் பிறந்த திருவோணம் செவ்வாய் இல்லை பாவக்கிரகம் 20 B.A அரசபணி
- பெண் யாழ் இந்து 1989, திருவாதிரை செவ்வாய் 12 இல் புள்ளி8, மொத்த பாவக்கிரகம் 68 உத்தியோகம்/ வெளிநாடு தேவை.

**252, கச்சாய் வீதி, சாவகச்சேரி**

**தொடர்பு: 0779381324, 0775191133 Viber**

(cs.42871) (2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ச.தொ.ச.வில்...

மற்றும் பல உயர் அதிகாரிகளை, பணிஇடை நீக்கம் செய்யுமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.
அங்கு இடம்பெற்ற சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள் விசாரணைக்கு வழிவகுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
2019 ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை இடம்பெற்றதாகக் கூறப்படும் அனைத்து முறைகேடுகள் குறித்து, மூன்று அரச அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை நியமித்து விசாரணை நடத்துமாறும் அமைச்சின் செயலருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-ஒ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1947



மறைவு 12 . 02 . 2022

### சின்னவன் நாகராசா (தேவன்)

ஆத்திசூடி வீதியினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் நாகராசா (தேவன்) அவர்கள் நேற்று (12.02.2022) சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னவன் அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், துரைமணியின் அன்புக் கணவரும் தனேன்திரன் (பிரான்ஸ்), நந்தசுயா, சுஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், கஸ்தூரி, யோகேஸ்வரன், தன்ஸிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தஸ்வின், அபினாஸ், கம்சிகா, யோஸ்மிதன், நஸ்மிதன், ரஸ்மிதன், சுவான் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற இராசையா, நடேசு மற்றும் சேனாதிராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற வரதராணி, தம்பித்துரை மற்றும் செல்வராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 18552)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 10 . 1987



மறைவு 10 . 02 . 2022

### மகாலிங்கம் சபேசன்

**(IT Support Lead MAS Holdings)**

மூத்தநயினார் வீதி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சபேசன் (IT Support Lead MAS Holdings) அவர்கள் கடந்த (10.02.2022) அன்று கொழும்பில் காலமானார்.
அன்னார் செல்லப்பா மகாலிங்கம் (இளைப்பாறிய திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), செல்வராணி (மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்) ஆகியோரின் அன்புப் புதல்வனும், சுலக்சியின் (பொறியியல் பீட மாணவி, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) அன்புக் கணவரும், கவினின் அன்புத் தந்தையும், கல்யாணியின் (ஆசிரியர், யா/சென். ஜோன்ஸ் கல்லூரி) சகோதரனும், சசிதரன் (விசாரணை அலுவலர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), சுறாஜ் (சுவிஸ்), சுமித்தா (விரிவுரையாளர், கொட்டகலை ஆசிரியர் கலாசாலை), நித்திலா (கனடா), அபிரூபன் ( இந்தியா) ஆகியோரின் மச்சானுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் எற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 18640) 1/6

## மரண அறிவித்தல்

### திருமதி. ஏரம்பமூர்த்தி தங்கம்மா



மீசாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.ஏரம்பமூர்த்தி தங்கம்மா அவர்கள் நேற்று (12.02.2022) சனிக் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சங்கீதபூஷணம் அ.கி ஏரம்பமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு- வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி- தங்கம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நல்ல தம்பி, தாமோதரம்பிள்ளை, நல்லம்மா கிருஷ்ணசாமி மற்றும் செல்லம்மா (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும் கிருஷ்ணகுமாரி(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் .வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி), இளங்கோ (ஆயுர்வேத வைத்தியர்-Swiss), கீதவல்லி, புனிதகுமாரி (சங்கீத ஆசிரியஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி), விமலகுமாரி (நடன ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), இளமுருகன் (Software QA Consultant, U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வித்தியானந்தன் (ஓய்வுநிலை நூலகர், ஜெயலக்ஷ்மி (Swiss), ஈழநேசன் (உதவி மாவட்ட ஆணையாளர் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், யாழ் மாவட்டம்), காலஞ்சென்ற ஶ்ரீரவிகுலன், வனிதா (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் பரதன் (பரதன் ஸ்ரூடியோ, மீசாலை) விசாகன் (தொ.நு உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), சொரூபினி, ராகவன், வானதி (Head of cultivation of medicinal plants-Swiss), ஆதவன் (Swiss), சேயோன் (விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி), வித்தகி (கலைப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்), கிரிபரன் (பொறியியலாளர், Singapore), ஜனார்த்தனன் (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், சாவகச்சேரி), ஶ்ரீபிரணவன், அக்சதன் (U.K), ஆதித்தியன் (U.K) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பி.ப 1.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தகிரி, காளிகோவில் வீதி,
[illegible] மேற்கு, மீசாலை.
இளங்கோ (மகன்)-0041764112021
இளமுருகன்(மகன்)-00447949763425

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரத்துறையினர்...

போதனா மருத்துவமனை முன்பாக நேற்று மதியம் கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 500 பேர் வரையில் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

சம்பள முரண்பாடு உள்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட் கிழமையிலிருந்து சுகாதாரத்துறையைச் சேர்ந்த 18 தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. இந்தத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளாலேயே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக நேற்று மதியம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(ஒ-5-20-125)

## சுவருடன்...

வீட்டுச் சுவருடன் மோதி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அராலி செட்டியார் மடம் பகுதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உடையார்கட்டு விசுவமடு பகுதியை சொந்த இடமாகக் கொண்ட, வட்டு மேற்கு வட்டுக்கோட்டை பகுதியில் வசித்து வந்த கந்தசாமி நிரோஜன் (வயது - 22) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அல்பினோ வசந்த் (வயது - 20) என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து நிகழ்ந்த இடத்தில் ஆபத்தான வளைவு உள்ளது. வீதி அபிவிருத்தி நிறைவடைந்த நிலையில் வீதியில் போடப்பட வேண்டிய எல்லைக்கோடு இன்னமும் போடப்படவில்லை என்று மக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர். மேலும் குறித்த இடத்தில் வேகக் கட்டுப்பாட்டு தடை போடப்படவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ-ஒ-125)


## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு (CIDA Grade C4) பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிவரக் கோவையுடன் 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

1.Accountant (Degree, HNDA, AAT or Equivalent with Experience)

2. Office Assistant (A/L any subject, Age below 25yrs with Driving licence & Computer knowledge

முகவரி : இல.09, நந்தாவில் வீதி, தாவடி.

Email:-vacancynsc@gmail.com

CS 1864331-6

## உடனடி வேலைவாய்ப்பு

### எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு

- **Sales Manager - 02 (Kilinochchi, Mannar)**
  - கிளிநொச்சி, மன்னார் வதிவிடமாக இருத்தல் அல்லது மன்னார் சென்று வரக்கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது.
  - கணக்கியல் பட்டதாரிக்கு முன் உரிமை வழங்கப்படும்.
- **Laptop/ Computer Hardware Technician** (02 - Jaffna)
- **Accountant (Credit Manager) - 01**
  பட்டதாரிக்கு முன் உரிமை வழங்கப்படும்.
- **Hardware Technician - 02** (Mannar, Kilinochchi)

மேலும் EPF, ETF வழங்கப்படும். தங்களது தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும்.

தங்களது விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

தபால் மூலம்

194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**Email - info@nit.lk**

**Contact No - 077 542 7426**

NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North

## வீடு வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி, பலாலி வீதியில் (தினேஸ் வெதுப்பகம் அருகாமை) சகல வசதிகளுடனான வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

வாகனத்தரிப்பிட வசதியுண்டு. (அலுவலக உபயோகம் விரும்பத்தக்கது)

தொடர்பு: **077 888 5622**

(CS 186649)1-6

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 03 1962

மறைவு 13 02 2021

### ஞானமுத்து அலன்றோஸ் (அலன்)

குடும்ப குலவிளக்காய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள்
அன்பு நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தபாற்கந்தோர் அருகாமை,
யோகபுரம், மல்லாவி.

நினைவுகளுடன்..
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திரு.சின்னத்தம்பி பாலசிங்கம்

வேலணை வடகிழக்கு சாட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி பாலசிங்கம் அவர்கள் கடந்த (09.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சாட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், சரவணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி சிவகாமி தம்பதியரின் மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், வதனஜோதி (கொலண்ட்), கிருபாகரன் (பிரதேச சபை - வேலணை), சந்திரவதனி, மதிகரன் (நீர் வழங்கல் வடிகால் சபை - வேலணை), வதனகரன் (பிரான்ஸ்), ஜெயபாலினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு தகப்பனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**076 9736 659**
வேலணை வடகிழக்கு,
முதலாம் வட்டாரம், சாட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் சிவசம்பு

**(K.V.S பல்பொருள் வாணிபம்)**

யாழ். காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும், தற்போது அல்லாரை வடக்கு மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவசம்பு அவர்கள் கடந்த (11.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா (சோமர்) மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, நமசிவாயம், கந்தசாமி, பரமசாமி, சிவபாக்கியம், பொன்னம்மா மற்றும் தர்மலிங்கம், தம்பிராசா, தம்பிஐயா, பரஞ்சோதி ஆகியோரின் சகோதரரும், சிவராசா (லண்டன்), சிவகௌரி (அவுஸ்திரேலியா), சிவநேசராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணமாலா, சிவகுமார், அஜந்தினி (சுதா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சகானா, கஜானன், கஜலினி, விகிர்தன், தர்மேந்திரா, அனோஜா, அபிராமி, சாயுசன், சாத்வி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கச்சாய் எரியால்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
மீசாலை.

தகவல்: குடும்பத்தினர்.
**077 796 4701**

(CS 18650) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளங்களைச்...

எதிர்ப்பு தெரிவித்து கொக்கிளாய் கிராம மக்களால், கொக்கிளாய் இல்மனைட் கூட்டுத்தாபன பொறித்தொகுதிக்கு முன்னால் நேற்று எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு கொக்கிளாய் கிராம மக்கள் 16 பேருக்கு சொந்தமான 44 ஏக்கர் உறுதிக் காணிகள் மற்றும் அனுமதிப்பத்திரக் காணிகளை மக்களின் அனுமதியின்றி அபகரித்து, வேலி அமைத்து, கொக்கிளாய் இல்மனைட் பொறித்தொகுதி அமைக்கப்பட்டிருந்தது. இதன் பின்னணியில் கைத்தொழில் அமைச்சின் கீழான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் என்ற அரச நிறுவனம் செயற்பட்டிருந்தது. இந்த நிலையில், குறித்த நிறுவனம் தனது செயற்றிட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கோடு கொக்கிளாயிலிருந்து செம்மலை கிழக்கு வரையான தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக நிலங்களை அளவீடு செய்து கையகப்படுத்தும் நடவடிக்கையை கடந்த சிலவாரங்களாக இரகசியமாக முன்னறிவித்தல் எதுவுமின்றி முன்னெடுத்து வருகின்றது.

இதன் முதற்கட்டமாக கொக்கிளாய் கிராமத்தில் கடந்த காலபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்கள் மேட்டுக்காணிகள், குடியிருப்பு நிலங்கள், சேமக்காலை, குளம் போன்றவற்றை உள்ளடக்கி அளவீடுகளை மேற்கொண்டு எல்லைப்படுத்தும் நடவடிக்கையை நில அளவை திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இந்த நில அளவை நடவடிக்கை தற்போது கரையோரமாக கொக்குத்தொடுவாய் கிராமம்வரை இடம்பெற்றுள்ளதோடு எதிர்காலத்தில் கடற்கரையோரத்திலிருந்து சுமார் 600 மீற்றர் அகலமும் 12 கிலோமீற்றர் நீளமும் கொண்ட தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை உள்ளடக்கி விஸ்தரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அளவீடு செய்யப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை கையகப்படுத்துவதை நிறுத்துமாறும், சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் வண்ணம் மேற்கொள்ளப்படவிருக்கும் இல்மனைட் அகழ்வுத் திட்டத்தை நிறுத்துமாறும் கோரி, கொக்கிளாய் எல்லை கிராம மக்கள் எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கொக்கிளாய் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்த இந்த எதிர்ப்பு போராட்டம் அபகரிக்கப்பட்டுள்ள நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள இல்மனைட் பொறித்தொகுதிவரை சென்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்ட 'மக்கள் எமது நிலமே எமது உரிமை, கொக்கிளாய் எமது பூர்வீகம், கனிய மணல் அகழ்வு எனும் போர்வையில் காணி பறிக்கவா இந்த திட்டம், நிலமிழந்துபோனால் பலமிழந்துபோவோம், வளங்களை சுரண்டிவிட்டு எங்கள் நிலங்களை பறிக்கவா இந்த நாடகம்' போன்ற கோஷங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கொக்கிளாய் பங்குத்தந்தையர்கள், பொத்துவில் தொடங்கி பொலிகண்டி பேரெழுச்சி இயக்கத்தை சேர்ந்த வேலன் சுவாமி, பொதுமக்கள், ஆர்வலர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர். (அ-ஒ-இ)

## போராட்டத்திலிருந்து...

தர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

7 கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்பில் தாம் தொடர்ந்தும் பங்குகொள்ளப்போவதில்லை என்று சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார். ஆயினும் ஏனைய 17 தொழிற்சங்க உறுப்பினர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடரவுள்ளதாக அவர் கூறினார். (அ-ஒ-இ)

## சுகாதார...

பொல்லுகளைப் பயன்படுத்தவேண்டும் என்று ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆராச்சி தெரிவித்துள்ளார்.

'அரசியல் கட்சிகள் குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள, கட்சிகளின் அனுசரணையில் நடக்கும் தொழிற்சங்கப் போராட்டங்கள் காரணமாக பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் விஜித ஹேரத் மீது நடத்தப்பட்ட முட்டைத் தாக்குதல் மற்றும் கல்வீச்சு தாக்குதலுக்கு இணையான தாக்குதலை போன்று போராட்டக்காரர்களுக்கு எதிராக பொல்லுத் தாக்குதலை நடத்த வேண்டும். மக்கள் தமது அதிருப்தியை வெளிக்காட்ட இருக்கும் ஒரேவழி பொல்லுத் தாக்குதலே. அரசியல் கட்சிகளின் உதவியை பெறும் தொழிற்சங்கங்களுக்கு அரசுடன் பிரச்சினைகள் இருந்தால், மக்களை சிரமத்துக்கு உள்ளாக்காது பேச்சு நடத்தி, பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும்' - என்றார். (ஒ-இ)

## கொழும்பின்...

மறைக்கும் வகையில் மீண்டுமொரு ஆட்சி மாற்றத்தை நோக்கிய செயற்பாடுகளை கொழும்பைத் தளமாகக் கொண்ட அமைப்புக்கள் சில மேற்கொண்டு வருவதாக உலகத் தமிழர் இயக்கத்தின் சர்வதேச இணைப்பாளர் பொஸ்கோ குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் 'உதயன்' பத்திரிகைக்கு அவர் தெரிவித்ததாவது:-

2015 ஆம் அண்டில் எவ்வாறான சூழல் இருந்ததோ அதேபோன்றதொரு சூழலே தற்போதும் காணப்படுகின்றது. மேற்குலக நாடுகள் இலங்கைத் தீவில் மீண்டுமொரு ஆட்சிமாற்றத்தை நோக்கிய நாடகத்தை அரங்கேற்ற தொடங்கியுள்ளன.

தமிழின அழிப்பை மூடிமறைக்கும் வகையில் வழமைபோல பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைத் தீவில் ஆட்சிமாற்றத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளனர். கொழும்பைத் தளமாக கொண்டியங்கும் அமைப்புக்களுடன் இணைந்து ஒரு பிரதான தமிழ்க் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் இந்த நிகழ்ச்சி நிரலில் செயற்படத் தொடங்கியுள்ளார்.

இலங்கை மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுக்கான பொறிமுறைகளை கையாளும் பொறுப்பை பிரிட்டன் மற்றும் கனடாவிடம் மேற்குலக நாடுகள் ஒப்படைத்திருக்கின்றன. இந்த நாடுகள் ஒரே விடயத்தை இரண்டு விதமாக கையாளுகின்றன.

மியான்மரின் ரோஹிங்கியா மக்களின் அமைப்புக்களுக்கு தேவையான பொருளாதார ஆதரவுகளை வழங்கி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குகளை பதிவு செய்வதற்கு பெரியளவில் ஆதரவு வழங்கியுள்ளன.

**இரட்டை வேடம்**

ஆனால், எங்களுடைய விடயத்தில் மாத்திரம் ,தமிழர்கள் மத்தியிலும் தமிழர் பிரதி நிதிகளை சந்திக்கும்போது மாத்திரம் நாங்கள் உங்களுக்கு ஆதரவு, நாங்கள் உங்களுடைய தைப்பொங்கலை கொண்டாடுகிறோம் என வேட்டி கட்டிக் கொண்டு கனடா அதிபர் பொங்கல் கொண்டாடும் அளவுக்கு நிலமை இருக்கிறது.

இவ்வாறான வெளிப்பாடுகள் ஊடாக தமிழர்களை நவீன ரீதியாக ஏமாற்றும் உத்தியை இந்த நாடுகள் கையிலெடுத்திருக்கின்றன.

தமிழர்களுக்கு நடைபெற்ற இன அழிப்புக்கான நீதிக்கான பொறிமுறையை இந்த நாடுகள் முன்னெடுக்கவில்லை. கடந்த 6 வருடங்களாக ரோஹிங்கியா மக்களின் பிரச்சினையை, பிரிட்டன் மற்றும் கனடா போன்ற நாடுகள் அவர்கள் சார்ந்த அறிக்கைகளை வாசிக்கும் போது அதில் ரோஹிங்கியா மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் எனவும், அவர்களுடைய தாயகமான ராங்கூனுக்குள் பாதிக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

ஆனால், இலங்கை தொடர்பான கலந்துரையாடல்களை எடுத்துக்கொண்டால் அதில் பாதிக்கப்பட்டவர்கள் யாரென்பதையும் அவர்கள் எங்கே பாதிக்கப்பட்டார்கள் என்பதனையும் குறிப்பிடவில்லை. தமிழர்கள் ஈழத்தில் பாதிக்கப்பட்டார்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக இலங்கையில் சமுதாயங்கள் பாதிக்கப்படுகின்றன என ஏமாற்றும் விதமாக பேசுவதோடு விட்டுவிடுகிறார்கள்.

இதேவேளை இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கைக்கான தரவுகளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் சமர்ப்பிப்பதற்கு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரை கால அவகாசம் இருந்தது.

**காலதாமதம்**

ஆனால், தமிழ் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்புகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் போன்ற தமிழர் தரப்பிலிருந்து எவ்வித அறிக்கைகளோ? முறைப்பாடுகளோ? தமக்கு கிடைக்கவில்லையென மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் குழுவினர் என்னிடம் தெரிவித்தனர். இம் முறை கூட்டத்தொடரிலும் 21 விசேட பிரதிநிதிகள் தமது துறைசார்ந்த ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளனர். இவர்களுக்கான தரவுகளையும் மேற்குறிப்பிட்ட தமிழர் தரப்பினர் அனுப்பிவைக்கவில்லை. இவர்களின் அறிக்கைகள் ஆணையாளரின் அறிக்கையில் தாக்கம் செலுத்துவது குறிப்பிடத்தக்கது.

வழமை போன்று தமிழர் தரப்பினராகிய நாம் உரிய செயற்பாடுகளை உரிய காலத்தில் முன்னெடுக்காமல், ஐ.நா. விடம் இருந்து பலமான அறிக்கைகளை எதிர்பார்க்க முடியாது.

கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் சிங்கள அமைப்புகள் மற்றும் முஸ்லிம் அமைப்புகளுடன் வெளிநாடுகளில் இயங்கும் அவர்களின் அமைப்புகளும் சிறுசிறு விடயங்களைக்கூட பூதாகரமாக்கி ஐ.நா.வுக்கு அறிக்கை அனுப்புகின்றன. குறிப்பாக பல அறிக்கைகளில் மதம் சார்ந்த சமூகங்கள் பாதிக்கப்பட்டன என குறிப்பிட்டு சொல்லப்பட்ட அளவுக்கு இந்த நூற்றாண்டின் மாபெரும் மனிதப் பேரவலமான தமிழின அழிப்பு குறித்து எங்கும் சுட்டிக்காட்டப்படவில்லை.

**நடவடிக்கை எடுத்தோம்**

கடந்த வருடம் 46ஆவது கூட்டத்தொடரில் ஆணையாளரின் அறிக்கையில் மட்டுமே முதற்றடவையாக தமிழர்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு 2020 ஆண்டில் ஆணையாளரின் குழுவினர் மற்றும் விசேட பிரதிநிதிகளுக்கு தாயகத்தில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நாம் அதிகமான தகவல்களை வழங்கியதே காரணமாகும்.

இந்தக்கூட்டத்தொடரை முன்னிட்டு நாம் பல்வேறு செயற்பாடுகளை கடந்த வருடத்தில் இருந்தே முன்னெடுத்து வருகின்றோம். தாயகத்தில் கடந்த வருடம் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் பல முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தோம். அத்துடன் கூட்டத்தொடருக்கான பல எழுத்துமூல அறிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளோம். இதில் சிறப்பம்சமாக ஐ.நா.வின் அங்கீகாரம் பெற்ற அமைப்புக்களுடன் இணைந்து ஒரு எழுத்துமூல அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளோம் - என்றார். (அ-ஒ-7)

## 90மில்லி...

வளிமண்டலவியல் திணைக்களத்தின் யாழ். பிராந்திய பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை 60.8 மில்லி மீற்றரும், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை 8.7 மில்லி மீற்றரும், நேற்றுச் சனிக்கிழமை 19.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. இதேவேளை - பருத்தித்துறை பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை 78.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. கடந்த மூன்று நாள்களில் இதுவே ஆகக்கூடிய மழை வீழ்ச்சியாகும். (அ-ஒ-23-125)

## அத்தியாவசிய...

காரணமாக, மருத்துவமனைகளுக்குச் சிகிச்சைகளுக்காக சென்ற நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஜனாதிபதி செயலர் காமினி செனரத்தின் கையொப்பத்துடன், நேற்றுமுன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில், மருத்துவ சேவைகள் மற்றும் மின் விநியோகம் என்பன அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மின்சார விநியோகம், மருத்துவமனைகள், சிகிச்சையகங்கள், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பரமாரிப்பு மற்றும் வரவேற்பு, உபசரிப்பு, சிகிச்சை ஆகியவை தொடர்பில் ஆற்றப்படவேண்டிய அனைத்து - அவசியமான அல்லது தேவைப்படும் தேவைகள் மற்றும் பணிகள் என்பன அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆயினும், தங்களின் கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கும் வரையில், பணிப்புறக்கணிப்பு தொடரும் என சுகாதார தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## வேம்பு...

வேலையை சீருடையினர் மேற்கொண்டுள்ளனர்.

13 ஆம் கட்டைச் சந்தி என்று தமிழ் மக்களால் அழைக்கப்பட்டு வந்த இந்தச் சந்தி இப்போது படையினரால் 'ஹாகம்பகஸ் ஹந்தி' என பெயர் மாற்றப்பட்டு அழைக்கப்பட்டு வருவதோடு அந்தச் சந்தியை சூழவுள்ள அனைத்து பகுதிகளிலும் 3 படைமுகாம்கள் கடந்த 10 வருடத்துக்கு மேலாக அமைக்கப்பட்டு காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

இது கொக்குத்தொடுவாய் கிராமத்துக்கு மிக அண்மையாகவுள்ள பகுதியாக இருப்பதோடு, இதனைச் சூழவுள்ள பல காணிகள் , வன திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ,கனிய மணல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றால் ஏற்கனவே அபகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் செழிப்பாக நின்ற வேப்ப மரத்தைவெட்டி அகற்றிவிட்டு, அரச மரத்தை நாட்டி வளர்ப்பது எதிர்காலத்தில் அந்த இடத்தில் புத்தர் சிலை வைப்பதற்கான முன்னாயத்தமாக இருக்குமோ என்று பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபோக...

அதிகாரி ஒருவரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையான சிறுபோக காலப்பகுதியில், நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் உரிய விளைச்சலைப் பெற்றுக்கொள்ளல் என்பன இதன் நோக்கமாகும் என்று அவர் தெரிவித்தார்.

இதன்படி, கமநல சேவை மத்திய நிலையம் மற்றும் மாவட்ட குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், அதன் ஒருங்கிணைப்பு பணிகளுக்காக, அனைத்து மாவட்டங்களுக்கும் இராணுவ அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

(ஒ-இ)

**ENGLISH CLASSES**
யாழ்நகரில் தனி வகுப்புகள்
Grade 7 - (G.C.E.) O/L - A/L Graduates
தொழில்புரிவோர் சரளமாக ஆங்கிலம் பேசவும், எழுதவும்
G.C.E. O/L - English Literature
K.Ganesh B.A
077 766 8725 (cs 18385) (2.6)

**தேவை**
கொக்குவில் பிரதேசத்தில் அமைந்துள்ள
மருந்தகம் ஒன்றிற்கு
அனுபவமுள்ள
பெண் உதவியாளர் தேவை.
(சம்பளம்: 20000 - 30000)
077 950 7546 (cs 42842) (2.6)

**மணமகள் தேவை**
ஜேர்மனை வதிவிடமாகக் கொண்ட கீரன் வயது - 30 (Engineering Diploma) யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு படித்த நற்குணமுள்ள அழகான பெண்ணை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு: 0049 160 9239 7341 (cs 42735) (2.6)

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1992, திருவோணம், 7 செவ்வாய்,கி.பாவம் 26 1/2, அரச உயர் பதவி மணமகனுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
077 446 9545 (cs 37546) (2.6)

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் பகுதியில் 2 பரப்பு 3 குழியில் அமைந்துள்ள புதியதாக திருத்தவேலை செய்யப்பட்ட வீடும் சுற்றி நான்கு பக்கமும் மதிலும், 2 குளியலறைகளும் உண்டு.
வாங்குவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்.
077 704 4073, 077 387 7660
தரகர் தேவையில்லை (cs.18385) (2.6)

**பணியாளர் தேவை**
யாழ். அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கி வரும் பிரபல தொழிற்சாலைக்கு கீழ் வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. இயந்திர இயக்குனர் (Machine Operator)
2.பயிலுனர் (Trainee Machine Operator) முன்னனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும் மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு : 0777159640 (cs.41964) (2.6)

**வேலையாட்கள் தேவை**
அச்சுவேலியில் இயங்குகின்ற தொழிற்பேட்டை நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- இயந்திர இயக்குனர் (Exquder Machine Operator)
- உதவியாளர் (Assisstant)
வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு.
(CR 37485) (3/6) 077 310 7823

**மணமகள் தேவை**
1984 ஆம் ஆண்டு அத்தம் நட்சத்திரத்தில் பிறந்த அரச உத்தியோகம் செய்யும் திருமணப் பதிவுடன் விவாகரத்தான மணமகனுக்கு மணமகள் தேவை. (cs 42863) (2.6)
077 193 0298

**பனை, வேம்பு விற்பனைக்கு**
9 பனைகள் நூறு வயதிற்கு மேற்பட்டது. பூவரசு 4 1/2 அடி சுற்று, இரண்டு வேம்பு 6, 6 1/2 சுற்று கொண்டது விற்பனைக்குண்டு. (cs.42870) (2.6)
புத்தூர் மேற்கு 076 206 1693

**காணி விற்பனைக்கு**
கொக்குவில் புகையிரத வீதியில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. (cs.41700) (2.6)
077 190 9253

**கணினி இயக்குநர் (பெண்) தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடமாகாணத்திற்கான Distributor ஒன்றிற்கு கணினி அனுபவம் உள்ள பெண்ணும், அலுவலக உதவியாளர் (பெண்) ஒருவரும் தேவை.
074 016 7518 / 076 075 5922

**மணமகன் தேவை**
கௌரவ குடும்பம் 1990, கேட்டை 7 இல் செவ்வாய் உயரம் 5'7" பாவம் 25 B.Com,HNDM, கொடிகாமம் அரச தொழில் D.O, பொருத்தமான மணமகன் தேவை. (cs 18636) (2.6)
077 899 9308

**VACANCY**
Vacancy available for Night Receptionist at Venus Speciality Hopital (Male / Female)
- Attractive Salary will be offered
- Interested candidates can send their CV to the below mail address.
venushos136@gmail.com
Contact 076 255 5529/ 077 212 3486
136, Palaly Road, Kantharmadam, Jaffna. (AS 18641) 1-6

**ICT Classes**
தரம் - 6 முதல் A/L வரையான மாணவர்களுக்கான வகுப்புக்கள் நேரில் Zoom செயலி மூலமாக பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும். (cs 42891) (2.6)
074 264 0468

**காணி விற்பனைக்கு**
இல.450, கஸ்தூரியார் வீதியில் 01 பரப்பு 8 குழியுடன் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு. வர்த்தக நோக்கத்திற்கு உகந்தது.
விலை (மூன்றரைகோடி).
விலை பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு:
077 220 8432, 077 390 2994 (CS 42897) 1-6

**காணி விற்பனைக்கு**
யாழ். சாவகச்சேரி நகரத்தில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A-9 வீதியில் இருந்து 200 M தூரத்தில். பஸ் நிலையத்தி லிருந்து 300 M தூரம், ரெயில்வே ஸ்ரேசனில் இருந்து 150 M தூரத்தில்.
தொடர்புகளுக்கு:
077 6585 999
076 6583 621

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 54 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
நிலப்பரப்பு
A-32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்.
பயன்தரும் 250 தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்). பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 350,000/=
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 814 7389
077 117 8578

**அறை வாடகைக்கு**
யாழ்ப்பாணம் கச்சேரி அருகில் நவீன வீட்டில் தனித்தனியே கழிப்பறை, குளியலறை வசதிகளைக்கொண்ட ஒரு விசாலமான அறை வாடகைக்கு உண்டு. அரச, தனியார் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
அறை வாடகை ரூபா - 4500 /= (cs 18636) (2.6)
076 902 3732

**காணி விற்பனைக்கு**
யாழ். சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் பிரதான வீதியிலிருந்து 2ஆம் காணி 5 1/2 பரப்புக் காணி 2 பரப்பாகவும். 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 700M தூரம்.
தொடர்புகளுக்கு:
077 911 6983
077 288 0152

**உடனடி வேலை வாய்ப்பு**
- அலுவலக உதவியாளர் - பெண் (சந்தைப்படுத்தல் துறையில் அனுபவம்)
- மில்வேலை தெரிந்தவர்கள்
- Mixture Company பணியாளர்
- Video Editor - ஆண்கள்
- புடைவை வியாபார அனுபவமுள்ளவர்கள் (cs 18616) (2.6)
077 408 8241, 076 674 3807

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
A-32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 300,000/=
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 814 7389
077 117 8578

**வீடு வாடகைக்கு**
கச்சேரியில் யாழ். செயலகத்திற்கு ஒரு நிமிட நடை தூரத்தில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
மூன்று அறைகள்.
இரண்டு வரவேற்பறை, சமையலறை, Toilet. அரச அல்லது தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (cs 42866) (2.6)
தொடர்பு: 077 142 2846

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

பாஞ்சாலி துகிலுரிந்த நாளில்
பதறித்துணி தந்தீர் அவள் மேலில்
ஏஞ்சாமி எங்குபோனீர்
எம்பெண்டிர் ஆடையின்றி
மாய்ந்தாரே முள்ளிவாய்க் காலி

சிவசேகரன், (ஒரு கூடை குறும்பூ)

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | மாசி 1 | ஞாயிற்றுக்கிழமை (13.02.2022) | சிகரம் : 86



# ஈழத்தமிழ் நோக்குநிலையிலிருந்து இந்தியாவை அணுகுதல்..!

○ நிலாந்தன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் "நாங்களும் இந்தியாவின் தலையீட்டைக் கோரித்தான் நிற்கிறோம்" என்று கூறுகிறார். அவருடைய கட்சி, கிட்டுப் பூங்காவில் ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனத்திலும் இந்தியா ஒரு நட்பு சக்தி என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தியத் தலையீட்டைக் கேட்பதுஎன்றுமுடிவெடுத்தால்ஆறு கட்சிகளின் கூட்டு அழைத்தபோது அதில் இணைந்து கூட்டுக் கோரிக்கையின் வடிவத்தை மாற்றியிருந்திருக்கலாந்தானே? மேலும், 13 க்கு எதிராக அந்தக்கட்சி மக்கள் மத்தியில் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்துப் பார்த்தால் அந்தக்கட்சி உண்மையாகவே இந்தியாவின் தலையீட்டைக் கோரி நிற்கின்றதா? என்ற சந்தேகமே எழுகிறது.

எனினும், கடந்த புதன்கிழமை மீனவர்களின் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அந்தக்கட்சி கொண்டுவர இருந்த ஒத்திவைப்பு பிரேரணையை, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் வேண்டுகோளை ஏற்று அக்கட்சி கையாண்ட விதம் 'பொசிற்றிவ்' ஆனது.



13 ஆவது திருத்தத்தை எதிர்ப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக இந்தியாவுக்கு எதிராகத் தான் அமையும். ஏனென்றால் கடந்த 34 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா 13 ஆவது திருத்தத்தை ஒரு வாய்ப்பாடு போல சொல்லிவருகிறது. எனவே தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு தீர்வை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா முன்வைக்கும்போது அதை எதிர்ப்பவர்கள் தவிர்க்கவியலாதபடி இந்தியாவையும் எதிர்க்கவேண்டித்தான் இருக்கும். ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் அதற்காக இந்தியா ஒரு பகைநாடா என்பதுதான்.

கிட்டுப் பூங்கா பிரகடனம் இந்தியாவை ஒரு நட்புநாடாக சித்தரிக்கிறது. ஆனால், ஈழத்தமிழர்கள் இந்தியாவை நட்பு நாடாகப் பார்த்து அதை நம்பவும் தேவையில்லை, பகை நாடாகப் பார்த்து அதை எதிர்க்கவும் தேவையில்லை. அதை தமது நோக்குநிலையிலிருந்து கையாள்வதே பொருத்தமாக இருக்கும். அதற்குப் பெயர்தான் இராஜதந்திரம். இந்தியாவை ஒரு நட்பு நாடாக நம்பினால் அதன் விளைவாக இந்தியாவின் மீது நம்பிக்கைகளை முதலீடு செய்யவேண்டியிருக்கும். அதுதான் முதலாம் கட்ட ஈழப்போரின் போது நடந்தது. ஆனால் இந்தியா ஒரு பேரரசு. அது ஈழத்தமிழர்களை அதன் பேரரசு நலன்களின் அடிப்படையில்தான் அணுகும். எனவே இது விடயத்தில் நட்பு- பகை என்பதெல்லாம் கிடையாது. நலன்சார் பேரம் தான் உண்டு. இந்தியா நட்பு-பகை என்ற இருமைகளுக்கு அப்பால் கையாளப்பட வேண்டிய ஒரு பிராந்தியப் பேரரசு என்ற அடிப்படையில் பொருத்தமான ஒரு வியூகத்தை வகுப்பது தான் சரியாக இருக்கும்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் இந்தியாவைக் குறித்து ஒருவித கறுப்பு-வெள்ளை சிந்தனைதான் உண்டு. ஒன்றில் இந்தியாவை நேசிக்கிறார்கள், அல்லது இந்தியாவை வெறுக்கிறார்கள். இரண்டுக்குமிடையே இந்தியாவை புத்திசாலித்தனமாகக் கையாளவேண்டும் என்ற நோக்குநிலை ஈழத்தமிழர்கள் மத்தியில் மிகவும் பலவீனமாகவே காணப்படுகிறது.

ஈழத்தமிழர்கள் இந்தியாவை ஒரு நட்பு நாடாக பார்க்கும் நிலைமை எங்கிருந்து உற்பத்தியாகிறது? அது தமிழகத்தை மையமாக வைத்து சிந்திக்கும்போது தான் உற்பத்தியாகிறது. கடலால் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழகம் மொழியால், இனத்தால், பண்பாட்டால் ஈழத்தமிழர்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு நிலத்துண்டு. எனவே தமிழகத்துக்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையில் உள்ள இந்தப் பிணைப்பை-கனெக்டிவிற்றியை-வைத்துக் கொண்டு இந்தியாவை ஈழத்தமிழர்கள் பார்க்கிறார்கள்.

தமிழகம் எனப்படுவது கூட ஒற்றைப்பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு சனத்தொகையோ, நிலப்பரப்போ அல்ல. அது பல அடுக்குகளைக் கொண்டது. அங்கே ஆளுங்கட்சி உண்டு. ஏனைய கட்சிகள் உண்டு. ஈழ அபிமானிகளாகக் காணப்படும் கட்சிகள் உண்டு. ஈழ உணர்வாளர்கள் உண்டு. இவை தவிர தமிழகத்தின் பொதுசனம் உண்டு. இதில் தமிழகத்தின் ஆளும்கட்சி இந்திய சமஷ்டி கட்டமைப்புக்கு கட்டுப்பட்டது.

அது இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள் கையை மீறி ஈழத்தமிழர்களுக்காக முடிவெடுப்பதில் வரையறைகள் இருக்கும். ஏனைய கட்சிகளும் கூட ஈழத்தமிழர்களின் விவகாரத்தை தமது தேர்தல் அரசியல் நோக்கு நிலையிலிருந்தே அணுகும். இதுவும் ஈழத்தமிழர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. ஆனால் ஈழத்தமிழர்களின் நெருங்கிய நண்பர்களாக காணப்படும் கட்சிகளும் அரசியல்வாதிகளும் உணர்வாளர்களும் தேர்தல் மைய நோக்கு நிலைகளுக்கு அப்பால் ஈழத்தமிழர்களுக்காக அர்ப்பணிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இது ஒரு சிறுதொகை. இதுதவிர தமிழகப் பொதுசனங்கள் ஈழத்தமிழர்களுக்கு ஏதும் நடந்தால் கொதித்து எழுவார்கள். ஆனால் அந்தக்கொதிப்பை மடைமாற்றவும் திசைதிருப்பவும் தலைவர்களால் முடியும். இது தான் தமிழகம். எனவே தமிழகத்தை தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக் கூடாது.

தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான இன,மொழி உறவை அடிப்படையாக வைத்து இந்தியா ஈழத் தமிழர்களின் விவகாரத்தில் தலையிடுகிறது என்ற ஒரே காரணத்துக்காக ஈழத்தமிழர்களின் விவகாரத்தை இந்தியா தமிழகத்துக்கு ஊடாகத் தான் பார்க்கும் என்றோ, அல்லது இனமான உணர்வுக்கூடாகத்தான் அணுகும் என்றோ எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கையை அவ்வாறு விளங்கிக்கொள்ளவும் கூடாது.
ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கை அதன் அரசியல் பொருளாதார இராணுவ நலன்களின் அடிப்படையில் தான் வடிவமைக்கப்பட்டிருக்கும். அயல்நாடுகளுடனான உறவும் அவ்வாறுதான் அமையும். புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவும் அப்படித்தான். எனவே அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார், நலன்சார் உறவுகளின் அடிப்படையில்தான் இந்தியா, இலங்கையை அணுகும். அதிலும் கூட கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத் தான் அவ்வாறு அணுகும். கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தின் நலனைப் பகைத்துக்கொண்டு இந்தியா ஈழத்தமிழர்களை முழுமையாக நெருங்கிவராது.

கொழும்பில் இருக்கும் அரசாங்கம் பணியமறுக்கும் போது ஈழத்தமிழர்களை ஒரு கருவியாகக் கையாண்டு அரசாங்கத்தின் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்கும். இவ்வாறு ஈழத்தமிழர்களை ஒரு கருவியாகப் பயன்படுத்த விளையும் பொழுது அதில் ஈழத்தமிழர்களுக்கும் தமிழகத்துக்கும் இடையிலான இனரீதியான, மொழிரீதியான, பண்பாட்டு ரீதியிலான இணைப்புகளை இந்திய மத்திய அரசு தனது புவிசார் அரசியல் நோக்குநிலையிலிருந்து அணுகும். நிச்சயமாக ஈழத்தமிழர்களின் 'சென்டிமென்டலான' நோக்கு நிலைகளில் இருந்தோ அல்லது தமிழகத்தின் இனஉணர்வு நோக்கு நிலைகளிலிருந்தோ அணுகாது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்திய -ஈழத்தமிழ் உறவை இந்த அடிப்படையில் தான் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் ஈழத்தமிழர்களில் கணிசமானவர்கள் தமிழகத்துக்கும் தமக்கும் இடையிலான இனம், மொழி, பண்பாடு சார்ந்த நெருக்கத்துக்கூடாக இந்திய மத்திய அரசை விளங்கிக் கொள்ள முற்படுகிறார்கள். இதுதவறு. இது விடயத்தில் தமிழகத்துக்கும், ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான கனெக்ரிவிட்டியை இந்திய நடுவண் அரசு அதன் பேரரசு நோக்குநிலையிலிருந்து பயன்படுத்துகிறது என்பது ஒரு கொடுமையான யதார்த்தம். ஏனென்றால் அரசுகள் எப்பொழுதும் அப்படித்தான் நடந்துகொள்ளும். இது மேற்கத்தைய அரசுகளுக்கும் பொருந்தும். சீனாவுக்கும் பொருந்தும். எனவே ஈழத்தமிழர்கள் இந்தியாவை 'சென்டிமென்டலாக' அணுகும் அந்தநோக்குநிலையில் இருந்து விடுபட வேண்டும். மாறாக புத்திபூர்வமாக அணுகவேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றால் இந்தியாவுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற தர்க்கத்தை பலமாக முன்வைக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் மிகநீண்ட கடல்எல்லைகளின் சொந்தக்காரர்கள். தமிழ்க்கடலை கட்டுப்படுத்தும் எந்த ஒருநாடும் இந்தியாவின் தெற்குமூலையைக் கட்டுப்படுத்தும். எனவே தமிழ்க்கடலை இழந்தால் இந்தியா தனது தெற்குவாசலின் பாதுகாப்பையும் இழக்கநேரிடும். இந்தத் தர்க்கத்தை ஈழத்தமிழர்கள் முன்வைக்கலாம். இந்தியாவை நோக்கி ஈழத்தமிழர்கள் முன்வைக்கக்கூடிய கோரிக்கைகளும் அந்த அடிப்படையில் அமைவது நல்லது.

ஒரு மக்கள் கூட்டம் வெளிநாடுகளை நோக்கி அதன் கோரிக்கைகளை முன்வைக்கும்போது, வெளிநாடுகள் ஏற்றுக் கொள்ளும் என்று பார்த்து அந்தக்கோரிக்கைகளை வடிவமைக்கத் தேவையில்லை. மாறாக தங்களுக்கு எது தேவை என்ற அடிப்படையில் உச்சமான கோரிக்கைகளை முன்வைக்கலாம். பின்னர் அதற்காக உழைக்கவேண்டும். இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக்கோரிக்கையை முன்வைத்திருக்கும் கட்சிகள் இந்த விடயத்தை விளங்கிக் கொள்ளவேண்டும். இந்த அடிப்படையில் 13 ஆவது திருத்தம் என்ற கோரிக்கையை ஈழத்தமிழர்கள் முன்னிலைப்படுத்த தேவையில்லை. அதேசமயம் 13 ஆவது திருத்தத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு இந்தியா தொடர்பான தனது அணுகுமுறைகளில் ஒரு குழப்பமான படத்தை வெளிக்காட்டும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இதில் ஒரு தெளிவான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். அந்தக்கட்சியின் தலைவர்கள் தாங்கள் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு எதிர் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் '13'ஐ அவர்கள் எதிர்க்கும் விதம் அந்தக்கட்சியிடம் இந்தியாவை 'என்கேஜ்' பண்ணுவதற்குரிய பொருத்தமான வெளியுறவுத் தரிசனம் ஏதும் உண்டா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இந்தியா ஒரு பிராந்தியப் பேரரசு. ஈழத்தமிழர்கள் அரசற்ற ஓரினம். இனப்படுகொலை, புலப்பெயர்ச்சி போன்றவற்றால் மெலிந்துபோய் இருக்கும் ஒரு மக்கள் கூட்டம். ஈழத்தமிழர்கள் மத்தியில் மகப்பேற்று விகிதமும் கவலைதரும் வகையில்

09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தூதரகம் நிறுத்தியதா?

அ.நிக்ஸன்



நாடாளுமன்ற நடைமுறை விதிமுறைகள் (Practical Terms) மற்றும் அங்கு நடைபெறவுள்ள அல்லது நடைபெற்ற விவாதங்களின் முக்கியமற்ற தன்மை அல்லது பிரதானப்படுத்தக்கூடிய விவாதங்கள் (Highlighted Debates) எது என்பதை நாடாளுமன்றச் செய்தியாளர்களே தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் நாடாளுமன்ற விவாதங்களில் பேசும் அல்லது பிரேரணை, சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையைச் சமர்ப்பிக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள், இலங்கை நாடாளுமன்றம் என்பது ஈழத்தமிழர்களின் அனைத்து உரிமைகளையும் பேசிப் பெற்றுவிடக்கூடியம் இடம் என்ற தோற்றத்தை வெளிப்படுத்த முற்படுகின்றனர்.

ஆகவே நாடாளுமன்றச் செய்தியாளர்களுக்கு நாடாளுமன்ற விதிமுறைகள், மரபுகள், அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும். குறிப்பாகப் பிரேரணைகள் மீதான விவாதங்கள், நகல் சட்டமூலங்கள், திருத்தச் சட்டமூலங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் குறித்த விவாதங்களின் தன்மைகள், (Nature of Debates) விவாதங்களின் இயற்பியல்கள் (Physiognomies of Debates) பற்றி முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும். (சபை நடவடிக்கைகள் பற்றிய அறிவு உட்பட)

சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை என்பது சபையின் அன்றைய அமர்வு ஒத்திவைக்கப்பட்ட பின்னர் அரை மணி நேரம் இடம்பெறும் விவாதமாகும். எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தனது பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்துக் கட்சியின் ஒத்துழைப்புடன் சபாநாயகருக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்ற பின்னர் விவாதிக்க முடியும்.

சபை நிகழ்ச்சி நிரலில் இல்லாவிட்டாலும் அவசியம் ஏற்படின் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை சமர்ப்பித்து விவாதிக்கலாம். அதாவது குறித்த பிரதேசம் ஒன்றின் அல்லது மக்கள் கூட்டத்தின் பிரச்சினை ஒன்றைப் பகிரங்கப்படுத்துவதே இந்த விவாதத்தின் பிரதான நோக்கமே தவிர வேறெதுவுமில்லை.

அரசியல், பொருளாதார விடயங்களைக்கூட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையாக விவாதிக்க முடியும். நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள், சபாநாயகர் தலைமையில் இடம்பெறும் சபை நடவடிக்கைகள் தொடர்பான கூட்டத்தில் இணங்கினால் சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை மீதான விவாதத்துக்குரிய நேரத்தை அதிகரிக்கலாம். வேண்டுமானால் ஒரு நாள் முழுவதும் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட நாட்களாகவும் விவாதிக்க முடியும்.

ஆனால் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் (The Standing Orders of Parliament) பிரகாரம் இந்த விவாதத்துக்குரிய நேர ஒதுக்கீடு ,அரை மணிநேரம் மாத்திரமே. அத்துடன் இந்த விவாதத்தின் நிறைவில் விவாதிக்கப்பட்ட குறித்த விடயதானம் தொடர்பான அமைச்சர் பதிலளிக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவும் இல்லை. விரும்பினால் பிரதியமைச்சர் அல்லது அரசதரப்பு உறுப்பினர் ஒருவர் பதிலளித்தாலே போதும். ஆனால் கட்டுரையாளரின் நாடாளுமன்றச் செய்தியிடல் அனுபவத்தில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்குப் பதிலளிக்காமல் விட்ட சந்தர்ப்பங்களே அதிகம். அத்துடன் விவாதம் நடைபெறும்போது ஆசனங்களில் உறுப்பினர்கள் இருப்பதுமில்லை. அதுவும் தமிழ் உறுப்பினர்களின் சபை ஒத்திவைப்புவேளை விவாதம் என்றால் சிங்கள உறுப்பினர்கள் மாத்திரமல்ல, சிங்களச் செய்தியாளர்கள்கூட செய்தியாளர் களரியில் இருக்கமாட்டார்கள். இப்படிச் சிங்கள உறுப்பினர்கள் சபையில் இல்லாமல் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை மீதான பல விவாதங்களை கட்டுரையாளர் தனது நாடாளுமன்ற செய்தியிடல் அனுபவத்தில் பார்த்திருக்கிறார். அத்துடன் அந்த விவாதம் அரசாங்கத்துக்கோ அல்லது எந்தவொரு நாட்டுக்கோ பாரதூரமான தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடியதல்ல.

முழுமையான பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டு அரசதரப்பு, எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் பலரும் விவாதத்தில் பங்குபற்றினால் மட்டுமே , அது குறிப்பிட்டளவு தாக்கத்தைச் செலுத்தும். ஆனாலும் எந்தவொரு விவாதமாக இருந்தாலும் வெறுமனே நாடாளுமன்ற 'ஹன்சார்ட்' அறிக்கையில் பதியப்பட்டு வரலாற்று ஆவணமாக மாத்திரமே இருக்கும்.

விவாதத்தில் பேசப்பட்ட விடயங்கள் செயல்வடிவில் வருவதென்பது முயற்கொம்பு. அதுவும் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்கள், போரின் பக்க விளைவுகளான குடியேற்றம், காணிப் பறிப்பு, மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய விவாதங்கள் எல்லாமே 'ஹன்சார்ட்' அறிக்கையிலும், தமிழ் நாளேடுகள், வார இதழ்களிலும் செய்திகள் கட்டுரைகளாகவுமே உள்ளன.

இலங்கை நாடாளுமன்றம் என்பது வெறுமனே ஒரு பேச்சு மேடைதான். ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் இருந்து கொண்டு ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாமெனத் தமிழ்த்தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் பலரும், இத்தனை அழிவுகளின் பின்னரும் நம்புகின்றார்கள் என்றால் அதனை என்னவென்று சொல்ல? அதுவும் கொழும்பில் இருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களில் தங்கள் நாடுகளைப் பற்றித் தரக் குறைவாகப் பேசினாலும் கண்டுகொள்வதுமில்லை. அதற்குப் பதிலளிப்பதுமில்லை.

விமல் வீரவன்ஸ எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோது, கொழும்பில் உள்ள அமெரிக்க, இந்தியத் தூதுவர்களைப் புலிகளின் முகவர்கள் என்றுகூடப் பேசியிருக்கிறார். ஆனால் அது பற்றி எந்தவொரு விளக்கமும் தூதுவர்கள் அரசாங்கத்திடமோ, எதிர்க்கட்சியிடமோ பகிரங்கமாகவோ அல்லது தொலைபேசியிலோ கேட்கவேயில்லை. வேண்டுமானால் அது பற்றி மூடிய அறைக்குள் இராஜதந்திரிகள் விளக்கமளித்திருப்பர். அது மாத்திரமல்ல 2006 ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள இந்திய 'அப்பலோ' சர்வதேச மருத்துவமனையை

**மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதாக உறுதியளித்து, அது குறித்த சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தடுத்து நிறுத்தியதாக இருந்தால், வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பான பிரேரணை ஒன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏன் சமர்ப்பிக்கப்பட முடியாமல்போனது?**

இலங்கை அரசாங்கம் சர்வதேச விதிகளை மீறி மருத்துவமனையின் கூடுதல் பங்குகளைப் பெற்றுத் தனதாக்கியது. இதனால் கொழும்பில் அப்போதிருந்த இந்தியத் தூதுவர் நிருபமா சென் இலங்கை அரசாங்கத்திடம் விளக்கம் கோரியிருந்தார். அது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதைப் பற்றி அப்போது அமைச்சராக இருந்த அமரர் அனுரா பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் விவாதித்திருந்தார். இந்தியத் தூதுவரை மிகவும் மோசமாகத் தாக்கிப் பேசியுமிருந்தார். ஆனால் அந்த விவாதத்தை நிறுத்துமாறோ அல்லது இந்தியத் தூதுவரை நாடாளுமன்றத்தில் அவதூறாகப் பேசியமை பற்றியோ இந்தியத் தூதரகம் விளக்கம் கோரவில்லை. அதுவும் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்றை நிறுத்துமளவுக்கு எந்தவொரு வெளிநாட்டுத் தூதரகமும் கீழிறங்கிய சந்தர்ப்பங்களை கட்டுரையாளர் தனது நாடாளுமன்ற அனுபவத்தில் கண்டதில்லை. ஏனெனில் நாடாளுமன்ற விவாதங்கள் என்பது உறுப்பினர்களின் சிறப்புரிமை (Special Privilege) என்பது வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நன்கு தெரியும்.

ஆகவேதான் நாடாளுமன்றச் செய்தியாளர்கள், அல்லது நாடாளுமன்றச் செய்தி எழுதுவோர் முதலில் செய்தி நுட்பங்களையும் மரபுகளையும் புரிதல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2020 ஆம் ஆண்டு மாவீரர் நாள் அன்று தமிழரசுக் கட்சி, நாடாளுமன்றத்தில் தீபம் ஏற்றியதாகப் படத்துடன் செய்திகள் வந்திருந்தன. ஆனால் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்திலேயே தீபம் ஏற்றப்பட்டது. கட்சி அலுவலகத்தில் தீபம் ஏற்றியிருந்தால் அதுபற்றி நாடாளுமன்ற விதிகளை மீறியதாகக் குற்றம் சுமத்திப் பொலிஸார் விசாரணை நடத்த முடியாது. ஆகவே நாடாளுமன்றச் சபா மண்டபத்துக்கு முன்பாகத் தீபம் ஏற்றியிருந்தால் மாத்திரமே அது செய்தியாக வெளிவந்திருக்க வேண்டும். ஆனால் அங்கு தீபம் ஏற்றுவதற்குச் சபாநாயகர் அனுமதி வழங்கமாட்டார். அதையும் மீறித் தீபம் ஏற்றியிருந்தால், உடனடியாகவே நாடாளுமன்றப் பொலிஸார் தடுத்திருப்பார்கள் அல்லது தீபத்தைத் தட்டி விழுத்தியிருப்பார்கள். அதனாலேதான் அரசாங்கத்துக்கும் தங்களுக்கும் சிக்கலை ஏற்படுத்தாமல், தங்கள் கட்சி அலுவலகத்துக்குள் தீபத்தை ஏற்றிவிட்டுப் படத்தை ஊடகங்களுக்கு அனுப்பி நாடாளுமன்றத்தில் தீபம் ஏற்றப்பட்டதாகத் தமிழரசுக் கட்சி கூறியிருந்தது.

ஆகவே நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாகத் தங்கள் அரசியல் புகழ்ச்சிக்காக அரசியல்வாதிகள் வெளியிடும் படங்களையோ அறிக்கைளையோ உடனடியாகச் செய்தியாக்க முற்படக்கூடாது. நாடாளுமன்ற விதிகள் ,மரபுகளை அறிந்த செய்தியாளர்கள் மாத்திரமே அந்தச் செய்திகளைக் கையாள வேண்டும். நாடாளுமன்றம் பற்றிச் சரியான புரிதலோடு செய்திகளையும், படங்களையும் வெளியிட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் சாதாரண மக்கள் நாடாளுமன்ற விதிமுறைகளை அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால் ஊடகங்கள் மாத்திரமே பொறுப்புடன் செயற்பட்டு மக்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதிகள் செய்யும் அரசியல் திருகுதாளங்களை அம்பலப்படுத்த வேண்டும். இதனாலேதான் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் மக்களை வெறுமனே வாக்குப் பெறும் வங்கிகளாக மாத்திரம் பயன்படுத்தி வருகின்றன.

இப்போது ஒரு சபை ஒத்திவைப்பு பிரேரணை ஒன்று பேசுபொருளாகியுள்ளது. இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசிய முன்னணி ஒரு சபை ஒத்திவைப்பு பிரேரணையைக் கொண்டு வர இருந்தது. ஆனால் திடீரென அந்த முடிவில் இருந்து முன்னணி பின்வாங்கியது. 'இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதாக உறுதியளித்தார். அந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஒத்திவைப்பு பிரேரணையை கைவிட்டோம்' என்று இந்தப் பின்வாங்கலுக்கு முன்னணி விளக்கமளித்துள்ளது. மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதாக உறுதியளித்து, அது குறித்த சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தடுத்து நிறுத்தியதாக இருந்தால், வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பான பிரேரணை ஒன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏன் சமர்ப்பிக்கப்பட முடியாமல்போனது?

2006 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தினால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, பிரேரணை ஒன்றின் மூலம் மீண்டும் இணைக்க முடியுமென நீதியரசராக இருந்த சரத் என் சில்வா தனது தீர்ப்பில் கூறியிருந்தார். ஆனால் இன்றுவரை தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரணை எதனையும் சமர்ப்பித்து வடக்கு- கிழக்கு மாகாணத்தை மீண்டும் இணைக்க ஏற்பாடு செய்யவில்லை. ஆகவே 2020 ஆம் ஆண்டு தேர்தலில் இரண்டு ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விசேட பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து வடக்கு- கிழக்கை மீண்டும் இணைக்க முற்பட்டிருக்கலாமே? அது இலங்கை நாடாளுமன்றத்தில் சாத்தியப்படாதெனத் தெரிந்தாலும்கூட, அவ்வாறு பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உலகத்துக்கு இலங்கை ஒற்றையாட்சி அரசின் முகத்தைப் பகிரங்கப்படுத்தியிருக்கலாமே?

அல்லது பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிந்து 'பிரேரணையைச் சமர்ப்பிக்க வேண்டாம் நிறுத்துங்கள். நாங்கள் இரு மாகாணங்களையும் மீண்டும் இணைத்துத் தருகின்றோம்' என்று தொலைபேசியில் உறுதியளித்திருக்குமா இல்லையா என்பதையாவது பரீட்சித்துப் பார்த்திருக்கலாமல்லவா?

ஆகவே விடுதலை அரசியலையும், போரின் பக்க விளைவுகளுக்கான தீர்வுகளையும் மற்றும் அபிவிருத்தி அரசியலையும் சமாந்தரமாக முன்னெடுத்துத் தேச அரசியலைக் கட்டியெழுப்ப வேண்டுமே தவிர, சாதாரண கட்சி அரசியலுடன் கூடிய சலசலப்புப் பேச்சுக்கள், பரபரப்புப் பிரகடனங்கள், வெற்று அறிக்கைகள் எதனையுமே பெற்றுத்தரப்போவதில்லை. தமிழ் மக்கள் இப்போது முன்னணியிடம் இருந்து எதிர்பார்ப்பது வெறும் பரபரப்பு அரசியலை அல்லவென்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

1898, 1899 ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட உயர்நீதிமன்ற வழக்காக நடைபெற்று முடிந்த அழகம்மா கடத்தல் வழக்கு அந்தக்கால யாழ்ப்பாணத்தின் பண்பாட்டையும் நிலைமைகளையும் விளங்கிக் கொள்ள இன்றும் உதவுவதாக உள்ளது.

# அழகம்மா கடத்தல் வழக்கு 6



○ தி.கோபிநாத்

அழகம்மா கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட வழக்குகளில் ஒன்றாக அமைந்தது வியப்பானதல்ல. நெருங்கிய குடும்பங்களுக்கிடையில் திருமணம் சம்பந்தமாக எழுந்த சச்சரவு ஓர் உயர்நீதிமன்றக் குற்றவியல் வழக்கானமை எதிர்பாராத ஒன்றாக அமைந்தது. குறித்த குடும்பம் யாழ்ப்பாணத்தில் நன்கறியப்பட்ட ஒன்றாக அமைந்தமையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குச் சார்பாக வாதிட்ட வழக்கறிஞர்களான உருத்திரா, ஐசக் தம்பையா ஆகியோர் கொழும்பிலிருந்து அழைக்கப்பட்டு வந்தமையாலும் பரபரப்பு அதிகமானது.

வழக்கு நடைபெற்ற நாட்களில் வழக்கு நடைபெற்ற மாவட்ட நீதிமன்ற வீடும் முற்றவெளியும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இருந்து வந்த மக்களால் நிரம்பியிருந்ததாக அக்கால உதயதாரகைச் செய்தி பதிவாகியுள்ளது. அத்துடன் அக்கால இலங்கையின் உயர்நீதிமன்ற வழக்குகள் பொதுவாக மூன்று, நான்கு நாட்களைத் தாண்டுவதில்லை. அழகம்மா வழக்கோ சுமார் ஒன்பது நாள்கள் நீண்டு சென்றது. இந்த 9 நாட்களும் யாழ்ப்பாண நகரப்பகுதி பரபரப்பில் நிரம்பி வழிந்தது.

இந்த வழக்கின் நீதிபதியாக பிறவுண் அவர்களும் பதிவாளராக ஸ்ரோக் என்பவரும் முத்தையா என்பவர் மொழி பெயர்ப்பாளராகவும் செயற்பட்டனர். யூரிமாராக எஸ். கே. லோட்டன் (தலைவர்), ஏரம்பமூர்த்தி, கிருஷ்ணபிள்ளை, இராசகாரியர், சபாரத்தினம், இராமசாமி, அலெக்ஸ் தோசென்ற், பெருமையினார், வினாசித்தம்பி ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

வழக்கின் பிரதான எதிராளியான இராசையா சொலமன் மீது அழகம்மாவைப் பலாத்காரமாகத் திருமணம் செய்யக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டும் அருனி சரவணமுத்து, கார்த்திகேசு வெள்ளையன், வயிரவநாதர் கந்தர், ஆண்டி சின்னவன், சரவணமுத்து சீனி, இரத்தினம் சொலமன், தங்கம், கந்தர் வேலுப்பிள்ளை, கார்த்திகேசஐயர் தம்பையர் ஆகிய ஏனைய ஒன்பது பேர் மீது இராசையாவுக்கு உதவி புரிந்த குற்றச்சாட்டும் அரச தரப்பால் முன்வைக்கப்பட்டன.

அரச தரப்பின் பிரதான வழக்கறிஞராக சிற்றி அவர்களும் அவருக்கு உதவியாக காசிப்பிள்ளை, காப்பென்ரர், திசைநாயகம் குக் ஆகியோரும் செயற்பட்டனர். வேலுப்பிள்ளை சார்பாக ஐசக் தம்பையாவும் இராசையா உள்ளிட்ட ஏனைய எதிராளிகள் சார்பாக உருத்திரா அவர்களும் வாதிட்டனர். உருத்திராவுக்கு உதவியாளர்களாக கனகசபை, அளகக்கோன், திருநாவுக்கரசு, சந்திரசேகரம் ஆகியோர் செயற்பட்டனர்.

1898.09.13 செவ்வாய்க்கிழமை அரச வழக்கறிஞர் சிற்றி சுமார் அரை மணிநேர தொடக்க விளக்கத்துடன் ஆரம்பித்தார். முதலாவது சாட்சியாக அழகம்மாவின் தந்தையான போதகர் நயில்ஸ் அழைக்கப்பட்டார். அரச வழக்கறிஞரின் விசாரணை, எதிரி வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை, அரச வழக்கறிஞரின் மறு விசாரணை என மதியம் 12 மணியிலிருந்து மாலை 5.30 வரை நயில்ஸ் சாட்சியமளித்தார். போதகரது குரல் மெல்லியதாக அமைந்தமையால் நீதிபதியின் ஆசனத்துக்கு அருகில் அவருக்கு ஓர் இருக்கை வழங்கப்பட்டு அவர் இருந்தபடி சாட்சியமளிக்க நீதிபதி வசதியளித்தார்.

இதனை உருத்திரா எதிர்த்தபோதும் யூரிமாருக்குப் போதகரின் குரல் நன்கு கேட்க வேண்டும் என்றும் அவ்வாறு அருகிலிருந்து சாட்சியமளிப்பதால் யூரிமாரது சிந்தனை மாறிவிடாது என்றும் நீதிபதி பிறவுண் சுட்டிக் காட்டியதனை அடுத்து உருத்திரா தனது மறுப்பினை மீளப் பெற்றுக் கொண்டார்.

போதகர் நயில்ஸ் தனது சாட்சியத்தில் எதிராளி குடும்பத்துக்கும் தனக்குமான உறவு குறித்தும் எதிராளிக்கு அழகம்மாவைத் திருமணம் பேசி வந்தமை குறித்தும் கடத்தப்பட்ட அன்று நடந்த நிகழ்வுகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மறுநாள் காவல்துறை நீதவான் கொன்ஸ்ரன்ரைன், போதகரின் மனைவியான மேரி நயில்ஸ், போதகரின் சகோதரி மகனும் இராசையாவுக்கு அழகம்மாவை மணம்பேசிச் சென்றிருந்தவனுமான வேதக்குட்டி வில்லியம்ஸ், குதிரைக்காரனான சின்னவன் மயிலன், போதகரின் மருமகனும் கடத்தப்பட்ட இடத்திலிருந்தவனுமான துரைச்சாமி தம்பு, போதகரின் சகோதரன் மகனும் அழகம்மா கடத்தப்பட்ட பின் தேடிச் சென்றவனுமான எட்கார் நயில்ஸ் ஆகியோர் அரச தரப்புச் சாட்சியங்களாக விசாரணை செய்யப்பட்டனர்.

கொன்ஸ்ரன்ரைன் தன்னிடம் அழகம்மா கடத்தப்பட்டதாக முறைப்பாடு வந்ததிலிருந்து தனது தலைமையில் அழகம்மா மீட்கப்பட்டது வரையான சம்பவங்களை விபரித்தார். மேரி நயில்ஸ் தனது சாட்சியத்தில் அழகம்மா கடத்தப்பட்ட அன்று நடந்த சம்பவங்கள் குறித்தும் இராசையாவுக்கும் தனது குடும்பத்துக்குமான ஊடாட்டம் குறித்தும் விளக்கமளித்தார்.

மூன்றாம் நாள் வியாழக்கிழமை அருணாசலம், இன்னாசி ஆகியோரும் அழகம்மாவும் விசாரிக்கப்பட்டனர். அழகம்மா தனது சாட்சியில் இராசையாவுக்கும் தனக்குமான ஊடாட்டம் குறித்தும் இராசையா தன்னை மணம் புரியக் கேட்டபோது தான் அதற்கு எதுவும் கூறாமல் வந்து விட்டமை குறித்தும் குறிப்பிட்டதோடு கடத்தப்பட்டபோது நடைபெற்ற சம்பவங்கள் ஒவ்வொன்றையும் விலாவாரியாக முன்வைத்தாள்.

அழகம்மாவை எதிரி சார்பான வழக்கறிஞரான உருத்திரா ஏழு மணிநேரம் மிக நுணுக்கமாகக் குறுக்கு விசாரணை செய்தார். அழகம்மாவின் சாட்சியங்களில் ஏதும் முன்பின் முரண்பாடு இருப்பின் வழக்கினை வென்றுவிட முடியும் என உருத்திரா தெரிந்திருந்தார். அழகம்மாவின் மன உறுதியை உடைத்து சாட்சியத்திலிருந்து பின்வாங்க வைத்து விட்டாலும் உருத்திராவால் வழக்கினை இலகுவாக வென்று விட முடியும். ஆனால் அழகம்மா உளந்தளராமல் உருத்திராவின் குறுக்கு விசாரணையை எதிர்கொண்டமையை அக்கால இந்து சாதனம் தெளிவாகப் பதிவுசெய்துள்ளது.

முதல் மூன்று நாட்களின் விசாரணைகளின் போது அரச வழக்கறிஞர்களின் அணுகுமுறையானது கடத்தற் சம்பவம் நடைபெற்றமையைப் பல்வேறு சாட்சியங்கள் ஊடாக நிரூபிப்பதாக அமைந்தது. உருத்திராவின் குறுக்கு விசாரணைகளும் விவாதமும் குறித்த நாட்களில் நடந்த சம்பவங்கள் எவற்றையும் மறுக்கவில்லை.

ஆனால் அழகம்மா கடத்தப்படவில்லை; மாறாக இராசையாவுடன் விரும்பியே சென்றாள் என்பதே எதிரி தரப்பு முன்வைத்த மறுப்பாக அமைந்தது. அதாவது பெண் கடத்தப்படவில்லை; சோரம் போனாள் என்பதே உருத்திராவால் முன்வைக்கப்பட்டது.

உருத்திராவின் குறுக்கு விசாரணைகள் அனைத்தும் இராசையாவுக்கும் அழகம்மாவுக்குமிடையில் காதல் உறவு இருந்தது என்றும், குறித்த சம்பவம் கடத்தலே அல்ல; அழகம்மா விரும்பியே சென்றாள் என்றும் நிரூபிக்கும் முயற்சிகளாக அமைந்தன.

எடுத்துக்காட்டாக அழகம்மாவும் இராசையாவும் ஏனையோரும் கடதாசி விளையாடுவது வழக்கம். அவ்வாறு விளையாடுகையில் அவர்கள் காதலுறவினைத் தொடங்கியிருந்தனர் என்பதாக போதகர் நயில்ஸ், மேரி நயில்ஸ், அழகம்மா என எல்லோரிடமும் குறுக்குக் கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

மேலும் இராசையாவின் குதிரை வண்டிலுக்குள் அழகம்மா தானே கால் வைத்து ஏறிச் சென்றாள். ஆகையால் அவளுக்கு இராசையாவுடன் செல்லும் விருப்பம் இருந்தது என்ற வகையில் அமைந்த குறுக்கு விசாரணைகளைக் கூறலாம். ஆனால் அதனை மறுத்த அழகம்மா தனது கால்கள் எப்படி வண்டிக்குள் சென்றன என்பதே தெரியவில்லை என்று உறுதியாக நின்றாள்.

அழகம்மா தான் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமையை அரச தரப்புக்கான சாட்சியத்தில் சொல்லியிருக்கவில்லை. ஆனால் குறுக்கு விசாரணைகளில் கடத்தப்பட்ட அன்று இரவு இராசையா தன்னுடன் வன்புணர்வு கொண்டமையை அவள் குறிப்பிடவேண்டியிருந்தது. குறுக்கு விசாரணைகளில் நடந்த சம்பவங்களை அவள் வெளிப்படுத்திய போதும் அது தனது சம்மதத்துடன் நடந்த உடலுறவு அல்ல; கட்டாயப்படுத்திச் செய்யப்பட்ட பாலியல் வன்புணர்வு என்பதிலும் அழகம்மா தெளிவாக இருந்தாள்.

ஆனால் உருத்திராவின் குறுக்கு விசாரணைகள் அழகம்மாவுக்கும் இராசையாவுக்குமிடையில் காதலுறவும் தொடர்புகளும் இருந்தன. அதனாலேயே இராசையா வழிமறித்த போது அவனுடன் விரும்பிச் சென்றாள். சுய விருப்பத்துடன் உடலுறவிலும் ஈடுபட்டாள் என்பனை நோக்கி வழக்கினை நகர்த்தும் முயற்சிகளாக இருந்தன.


இந்தக் கோணத்திலேயே எதிராளி தரப்புச் சாட்சியங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. நான்காம் நாள் வெள்ளிக்கிழமை எதிர்த்தரப்பின் சாட்சியங்கள் தொடங்கின.




"இராசையாவின் குதிரை வண்டிலுக்குள் அழகம்மா தானே கால் வைத்து ஏறிச் சென்றாள். ஆகையால் அவளுக்கு இராசையாவுடன் செல்லும் விருப்பம் இருந்தது என்ற வகையில் அமைந்த குறுக்கு விசாரணைகளைக் கூறலாம். ஆனால் அதனை மறுத்த அழகம்மா தனது கால்கள் எப்படி வண்டிக்குள் சென்றன என்பதே தெரியவில்லை என்று உறுதியாக நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 70



அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: ..........................

.......................................................

கையொப்பம்:.............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள் வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலி கள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. தனி உரிமை 5. பாடல் இயற்றுபவனை குறிக்கும் 7. கீறுதல் 8. எண்ணு 9. புலவன் 11. தங்கம் 12. ஆறறிவு கொண்டவன் 14. போதையாலும் வரும் கோபத்தாலும் வரும். 15. பதுங்கும் பாய்வதற்கு 16. வாடகை வகையில் ஒன்று 18. பகுதி 20. குழந்தை 21. ஆறறிவில் ஓரறிவு குறைந்த பிறப்பு 22. மனதில் உள்ள உறுதியைக் குறிக்கும் 23. ஐந்து வகைப்பாக்களில் ஒன்று.

## மேலிருந்து கீழ்

1. பணிவிடை 2. அந்தம் 3. போதிப்பவன் 4. விந்தை 5. உயிர்ப்பின் தொடக்கம் 6. தரும மார்க்கத்தில் இவனும் சிறந்தவன் 8. திருமணமாகாத இளம் பெண் 10. நாய்க்கு இப்படியும் ஒரு தமிழ்ப் பெயர் 11. குறித்தல் 13. இடர்பாடு 14. பரிசு 15. நெருப்பில்லாமல் இது வராதாமே 17. சிரசு. 18. காலமாற்றத்தால் இந்த மாற்றம் வரும். 19. ஒரு பாத்திரம் 21. அதிக

### சொற்சிலம்பம் போட்டி 69 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சம்பாதி 4. தலைவி 6. வனப்பு 7. கமலம் 9. தாமதி 11. திறன் 12. காரணி 13. புலன் 15. மன்மதன் 17. அக 18. கால் 19. சகல 20. துளை 21. வியாபாரம்

**மேலிருந்து கீழ்**

1. சங்கதி 2. பாவலன் 3. தினம் 4. தபுதாரன் 5. வியாதி 8. மறவன் 10. மணி 12. காலன் 13. புதல்வி 14. அகலம் 15. மத்து 16. மகா 17. அகர 19. சபா.

**சொற்சிலம்பம் போட்டி இல.70**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**18.02.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 69இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**சுதாகர் கார்த்திகன்,**
தரம்-8
யாழ்.இந்துக் கல்லூரி.

**2 ஆம் பரிசு**
**ம.மேசிலெற்றீஷியா,**
இல.1625 இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**
**பா.யதுஷா,**
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

**4 ஆம் பரிசு**
**இராஜமுத்து மஞ்சுளா,**
சர்வோதய வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

**5 ஆம் பரிசு**
**[illegible],**
மதவடி ஒழுங்கை, அளவெட்டி
தெற்கு, அளவெட்டி.

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

**1804**
முத்துக்குளிப்பு மூலம் 75.000 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1806**
முத்துக்குளிப்பு மூலம் 35.000 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1806 ஜூன் 4**
டச்சுக்காரரால் கத்தோலிக்கர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டன.

**1806 ஜூலை**
இலங்கையில் பொலிஸ் விதானைமார் நியமிக்கப்பட்டனர்.

**1806 ஓகஸ்ட் 5**
முஸ்லிம்களின் பரம்பரைச்சொத்து, மற்றும் விவாகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

**1807 ஜனவரி**
வர்த்தக வரி அமுலுக்கு வந்தது.

**1808**
முத்துக்குளிப்பு மூலம் 90.000 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1809 மார்ச்**
முத்துக்குளிப்பு மூலம் 25,000 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1809 மார்ச் 1**
வில்லியம் கோக் (William Coke) மாகாண நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

**1811 பெப்ரவரி 11**
ஆளுநரின் உத்தரவின் பிரகாரம் காரைநகர் களபூமியைச்சேர்ந்த மானா முதலியார் இறைவரி ஆணையாளர் அலெக்சாண்டர் வூட்டினால்(Alexandr Wood) முதலியாராக நியமிக்கப்பட்டார். (இந்தப்பதவி கிட்டத்தட்ட அரசாங்க அதிபர் பதவிக்குச் சமனான பதவி. ஏனைய கிராமத்தலைவர்கள் (Village Headman) அனைவரும் இவரின் கீழேயே பணியாற்றினர். இவர் சிதம்பரத்தில் மடம் ஒன்றையும் கட்டியுள்ளார்; இந்த மடத்தைப் பராமரிப்பதற்கென பெருந்தொகையான சொத்துக்களையும் , குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பல காணிகளையும் மடத்தின் பெயரில் இவர் எழுதி வைத்துள்ளார். இந்த மடத்துக்குரிய தற்போதைய நம்பிக்கைப்பொறுப்புச்சபை (Trustee) ,தற்போது மானா முதலியார் எழுதி வைத்து விட்டுச்சென்ற சொத்துக்களை விற்று ,வலிகாமம் மேற்கில் உள்ள ஒரு பிரபல பாடசாலைக்கு தங்களின் பெயரால் தமது சொந்தப்பணம் போன்று அன்பளிப்புச்செய்ததாகவும், குறித்த பாடசாலையில் கட்டடங்களைக் கட்டுவதாகவும் சமய, சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். சமய, சமூக ஆர்வலர்கள் சிலர் தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள முதன்மைச் சட்டத்தரணி ஒருவரை அணுகி இந்த விடயத்தை சமரசமாக தீர்க்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.)


**1811 நவம்பர் 8**
இலங்கையின் உயர்நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றம் (SupremeCourt) இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒன்று கொழும்பிலும், மற்றையது யாழ்ப்பாணத்திலும் செயற்படத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றம் (Puinse Court)என அழைக்கப்பட்டது. பிரித்தானியர்களின் அதிகாரப்பகிர்வுக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்று நினைக்கிறேன். இதே தினத்தில் நோலன் பிரபு என அழைக்கப்படும் எட்வேர்ட் நோலன் (Edward Nolan) நெடுந்தீவு சுப்பிரிண்டனாகப் பதவியேற்றார்.
இவர் நெடுந்தீவு அமர்வு நீதிவானாகவும் பிஸ்கால் நீதிவானாகவும் கடமையாற்றினார் நோலன் பிரபுவுக்கு ஆண்டொன்றுக்கு 600 பவுண்ஸ் சம்பளமாக வழங்கப்பட்டது. அயர்லாந்து நாட்டைச்சேர்ந்த நோலன் பிரபு 1.1.1826 இல் தனது சொந்த நாட்டுக்கு திரும்பி 1840 ஆம் ஆண்டு காலமானார். நோலன் பிரபுவைத் தொடர்ந்து ரொபேர்ட் ஆர்தன் (Robert Artan) நெடுந்தீவு அமர்வு நீதிவானாகவும் பிஸ்கால் நீதிவானாகவும் கடமையாற்றினார்.

**1812 மார்ச் 16**
இலங்கை நீதிச்சேவையில் ஜூரி முறை அறிமுகம் செய்யப்பட்டது. முத்துக்குளிப்பு மூலம் 90,000 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1813 ஓகஸ்ட் 10**
இலங்கையில் சந்தை வரி (bazar tax)நீக்கப்பட்டது.

**1814**
முத்துக்குளிப்பு மூலம் 64,000 பவுண்ஸ் வருமானம் கிடைத்தது.

**1814 ஜூலை 11**
வெஸ்லியன் மிஷனரியினர் காலி துறைமுகத்தை வந்தடைந்தனர். இவர்களில் லின்ச், ஸ்குவான்சர் (Lynch,Squanser) ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



**1814 நவம்பர் 5**
வடக்கு,வடமேல் மாகாணங்களில் சூறாவளி தாக்கியது மன்னார்,விட த்தல் தீவு யாழ்ப்பாணம் பகுதிகளில் கடும் சேதம் ஏற்பட்டது.

**1815**
கூப்பர் (W.H.Hooper) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

**1816 ஜூலை 11**
அமெரிக்க மிஷனரியினர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

**1816 ஓகஸ்ட் 12**
இலங்கை முழுவதிலும் இருந்த 763 அடிமைகளுக்குப் பிறக்கும் பிள்ளைகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என அரசு அறிவித்தது.

**1817**
அமெரிக்க மிஷனைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய வாரன் (E.Warren) தெல்லிப்பழையில் ஒரு சிறிய மருத்துவமனையை ஆம்பித்து உள்ளூர் மக்களுக்கு மேலைத்தேய மருத்துவத்தை அறிமுகம் செய்தார்.

**1818 ஜூலை**
கிறிஸ்தவ மிஷனரியைச் சேர்ந்த (CMS) ஜோசெப் நைட் (Joseph Knight) நல்லூரில் வந்து தங்கிநின்று, தனது செயற்பாடுகளை ஆரம்பித்தார்

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜாவாக இருப்போம்





# முட்டாள் மன்னன்!




**நா**ட்டை இழந்த ஒரு ராஜா... தன் நாட்டை மீட்பதற்காக, பக்கத்தில் இருக்கும் ஒரு காட்டுக்குள் இருந்து திட்டம் தீட்டுகிறார். சிறிது சிறிதாக ஆள் பலத்தையும் சேர்க்கிறார்.

பல முறை முயன்றும், நாட்டை மீட்க முடியாமல் தவிக்கிறார். ஒரு நாள், காட்டில் அலைந்துகொண்டு இருந்த போது, ஒரு பாட்டி பரிதாபப்பட்டு ராஜாவை சாப்பிட அழைக்கிறார். சூடான களியை வட்டையில் பரிமாறினார். மன்னன் களியின் நடுவில் கையை வைத்து எடுத்தார். "ஆ... சூடு..." என்று அலறினார். "அட என்னப்பா நீ... நம்ப முட்டாள் மன்னன் மாதிரி, நடுவுல போய்க் கையை வைக்கிறே... ஓரத்துல இருந்து கொஞ்சம் கொஞ்சமா எடுத்து சாப்பிடு..." என்று சொன்னார்.

மன்னனுக்கு உறைத்தது. சுற்றி இருக்கும் பகுதிகளைக் கைப்பற்றாமல் மத்தியில் இருக்கும் கோட்டையை முதலில் கைப்பற்ற நினைத்தது தவறு என்பதை உணர்ந்தார் மன்னர்.



# மூளை

விலங்கு உலகில் உடல் எடையுடன் ஒப்பிடுகையில், எடை அதிகமான மூளை கொண்ட விலங்கு மனிதன். திமிங்கிலத்துக்கு 9 கிலோ மூளையும் யானைக்கு 6 கிலோ மூளையும் உள்ளன.

மனித மூளையின் எடை சுமார் 1.5 கிலோதான். ஆனால், உடல் எடையோடு ஒப்பிட்டால் திமிங்கிலத்தின் உடல் எடையில் பத்தாயிரத்தில் ஒரு பங்குதான் அதன் மூளையின் எடை. யானையின் எடையில் ஆயிரத்தில் ஒரு பங்குதான் அதன் மூளையின் எடை.

மனிதனுக்கு மட்டும் அவன் எடையில் ஐம்பதில் ஒரு பங்காக மூளை இருக்கிறது.

மனித உடலில் ஆற்றல் செலவு அதிகமுள்ள உறுப்பு மூளைதான். உடலின் எடையில் வெறும் இரண்டு சதவீதமே இருந்தாலும் மூளை மட்டும் இருபது சதவீத ஆற்றலை எடுத்துக்கொள்கிறது.

எனவே உடல் எடையில் மூளையின் அளவு அதிகரித்தால், அதற்கு ஏற்ப ஆற்றலையும் அதிகரிக்க வேண்டும். இல்லை என்றால் மற்ற உறுப்புகள் பழுதாகிவிடும்.

பரிணாமத்தில் நேராக நிமிர்ந்து நடந்த ஹோமினின் வகை உயிரினங்களின் மூளை அளவு விரிவடைந்தது. கைகளைப் பயன்படுத்தி கற்கருவிகளைத் தயாரித்து, உழைப்பைச் செலுத்தி, உணவு உற்பத்தியில் ஈடுபட்டதால், அதிக உணவைப் பெற முடிந்தது.

## சிறுவர் கைவண்ணம்






ஆர்.என்.ஹெஷோனா
தரம் - 7A
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.

A.ஜெனியர்,
தரம் - 7A
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.





ஆ.திலக்சிஹா,
தரம் - 01
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.



செ. ஆதிரை,
எக்சல் சர்வதேச பாடசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

○ சூரியன்



## கையைத் தூக்கியதால் வந்தது வினை!

அநுராதபுரத்தில் நடைபெற்ற மொட்டுக் கட்சியின் மாநாட்டில் பங்கேற்கவந்த பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு, கட்சி ஆதரவாளர்களால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

மேடையேறிய பிரதமர் மஹிந்த மக்களை நோக்கி வலது கையை அசைத்து நன்றி பாராட்டினார். அப்போது மஹிந்தவின் பின்னால் இருந்த அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, மஹிந்தவின் இடது கையையும் தூக்க முற்பட்டார்.

இதனால் கடுப்பான பிரதமர் அவ்விடத்தில் வைத்தே ரோஹிதவுக்கு செம டோஸ் கொடுத்துள்ளார். அதன்பின்னர் 'இனி இப்படியான வேலை செய்ய வேண்டாம்' என கடுந்தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

" இல்லை சேர், இரு கைகளையும் உயர்த்தி அசைத்தால் நல்லமென நினைத்துதான் அப்படி செய்தேன்.

மன்னித்துவிடுங்கள்." என ரோஹித்த குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, குறித்த பரப்புரைக்கூட்டத்தில் அதிகளவான விவசாயிகள் பங்கேற்றிருந்தனர். தமக்கு உரம் வேண்டும் என அவர்கள் கூட்டத்தின் நடுவே கோஷம் எழுப்பினர்.

இதனால்தான் தமதுரையில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் வழங்கி ஜனாதிபதி உரையாற்றினார். ஆனாலும் மொட்டுக் கட்சியின் முக்கிய புள்ளிகளில் ஒருவரான விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இந்தமாநாட்டில் பங்கேற்கவில்லை. விவசாயிகள் தரப்பில் இருந்து எதிர்ப்பு வரும் என்பதாலேயே அவர் கூட்டத்தை தவிர்த்துக்கொண்டாராம்.



## ஏனிந்த மாநாடு?

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் தாண்டவமாடத் தொடங்கியுள்ளது. நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றாவிட்டால் ஆபத்து ஏற்படுமென சுகாதாரத் தரப்பு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது .

இவ்வாறானதொரு பின்புலத்தில் அரச கூட்டணியின் தலைமைக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஆயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டி கடந்த 9 ஆம் திகதி அநுராதபுரத்தில் பெருமெடுப்பில் மாநாடொன்றை நடத்தியது. இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு பங்காளிக்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் பங்காளிக் கட்சி தலைவர்கள் எவரும் மாநாட்டில் பங்கேற்கவில்லை. அரசுடன் ஒட்டி உறவாடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்கூட மாநாட்டை புறக்கணித்திருந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்சவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக்கும் நோக்கிலேயே இதற்கான நகர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளதென விமல், உதய கம்மன்பில போன்றவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். ஒரு லட்சம் வேலைத்திட்டம் இதன் மற்றுமொரு அங்கம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை, இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய மொட்டுக் கட்சி பேச்சாளர்கள், பங்காளிக்கட்சிகளை இலக்கு வைத்து மறைமுக 'தாக்குதல்களை' நடத்தினராம்.

ஆனால் பங்காளிகளுக்குத்தான் சுரணை என்ற ஒரு வஸ்து இருக்கவேண்டுமே?

## சொல்லிவிட்டு பேசுங்கள்

ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் உட்பட ஆளுந்தரப்பின் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

மின்நெருக்கடி, டொலர் தட்டுப்பாடு உட்பட சமகால விவகாரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக அலசி ஆராயப்பட்டது. "அமைச்சர்களான உதய கம்மன்பிலவும், காமினி லொக்குகேயும் விருப்பு வாக்குபிரச்சினையால் தற்போதே முரண்பட்டுக்கொள்கின்றனர். அவர்களின் பிரச்சினையால் எங்களால் மக்களிடம் முகங்கொடுக்க முடியவில்லை." - என பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டனர். இதன்போது குறுக்கீடு செய்த ஜனாதிபதி, டொலர் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணத்தை விவரித்தார்.

அதுமட்டுமல்ல ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு முன் சென்று உணர்வுபூர்வமாக கருத்துகளை வெளியிட முன்னர், பிரச்சினைகள் இருப்பின் தம்முடன் கலந்துரையாடுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.



## வாசுவுக்கு வலை!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணையுங்கள். தொகுதி அமைப்பாளர் பதவியைத் தருகின்றேன்."

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், அமைச்சருமான வாசுதேவ நாணயக்காரவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் அமைச்சர் பஸில் ராஜபக்ச. ஆளுங்கட்சி குழுக்கூட்டத்தின்போது.

"இரத்தினபுரி மாவட்டத்தில், எனது தொகுதியில் எனக்குத் தேவையான ஒரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைக்கூட நியமிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. " என்று வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார். அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சியும் இந்தக் கருத்தை ஆமோதித்தார். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் சரத் வீரசேகர, நியமனம் என்பது முறையாக நடக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.


" நமக்கு தேவையான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரை அமைச்சர்கள் நியமித்துக்கொள்வது வழமை. அது எந்த ஆட்சியாக இருந்தாலும் அப்படித்தான் நடக்கும்." என பஸில் அவ்வேளை குறிப்பிட்டுள்ளார். பஸிலின் கருத்துடன் பிரதமரும் உடன்பட்டுள்ளார். இவ்வேளையிலேயே, "அமைச்சர் வாசு, நீங்கள் எங்கள் பக்கம் வாருங்கள். உங்களுக்கு தொகுதி அமைப்பாளர் பதவியைத் தருகின்றேன்" என பஸில் சிரித்தபடி கூறியுள்ளார். ஆனால் வாசுதேவ பதிலேதும் சொல்லாமல் சிரித்துச் சமாளித்து விட்டாராம்.



## ரஞ்சனுக்கு எப்போது விடுதலை?

சிறைத் தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, ஜனாதிபதியால் சுதந்திர தினத்தன்று பொதுமன்னிப்பு வழங்கப்படாததால், அரசுக்கு சார்பான கலைஞர்கள்கூட அதிருப்தி அடைந்துள்ளனர்.

சிறையில் இருக்கும் ரஞ்சன் ராமநாயக்க, சுதந்திர தினத்தன்று ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யப்படுவார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். எனினும், விடுவிக்கப்பட்டவர்களின் பட்டியலில் ரஞ்சன் ராமநாயக்கவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. இதனை அறிந்த அரசுக்கு நெருக்கமான கலைஞர்கள் சிலர், அமைச்சர்கள் சிலரிடம் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதியிடம் கருணை மனு கொடுத்தும், அது கணக்கில் எடுக்கப்படவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கிடையில் எதிர்வரும் வெசாக் தினத்தன்று ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படலாமென இப்போது தகவலொன்று கசிகின்றது. பார்ப்போம், ரஞ்சன் வெளியில் வருவாரா என்று.


நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
தொடர் கதை

21

# மானத்தீ

○ கருணை ரவி



"என்ர ஐயோ..."

பூங்கொடியின் கதறல் கனகம் வீட்டு அறைகளை நிறைத்தது. கண்ணாடி வைத்திருந்து அரும்பு மீசையை தடவிக்கொண்டிருந்த நித்தி, கண்ணாடியைப் போட்டு விட்டு படலைக்கு ஓடினான்.

நித்திரையாகக் கிடந்த நிருபன் திடுக்குற்று அழுதான். அசை போட்டுக் கொண்டிருந்த மாடு தெருவைப் பார்த்தது.

"என்னம்மா..."

நித்தி விழுந்து கிடந்த தாயைத் தூக்கினான். அவனின் கைகளை இடறிவிட்டுக் கத்தினாள். நிருபன் ஓடிவந்து பூங்கொடியின் மடியில் இருந்தான்.

"ஆவரங்காலிலை ஆமியள் சண்டை பிடிச்சவங்களாம்"

"அதுக்கேன் நீங்கள் அழுறியள்?"

நித்தி தாயை கையில் பிடித்துத் தூக்கினான். அவள் நித்தியின் கையை இடறவில்லை. கனகம் ஓடிவந்து புட்டுக்கு மாக்குழைத்த கையால் பூங்கொடியின் கன்னங்களைத் தடவி

"அவங்கள் சண்டை புடிச்சா உனக்கென்னடி? விடியக்காத் தாலை ஊரக்கூட்டுறாய்"

"மனிசன் மரியதாஸோடை கருவாடு கொண்டு புத்தூருக்குப் போனவர். ஆவரங்காலிலை சுடுபட்டவங்களாம். தெருவிலை ரண்டு பேரை சுட்டுப்போட்டாங்களாம். பிலிப்பு சொல்லிப்போட்டுப் போறான்"

"விசரி, ஆரோ ரண்டுபேரெண்டவுடனை உன்ரை புருசனை நினைக்கிறதே?"

கனகம் பூங்கொடியின் முதுகில் இருந்த மண்ணைத் தட்டினாள். சீலைத்தலப்பால் கண்ணைத் துடைத்தாள். பூங்கொடி முன்பு பருத்தித்துறைப் பொலிஸ்காரர் அடித்த பயத்தில்தான் கத்தினாள். ஓடமாட்டாத பூறாட்டி சிலவேளைகளில் அம்புடுவான் என்ற பயம் இப்பவும் அவளில். பூங்கொடியை வீட்டில் இருத்திவிட்டு கனகம் போனாள்.

மரியதாஸ் அச்சுவேலிச்சந்தி தாண்டி எழுநூற்று ஐம்பது வீதியால் ஆவரங்காலுக்குப் போய்க்கொண்டிருக்கத்தான் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத்தொடங்கின. உடனே மரியதாஸ் மோட்டார் சைக்கிளை நிறுத்தினான். பூறாட்டி கருவாட்டுப்பையை கீழே போட்டு குதித்துக் கெடுதிப்பட்டான்.

இராணுவ வாகனம் ஒன்று பூவரசம் வேலியோடு நின்றது. வாகனத்தில் எந்த இராணுவத்தினரும் இல்லை. புத்தாண்டுக்குக் கேட்கும் வெடிகள் போல பொழிந்தபடி துப்பாக்கிகள் இருந்தன. அப்படியே சைக்கிளைப் போட்டு குனிந்தபடி மரியதாஸ் ஓடினான். பூறாட்டி தவழ்ந்து தவழ்ந்து மரியதாஸோடு பின்னால் போனான். சுவர்க்கரையில் பதுங்கியிருந்த வீட்டுக்காரர் உள்ளே வரும்படி கூப்பிட்டனர். மரியதாஸோடு பூறாட்டியும் உள்ளே போனான்.

வீட்டுக்காரர்களுக்கு நடப்பதொன்றும் தெரியாது. இராணுவத்தினர் வேலிக்கரைகளில் வாகனங்களை நிறுத்திவிட்டு ஊர்மனைக்குள் போய் சுடுகிறார்கள் என மரியதாஸ் அவர்களுக்குச் சொன்னான். அந்தப்பெண் சிணுங்கத்தொடங்கினாள். புருசன் விடியக் கருக்கலில் எழும்பி தோட்டத்துக்குப் போனதாகவும் சொன்னாள். இராணுவ வாகனச்சத்தங்கள் எதுவும் கேட்கவில்லை. நாய்களும் குரைக்கவில்லை என்றும் சொன்னாள்.

துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்து அரை மணித்தியாலம் ஆகியும் எவரும் றோட்டுக்கு வரவில்லை. நாய்கள் அங்குமிங்கும் குரைக்கத் தொடங்கின. பலாலியில் இருந்து வந்த இராணுவத்தினர் பண்டிதரின் முகாமைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர். தெருக்களில் எந்த வாகனங்களுமில்லை. ஐந்துமணிக்கு அச்சுவேலி மினிபஸ் வரும். அதுக்குப்பின்னால் பருத்தித்துறை பஸ்வரும். மயான அமைதியாய் இருந்த தெருவை இராணுவ வாகனங்கள் கலைத்தன. தென்னந் தோப்புகளுக்குள்ளும் குறுக்கு ஒழுங்கைகளுக்குள்ளும் மறைந்து நின்ற வாகனங்கள் போகத்தொடங்கின. அவர்கள் போனதும் கொஞ்சம் கொஞ்சமாகச் சனங்கள் தெருவுக்கு வரத்தொடங்கினர். மரியதாஸ் தெருவில் போட்ட சைக்கிளை எடுக்க வெளியில் போனான். பூறாட்டியும் போனான். கருவாட்டுப்பையை இரண்டு நாய்கள் பிய்த்துக் கொண்டிருந்தன.

> துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்து அரை மணித்தியாலங்கள் ஆனதும் எவரும் றோட்டுக்கு வரவில்லை. நாய்கள் அங்குமிங்கும் குரைக்கத் தொடங்கின. பலாலியில் இருந்து வந்த இராணுவத்தினர் பண்டிதரின் முகாமைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தினர். தெருக்க ளில் எந்த வாகனங்களுமில்லை.

"அடீக்... அடீக்..."

பூறாட்டி நாய்களைக் கலைத்துக்கொண்டு ஓடினான். ஒரு நாய் ஓடிவிட்டது. மற்ற நாய் உறுமியது. கீழே குனிந்து கல்லு ஒன்றை எடுத்து நாய்க்கு எறிய, நாய் ஓடியது. மரியதாஸ் சைக்கிளை நிறுத்தினான். முன்சில்லு காற்றுப்போய் நின்றது. சில்லை சுற்றிப் பார்த்தான். ரயரை துப்பாக்கிச் சன்னம் துளைத்திருந்தது. ஆவரங்கால்ச் சந்திக்குப் போனால் ஒட்டலாம். கால் மைல் ஆவரங்கால் சந்தி. நடந்துதான் போக வேண்டும். பூறாட்டி கருவாட்டுப் பையைத் தூக்கினான். சில இளைஞர்கள் சண்டை நடந்த இடத்துக்கு சைக்கிளில் போனார்கள். மரியதாஸ்சைக்கிளை உருட்டிக்கொண்டு ஆவரங்கால் சந்திக்குப் போனான். பூறாட்டி வேலிக்கரையில் இருந்த கல்லொன்றில் குந்திக்கொண்டிருந்தான். தெருக்களில் போகும் சனங்களின் முகங்கள் கறுத்திருந்தன சோகத்தால்.

நேரம் ஒன்பது மணியாகிவிட்டது. மரியதாஸ் இன்னும் பூறாட்டியிடம் வரவில்லை.. சண்டை நடந்த இடத்துக்குப் போய்வந்தவர்கள் சொன்னார்கள் இயக்கம் இருந்த வீட்டில் இரத்தம் இருப்பதாக. ஒன்பது போராளிகள் அந்த வீட்டில் இருந்ததாகவும் சில போராளிகள் தப்பி ஓடியதாகவும் பண்டிதர் செத்ததாகவும் சொன்னார்கள்.

காலை கேட்ட துப்பாக்கி வேட்டுக்கள்போல பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் சாவச்சேரி பொலிஸ் நிலையத்திலும் கேட்டது. போராளிகள் பொலிஸ் நிலையங்களை தாக்கி அழித்ததுக்குத் தான் இந்த தாக்குதல் என்று சிலர் தெருவில் கதைத்தார்கள். இப்ப பொலிஸ்காரர்கள் இல்லை. ஆமிக்காரர்கள்தான் பொலிஸ் நிலையங்களில் இருப்பதை பூறாட்டி இன்னும் அறியவில்லை.

பருத்தித்துறை வீதியால் பஸ் வந்தது. அதுதான் முதல் பஸ். பஸ்ஸைக்கண்டதும் பூறாட்டிக்குப் பயம் குறைந்தது. அச்சுவேலி மினி பஸ்காரர் பருத்தித்துறை பஸ்ஸோடு போட்டி போட்டுக்கொண்டு வந்தார்கள். சனங்கள் மீன்காரர்களை படலைகளில் பார்த்துக்கொண்டு நின்றார்கள். பூறாட்டி கருவாட்டுப்பையை கழட்டி விரித்து வைத்துக் கொண்டு

"கருவாடு... கருவாடு..." என்றான்.

அவனின் குரலைக்கேட்ட சிலர் வந்து கருவாட்டைப் பார்த்தனர். சிலர் வாங்கினர். பூறாட்டி அரைமணித்தியாலத்துக்குள் கருவாட்டை [illegible] கால் சந்தி [illegible] பக்கத்தில் நின்றது. மரியதாஸ் சிகரட் பத்

திக்கொண்டு இருந்தான். பூறாட்டியும் போய் அவனோடு மதகில் இருந்தான். கராஜ் திறக்கவில்லை. கராஜ் பொன்னம்பலம் வழமையாக ஏழு மணிக்கு வந்து விடுவான். கராச்சைத் திறந்து வைத்திருக்க குலம் வருவான். குலத்தை கூட்டச் சொல்லிவிட்டு பொன்னம்பலம் சந்திக்கடைக்குப் போவான். மூன்று தோசை, ஒரு பிளேன்ரீ குடித்து விட்டு நெஞ்சைத் தடவிக்கொண்டு ஏவறை விட்டு வருவான். குலம் கராச்சுக்கு மஞ்சள் தண்ணி தெளித்து படங்களுக்குப் பூக்கள் வைத்து விட்டு உள்ளுக்கு இருக்கிற சைக்கிள்களை எடுத்து வெளியில் விடுவான். பொன்னம்பலம் வந்து எந்தச் சைக்கிளை கழட்டு என்றால் இந்தச்சைக்கிளை குலம் கழட்டுவான். மரியதாஸ் எந்த சின்ன வேலையென்றாலும் பொன்னம்பலத்திடம்தான் வருவான்.

குலம் வந்தான். கலர்ச்சரமும் அரைக்கைச் சேட்டும் உடுத்திருந்தான். அவன் வேலைக்கு வருகில் அரைக்காற்சட்டையும் ஓயில் படிந்த சேட்டுடனும் வருவான். சைக்கிளை கராஜ் வாசலில் நிறுத்தினான். அவனைக் கண்டதும் மரியதாஸ் சைக்கிளை உருட்டிக்கொண்டு கராச்சடிக்குப் போனான். குலம் கையில் வைத்திருந்த கறுத்தக் கொடியை கடைக்கதவில் கொழுவினான்.

"கராஜ் திறக்கேலையே தம்பி...?"

மரியதாஸ் கேட்க குலம் சொன்னான்

"[illegible]மிக்காரரின்ரை சூடு பட்டு [illegible]மண்ணை செத்துப்போனார்"

(வருவாள்)


## காலம் உறைந்த வீடு

மழையில் நனைந்து
வெயிலில் உலர்ந்து
காற்றில் கலைந்து
பருவங்கள் கடந்து
தன்னைத்தானே
தாங்கி நிற்கிறது
ஆண்டாண்டுகளாக
கைவிடப்பட்ட வீடு.

கறையான்கள் சிலந்திகள்
கரப்பான்கள் எலிகள்
மற்றும் பெருச்சாளிகளுடன்
ஒப்பந்தம் செய்து கொண்டு
உறவாட உயிர்கள் இருக்கிற
சிறு ஆறுதலில்
இனிப் பெரிதாக
வருந்தவோ மகிழவோ
காரணங்கள் அற்று
விரக்தியில் நிற்கிறது
பாழடைந்த வீடு.

அதனை விடவும்
அதிக வயதான
முற்றத்து வேப்பமரத்தின்
உச்சாணிக் கிளையில் நின்று
முழுநிலவொளியில்
இரவுப் பறவை
எழுப்பிய பாடலில்
பார்த்துப் பார்த்து
வீட்டைக் கட்டிய
எசமானியின் வேதனை
கலந்தொலிக்கக் கேட்டு
சிலிர்த்து அடங்குகிறது
சிதிலமடைந்த வீடு.

- ராமலக்ஷ்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்ஷ்டக்காற்று தலிபான்கள் பக்கம்


○ ந.பரமேஸ்வரன்

தலிபான்கள் விடயத்தில் மேற்குலகம் தோல்வி கண்டுவிட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். முன்னாள் பிரிட்டிஷ் பாதுகாப்பு பிரதானியான டேவிட் ரிச்சர்ட்ஸ் (David Richards) "மேற்குலக நாடுகள் விரைவில் தலிபான்களை அங்கீகரிக்கும்; தலிபான்களை அங்கீகரிப்பது சற்றுத் தாமதமானாலும் தங்களது தோல்வியைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு மேற்குலக நாடுகள் தலிபான்களின் அரசாங்கத்தை விரைவில் அங்கீகரிக்கும். ஆப்கான் மக்களுக்காக அமெரிக்கா, தலிபான்களை அங்கீகரித்து அவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் . பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தலிபான்களுடன் இணைந்து பணியாற்ற முடியும். தற்போது ஆப்கானில் உள்ள 40 மில்லியன் மக்களின் பிரதிநிதிகள் தலிபான்கள் தான் .தற்போது ஆப்கான் எதிர்நோக்கியுள்ள மனிதாபிமான நெருக்கடியில் 8 மில்லியன் மக்கள் பட்டினிக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் தலிபான்களை அங்கீகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.



டேவிட் ரிச்சர்ட்ஸ்

இதேவேளை, அமெரிக்காவின் 11படையணிகளுள் ஒன்றான CENTCOM படையணியின் தளபதியாக பைடனால் நியமிக்கப்பட்ட ஜெனரல் எரிக் குரில்லா (Erik Kurilla) ஆப்கானிஸ்தானில் ஐ. எஸ், அல்கெய்டா போன்ற பயங்கரவாதிகளின் இலக்குகளை தாக்குவதற்கு தலிபான்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார்.



எரிக் குரில்லா

ஐ.நா. பாதுகாப்புச்சபையின் கண்காணிப்புக் குழு இவ்வாரம் வெளியிட்டுள்ள 29ஆவது அறிக்கையில் ஆப்கானிஸ்தானில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பயங்கரவாதக் குழுக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உபகண்டத்தில் ஒஸாமா மொஹமட் தலைமையிலான அல்கெய்டா இயக்கம் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான், மியான்மர் போன்ற நாடுகளைச் சேர்ந்த 200 தொடக்கம் 400 வரையான போராளிகளுடன் தலிபான்களுடன் இணைந்து போராடி வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.எஸ் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டதை தொடர்ந்து 2200 தொடக்கம் 4000 வரையான ஐ.எஸ் தீவிரவாதிகள் ஆப்கானின் கிழக்கு பகுதியில் இருந்து தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், அங்கு பல இடங்களை அவர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும், தெற்காசிய மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்தில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சக்தியாக அவர்கள் விளங்குகிறார்கள் எனவும் , கடந்த ஒக்ரோபர் மாதம் ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்த ஒசாமா பின்லேடனின் மகன் , தலிபான்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை நண்பனும் இல்லை என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமெரிக்கா தலிபான்களுடன் கைகோர்க்கிறதா அல்லது எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அடிப்படையில் தலிபான்களுடன் சேர்ந்துள்ளதா என்று தெரியவில்லை.

தலிபான்களை கைக்குள் வைத்துக்கொண்டு ஐ.எஸ், அல்கெய்டா போன்ற பயங்கரவாத இயக்கங்களை அழிக்க அமெரிக்கா முற்படுகிறதா ? இதற்கு தலிபான்களின் ஒத்துழைப்பு எவ்வளவு தூரம் சாத்தியமாகும் ? என்ற கேள்விகளும் எழுகின்றன.

ஆயினும் விரைவில் மேற்குலகம் தலிபான்களை அங்கீகரிக்கப்போகின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. மேற்குலகம் மட்டுமல்ல பாகிஸ்தான் , சீனா போன்ற நாடுகளும் தலிபான்களை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இஸ்லாமிய நாடுகள் ஏற்கனவே தலிபான்களை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கி விட்டன.தற்போது ஐ.நா. சபையில் ஆப்கான் பிரதிநிதியின் இடம் காலியாகவே உள்ளது. விரைவில் ஐ.நா.வும் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவுடன் தலிபான்களை ஆப்கானின் பிரதிநிதியாக அங்கீகரிக்கக்கூடும். தற்கொலைப்படையை தனது இராணுவத்தில் இணைத்திருக்கும் ஒரு நாட்டுக்கு. இராணுவ ஆட்சி நடத்தும் ஒரு குழுவுக்கு விரைவில் சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவுள்ளது. இந்தச்சந்தர்ப்பத்தில் தமிழ் அரசியல்வாதிகளின் முன் பெரும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களின் உரிமைப்போராட்டம் பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்பட்டு. இந்தநூற்றாண்டின் மிகப்பெரும் மனிதப் பேரவலத்துடன் முடிவுக்கு வந்த பின்னரும் ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

> தலிபான்களை அங்கீகரிப்பது சற்றுத் தாமதமானாலும் தங்களது தோல்வியைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு மேற்குலக நாடுகள் தலிபான்களின் அரசாங்கத்தை விரைவில் அங்கீகரிக்கும்.

இறுதியாக நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் இந்தியப் பிரதிநிதி முன் வைத்த '13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்' என்ற விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது எழுந்துள்ள ஆபத்து என்னவெனில், ஒன்றரை இலட்சம் மக்களினதும் பல்லாயிரக்கணக்கான போராளிகளினதும் தியாகங்கள் வெறுமனே'13' உடன் முடக்கப்படப்போகின்றதா என்பதே. எனவே தமிழ்த் தேசியம் பேசுவோர் அனைவரும் ஒன்றிணைந்து பூரண சுயாட்சியை வலியுறுத்த வேண்டும்.



# உயிரோடு புதைக்கப்பட்ட அலெக்ஸாண்டர்!

மாவீரன் அலெக்ஸாண்டர் என்றாலே உடனே நினைவுக்கு வருவது அவரது திடீர் மரணம் தான். ஆனால் அவர் உயிரோடு இருக்கும் போதே புதைக்கப்பட்டுவிட்டார் என்றொரு தகவல் இப்போது வெளிவந்துள்ளது.

தன்னுடைய இறுதிக்காலத்தில் அலெக்ஸாண்டர் ஒருவித நரம்பு நோயால் பாதிக்கப்பட்டார். இதனால் அவரின் உடல் செயற்பாடு முடக்கப்பட்டது. கண்ணை மூடியபடி செயலற்றுக் கிடந்த அலெக்ஸாண்டரின் மூச்சும் பெரிதாகத் துடிப்பைக் காட்டாததால், அவர் இறந்துவிட்டார் என மருத்துவர்கள் அறிவித்து விட்டார்கள். அதனால், அவர் உயிர் இருக்கும் போதே புதைக்கப்பட்டிருக்கலாம் என , அலெக்ஸாண்டரின் நோய்நிர்ணயக் குறிப்புகளை ஆராய்ந்த இப்போதைய மருத்துவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அலெக்ஸாண்டரைப் போலவே, எல்லோருக்கும் தெரிந்த இன்னொருவர் கிளியோபட்ரா. உலகப் பேரழகி அவர். அவருக்கும் அலெக்ஸாண்டருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும். அலெக்ஸாண்டரின் சிற்றன்னைதான் இந்தக் கிளியோபட்ரா.



அலெக்ஸாண்டரின் தந்தையான இரண்டாம் பிலிப் மன்னனின் மனைவியர்களில் கிளியோபட்ராவும் ஒருவர். அலெக்ஸாண்டர் அரியணைக்கு வரக்கூடாது என்பதற்காக கிளியோபட்ரா கொடுத்த குடைச்சல்கள் ஏராளம். ஆனால் இறுதியில் அலெக்ஸாண்டார் அதையெல்லாம் முறியடித்து . பேரரசனாக மாறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஜாப்: பற்றியெரியும் பெருந்தீ!



○ மயூ

இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் இப்போது பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது 'ஹிஜாப்'. இதன் அலைகள் இப்போது இந்தியா முழுவதும் எதிரொலிக்க ஆரம்பித்திருக்கின்றன. ஒவ்வொரு தரப்புகளும் சூடான கருத்துப் பரிமாறல்களை ஆரம்பித்திருக்கின்றன. கர்நாடகா மாநிலமும் இப்போது கொதி நிலையில் இருக்கின்றது. எப்படி இந்த 'ஹிஜாப்' பிரச்சினை ஆரம்பித்தது?

கர்நாடகாவின் உடுப்பி பி.யூ பெண்கள் கல்லூரியில் தான் டிசெம்பர் 27ஆம் திகதி இந்த 'ஹிஜாப்' சர்ச்சை ஆரம்பித்தது. கர்நாடகாவில் உயர்தரக் கற்கைகளை பி.யூ கல்லூரியில் படிக்கிறார்கள் மாணவர்கள். இந்தக் கல்லூரியில் ஹிஜாப் அணிந்து வருவதற்குக் கல்லூரி முதல்வர் ருத்ர கவுடா அனுமதி மறுத்தார் என்று கூறி, எட்டு முஸ்லிம் மாணவிகள் கல்லூரியின் வாசலில் போராட்டம் நடத்தினர்.

அதுவே இந்தப் பிரச்சினையின் ஆரம்பப் புள்ளி. இந்தப் பிரச்சினை தொடர்பாக கருத்துக் கூறிய கல்லூரி முதல்வர்ம் 'கல்லூரி வளாகத்துக்குள் ஹிஜாப் அணிந்து வருவதற்குத் தடை இல்லை. ஆனால், வகுப்பறைக்குள் நுழைந்ததும் ஹிஜாப்பை அகற்றிவிடவேண்டும். வகுப்பறையில் எல்லோரும் சமமே. கல்லூரி சேர்க்கையின்போதே இதைத் தெளிவாகக் குறிப்பிட்டு உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கியிருக்கிறோம்' என்று தெரிவித்தார். போராட்டம் நடத்திய மாணவிகள் இதை மறுத்தனர். சேர்க்கையின்போது கொடுத்த உறுதிமொழிப் பத்திரத்தில் 'சீருடை அணிய வேண்டும். அடையாள அட்டை அணிய வேண்டும்' என்று இருந்ததே தவிர, ஹிஜாப் தொடர்பாக எதுவும் இல்லை என்பது அவர்களின் வாதம். கல்லூரியில் முன்னர் கற்ற பலரும் ஹிஜாப் அணிந்து வகுப்பறையில் பாடங்களைக் கவனித்தார்கள். இப்போது தான் புதிதாகத் தடை விதிக்கிறார்கள் என்கின்றனர் அவர்கள். மாணவிகள் போராட்டத்தைத் தொடர்ந்து ஜனவரி முதலாம் திகதி கல்லூரி வளர்ச்சிக் குழு கூடி விவாதித்தது. வகுப்பறைக்குள் ஹிஜாப் அணிய அனுமதிக்க முடியாது என்று அது முடிவெடுத்தது. இதனால் மாணவிகளின் போராட்டம் தொடர்ந்தது. அதற்குப் பின்னர்தான், இந்தப் பிரச்சினைக்குள்ள மெல்ல மெல்ல அரசியல் நுழைய ஆரம்பித்தது. அரசியல் தலையீட்டால், ஹிஜாப் பிரச்சினை பூதாகரம் எடுத்திருக்கின்றது. உடுப்பி பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் இந்தப் பிரச்சினைக்கு இஸ்லாமியக் கட்சியே காரணம் என்று குற்றஞ்சாட்டுகின்றார். ஆனால் இஸ்லாமியக் கட்சியோ தங்களுக்கு இதில் சம்பந்தமில்லை என்று கூறுகின்றது.

இந்தநிலையில் போராட்டம் நடத்திய கல்லூரி மாணவிகள், மாவட்ட நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்தனர். இதைத் தொடர்ந்து இஸ்லாமியப் பிரதிநிதிகளுடன் கல்லூரி நிர்வாகம் பேச்சு நடத்தியது. 'மாணவிகள் வகுப்பறைக்குள்ளும் ஹிஜாப் அணியலாம். ஆனால், ஆசிரியர் பாடம் நடத்த உள்ளே வந்ததும் ஹிஜாப்பை அகற்றிவிட வேண்டும். அரசு முறையாக ஒரு வழிகாட்டுதல் தரும்வரை இந்த நிலை தொடரும்' என்று அதன்பின் முடிவெடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, போராட்டம் நடத்திய உடுப்பி மாணவிகள் ஆறு பேர் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். கர்நாடகாவில் சில கல்லூரிகளில் சீருடை கட்டாயம், சில கல்லூரிகளில் இப்படி இல்லை. இந்தநிலையில் கர்நாடக அரசு ஓர் உத்தரவை வெளியிட்டது. 'கல்லூரி வளர்ச்சிக் குழு பரிந்துரைக்கும் சீருடையை மாணவ, மாணவிகள் கட்டாயம் அணிய வேண்டும். சமத்துவம், கண்ணியம் மற்றும் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் ஆடைகள் அணிவது தடை செய்யப்படுகிறது' என்று அதில் கூறப்பட்டிருந்தது. ஹிஜாப் அணிவதை இந்த உத்தரவு மறைமுகமாகத் தடை செய்தது. அதையடுத்து இந்த அரசு உத்தரவை எதிர்த்து மேலும் ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்பின்னர் ஹிஜாப் தடை மேலும் சில கல்லூரிகளிலும் பரவியது. முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிந்தால் நாங்கள் காவித்துண்டு அணிந்து வருவோம் என இந்து மாணவ, மாணவிகள் தங்கள் சீருடைக்கு மேல் காவித் துண்டு அணிந்து கொண்டு கல்லூரிகளுக்கு வந்தனர். பா.ஜ.கவின் மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் இதன் பின்னணியில் இருக்கின்றது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்த அமைப்பினர் சிலர் மாணவ, மாணவிகளுக்கு காவித் துண்டுகள் மற்றும் தலைப்பாகைகளை விநியோகிக்கும் வீடியோக்களும் வெளியாகின.

ஹிஜாப் போராட்டம் நடத்தும் மாணவிகளுக்கு எதிராக காவித்துண்டுடன் இந்து மாணவர்கள் திரண்டதால் பல கல்லூரிகளில் சட்டம் ஒழுங்குப் பிரச்னை ஏற்பட்டது. அதையடுத்து உடுப்பி, குந்தாப்புரா, பாலகாடி, கொப்பா, மங்களூர் என ஐந்து கல்லூரிகள் ஹிஜாப்பை தடை செய்தன. இவற்றில் மூன்று அரசு கல்லூரிகள், இரண்டு தனியார் கல்லூரிகள். தட்சின கன்னடா, உடுப்பி ஆகிய இரண்டு மாவட்டங்களில் இது பெரும் பிரச்னையாக உருவெடுத்தது. இதைத் தாண்டியும் பல பகுதிகளுக்கு இந்த சர்ச்சை பரவியது. மாண்டியாவில் முஸ்கான் கான் என்ற மாணவி கல்லூரிக்குள் நுழைந்தபோது காவித்துண்டுடன் பல மாணவர்கள் அவரை வழிமறித்து, 'ஜெய் ஸ்ரீராம்' என்று முழக்கமிட்டதும், பதிலுக்கு அவர் 'அல்லாஹு அக்பர்' என்று முழக்கமிட்டதும் இந்தியா முழுக்க வைரலானது.

"இந்தியாவில் ஒவ்வொரு மதத்தினருக்கும் சுதந்திரம் இருக்கிறது. என் பண்பாட்டை நான் பின்பற்றுகிறேன். அவர்கள் பண்பாட்டை அவர்கள் பின்பற்றுகிறார்கள். மற்றவர்களின் நம்பிக்கைகளை நான் கேள்வி கேட்பதில்லை. அதேபோல என் நம்பிக்கையை யாரும் கேள்வி கேட்கக்கூடாது. ஹிஜாப் அணிவது என் உரிமை" என்கிறார் முஸ்கான்.

கர்நாடகாவின் பல கல்லூரி வளாகங்களில் இந்தப் பிரச்சினை பரவியது. ஒரு கல்லூரியில் தேசியக்கொடி ஏற்றுவதற்காக இருந்த கொடிக்கம்பத்தில் காவிக்கொடியை மாணவர்கள் ஏற்றினர். பிரச்சினை மேலும் தீவிரமடைவதைத் தவிர்க்க, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

ஹிஜாப் சர்ச்சை தொடர்பான ஐந்து வழக்குகளை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி கிருஷ்ண தீட்சித், இதில் இடைக்கால உத்தரவு எதையும் பிறப்பிக்க மறுத்தார். 'அரசியல் சாசனம் தொடர்பான பல கேள்விகளை அடக்கிய வழக்கு இது. பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகள் இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எனவே, கூடுதல் நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்க வேண்டும்' என்று தலைமை நீதிபதிக்கு பரிந்துரைத்துவிட்டார். இதைத் தொடர்ந்து தலைமை நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி, நீதிபதி கிருஷ்ண திட்சித், நீதிபதி ஹாஸி ஜைபுன்னிசா மொஹியுதின் ஆகிய மூன்று நீதிபதி அடங்கிய அமர்வு இதை விசாரிக்க உள்ளது. 18 மாணவிகள் சார்பில் தொடுக்கப்பட்ட ஐந்து வழக்குகளை மொத்தமாக இந்த அமர்வு விசாரிக்கும். ஹிஜாப் அணிவது அரசியல் சட்டப்படி வழங்கப்பட்ட அடிப்படை உரிமையா, சீருடை தொடர்பான கர்நாடக அரசின் உத்தரவு செல்லுமா ? ஆகிய கேள்விகளுக்கு இந்த தீர்ப்பு பதில் சொல்லும். இந்த மூன்று நீதிபதிகள் அமர்வு வழங்கும் தீர்ப்பில் திருப்தி இல்லை என்றால், அடுத்ததாக உச்ச நீதிமன்றத்தில் தான் மேல் முறையீடு செய்ய முடியும்.

இந்தப் பிரச்சினைக்கு முழுக்க முழுக்க அரசியலே காரணம் என்கின்றனர் கர்நாடகாவின் ஒரு தரப்பினர். அரசியல்வாதிகள் தேர்தலை இலக்கு வைத்து இந்தப் பிரச்சினையைக் கிளறி விட்டுள்ளனர் என்கின்றனர் அவர்கள். கொரோனாத் தொற்றால் இரு ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருந்த கல்லூரிகள் இப்போதுதான் திறக்கப்பட்டுள்ளன. இன்னமும் கற்றல் நடவடிக்கைகள் சீராகவில்லை. அரசியல்வாதிகள் தேர்தலைப் பார்க்கின்றனர். மாணவர்களுக்கான தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இறுதியில் பாதிக்கப்படப் போவது ஒட்டுமொத்த மாணவர்களும்தான் என்று கூறுகின்றனர் அவர்கள்.





# ஈழத்தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்து வருகிறது. சில ஆண்டுகளில் ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவின் இரண்டாவது சிறிய தேசிய இனமாக மாறக்கூடிய ஆபத்து உண்டு என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். எனவே ஈழத்தமிழர்கள் குறுகிய காலத்துக்குள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு ஒரு வழிவரைபடத்தைத் தயாரிக்கவேண்டும்.

ஓர் அரசற்ற இனத்தைப் பொறுத்தவரை அல்லது சிறிய தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை பக்கத்துப் பேரரசுதான் இறுதியிலும் இறுதியாகத் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதனை உலகின் நவீன வரலாறு உணர்த்துகிறது. இப்பொழுது கொதி நிலையில் இருக்கும் உக்ரேன் விவகாரத்திலும் இதுதான் நடக்கிறது.

ரஷ்யா கிரிமியாவை ஆக்கிரமித்தது இந்த அடிப்படையில் தான். திபெத்தில்,பலுசிஸ்தானில், காஷ்மீரில் போராடும் மக்களுக்கு மீட்சி கிடைக்காமல் இருப்பதும் அந்த அடிப் [illegible] அந்த அடிப்படையில்தான். [illegible] ஒரு வெளியுறவுக் கொள்கையை வடிவமைக்க வேண்டி வந்ததும் அந்த அடிப்படையில் தான். கிழக்குத் திமோரில் பொதுமக்கள் வாக்கெடுப்பின் முடிவுகளை இறுதியிலும் இறுதியாக நடைமுறைப்படுத்தியது பக்கத்தில் இருக்கும் பலமான அரசாகிய ஒஸ்ரேலியாதான். எனவே சிறிய தேசிய இனங்களின் போராட்டங்களைப் பொறுத்தவரை இறுதி முடிவை தீர்மானிப்பது அருகிலுள்ள பெரிய அரசுகள்தான் என்பதே உலகளாவிய அனுபவம் ஆகும்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் பிராந்திய அரசியலை கெட்டித்தனமாக அணுகவேண்டும். இந்தியாவின் நலன்களுக்கும் ஈழத்தமிழர் நலன்களுக்கும் இடையிலான பொதுப் புள்ளிகளைக் கண்டுபிடித்து பேரம்பேசவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மௌன விழி

70 இலும் உன் மோகனச் சிரிப்பு
பல மௌனமொழிகளின்
ஒட்டுமொத்த மௌனச் சிரிப்போ
முதுமையின் மோனாலிசாவே
மர்மதேசத்தின் மாயக்கிழவியோ
இம்மாய உலகின் துன்பங்களை
மாற்றுமா உன் மாயப் புன்னகை?

**புவனா**, மட்டுவில்.

தமிழ் புலவர் ஔவையாரே
முருகப்பெருமானிடம் சுட்டபழமாய்
நாவற்பழத்தை வாங்கலாம்
அவரின் வாகனத்தின் மயில்
இறகையும் வாங்கலாம் ஆனாலும்
பேரினவாதத்தினரிடம் தமிழ் மக்களின்
உரிமையை மட்டும் வாங்க முடியுமா?

அ.அன்பு, வரணி.

தள்ளாத வயதிலும்– உன்
கண்களில் கண்ணாடி இல்லை
கோல மயிலின்
வண்ணக் கண்ணினால்
வையகத்தைக் கண்டு களிக்கும்
நீயல்லவோ சாதனைகளின் சிகரம்

**கே.கனிஷன்,**
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

இலங்கைத் திருநாட்டின் தாயே
காணாமல் ஆக்கப்பட்ட உன் மகனை
உன் இரு விழியால் தேடி அலைந்து
நரைதளர்ந்த கோலம் ஆகியும்
உனக்குள் அடைகாத்த மகனை
மயில் இறகு கண்ணால் பார்த்தால்
ஆவது அவன் தெரிவான் என்று
பார்க்கிறாயா தாயே?

**ம.தர்விகன்,**
நெளுக்குளம், வவுனியா.

70

மயிலிறகு கண்ணும் உன் கண்ணும்
ஒன்றுபோல் காட்சிதரும் தாயே
மூப்பு எய்தியும் அழகு குறையாத
உன்விழி வெளிநாடு சென்ற
உன் அன்புப் பிள்ளைகளை
தேடுகிறதா தாயே

**ம.பகலவன்**, நெளுக்குளம், வவுனியா.

உடலைவிட்டுக் கழன்ற உயிர்
உயிரை விட்டுக் கழரவிருக்கும் உடல்
இவையிரண்டும் காலம் கடந்த அழகுதான்
காக்க மறவோம்; கண்ணாமூச்சி காட்டோம்

**என். தீபன்**, அரசடி.

வஞ்சனை பாழ்பட
சூதுவாது மாண்டிட
குழிபறிப்பு அழிந்திட
அட்டூழியம் அடங்கிட
பழிவாங்கல் ஒழிந்திட
கைதனில் மயிலிறகு
ஏந்தும் நவயுக ஔவையே
எடுத்துவிடு கவிதனை

**கவிக்கோ வவுனியூரான்**.

நரை திரை எட்டிட
ஏக்கமோ விழிகளில்
கரத்திலோ ஒற்றை
மயில் இறகுடன்
தோற்றமோ
வீறுகொண்ட ஔவை
போல் செப்பிடு

எஸ்.உமாசிவம்
ஏழாலை.

இளம் வயதில் இருந்த
உன் அழகை
முதிய வயதில் மயிலின்
தோகையில் உள்ள இறகில்
பார்த்து ஆனந்தமாய்
சிரிக்கின்றாய்

**நாயகி**, மயிலிட்டி.

அருள்கூறிப் பாடி
அழகு முருகனை
மயிற்சிறகால் - நீயும்
முகம் கொள்வதென்ன
சிரம் தாழ்த்தும் வேலனை
சிவம் என்று நீயும்
எண்ணி எண்ணித்தானோ
எழிலன் மனம் கவர வைத்தாய்

றெ. மலரிசை
நமணங்குளம், மல்லாவி

மங்கையாய்ப் பிறந்திடல்
பாவம் என்ற காலம் மலையேற
முதுமை என்றும் சுமைதான் – என்ற
எண்ணமும் இன்று மாய்ந்திட
மகிழ்வான தருணங்களையும்
மாற்றிட முடியும் என்ற
மந்திரப் புன்னகையோ?

**தி.பாரதி**, நாவற்குழி

**மாய உலகின் மர்மப் புன்னகை**
**மானிட அவலங்களின் மாயப் புன்னகை**
**மயிலிறகில் மறைக்கப்பட்ட உன் துன்பங்கள்**
**உன் கள்ளமற்ற சிரிப்பால்**
**மாற்றும் பல மனங்களை**
**மயக்கும் மூதாட்டி மங்கையே**
**மாறட்டும் மாய உலகின் சாபங்கள்**

க.தில்லை, மட்டுவில் சாவகச்சேரி.

மழை மேகத்தைக் கண்டதும்
தனை மறந்து தோகை விரித்தாடும்
மயில் போல் நீயும் மயிலிறகுதனை
கண்டதும் உனை மறந்து பரவசம்
பொங்க ஒரு கோல மயில்போல்
நீ சிரிக்கும் பொக்கை வாய்ச்
சிரிப்போ ஓர் ஆனந்தச் சிரிப்பு

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

71



கவிதைக்கு பரிசு
1000/=

**உங்கள் கவிதைகள் எங்கள்**
**கதவைத் தட்ட**
**வேண்டிய கடைசி நாள்:**
**18.02.2022**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

பல வண்ணங்களை
உடைய மயிலிறகு
உனது கன்னங்களை
தழுவுவது தனியழகு
பல இன்னல்களை
சந்தித்த உன் வாழ்வு
உன் எண்ணம் போல்
அமைந்திடும் உன் சாவு

**நி.துவாரகன்,**
திருவையாறு

ஊரிழந்து உறவிழந்து தன்னந்தனியே
ஊமையாய் நின்ற போதும்
இறகு போடும் மயிலிறகு தனக்கு
உணவு போடும் எனும் நம்பிக்கை
தள்ளாத வயதிலும்
தளராத மனவுறுதியாய்
உன் கண்ணில் தெரியுது பார்.

**த.தன்ஜா**. மிருசுவில்.

**பரிசு பெறும் கவிதை**


சுருங்கிய தேகம் சுருங்காத தாகமாய்
விரும்புது இதமான இறகுதனை
கடந்து வந்த கனிவான காலமதை
உன் மனக்கண் காண்பதை
உன்முகக்கண் காட்டிடும்
ஆனந்த காட்சி இது அற்புதமே

எஸ்.கோதீசன், திருமலை

முதுமையின் முதிசம்
முகமதில் வெளிச்சம்
மைவிழியின் மெய்விழியால்
மயிலிறகின் விழியதனை
ரசனையுடன் இரசித்திடும்
பழுத்த பைந்தமிழ் பாட்டியுனை
போற்றிடத் தோன்றிடுதே...

**பி.சிவேஸ்**. தண்ணீரூற்று.

# நான் மட்டும் நிற்கிறேன்.....



கீழ் வானை கிழித்தபடி
தொலைவில்,
நகரம் அஸ்தமிக்கிறது.
இங்குவரை வானம்
இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது.
சற்று முன் சென்ற மேகங்களில்

சிங்கமும் புலியும்,
மானும் மயிலும்
ஒன்றுடன் ஒன்று,
ஒன்றின் மேல் ஒன்றென
விரை[illegible]
அவற்றுடன்,

பறந்து கொண்டிருந்த
பறவைக் கூட்டமும்
கூடடைந்துவிட்டது.
நான் மட்டும் நிற்கிறேன்.
[illegible]வியபடி
[illegible]ளைக்
கடந்து செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபத்தின் வயது 24

நிலவிந்தன்

சஞ்சீவி சிறுகதை



இந்த மனிதர்கள் நான் பார்க்காதவர்கள். அதிசயங்களாக வளர்ந்து கிடக்கும் இந்தக் கட்டடங்கள், பாதைகளின் இருபக்கங்களும் மூடிக் கொண்டு வரும் பிரமாண்டங்கள். பாரிஸ் நகரின் வர்ணச் சாயல்களை இங்கேயும் பார்க்க முடிகிறது. ஒரு இருபத்து நான்கு வருடங்கள் இருக்கும். அதற்குள் எல்லாம் மாறியிருந்தன. சிலிர்த்தபடி இருக்கும் சிங்கத்தின் தலை, யுத்தத்தை காரணம் காட்டி, கடனும் வாங்கி, தன் பொக்கற்றையும் நிறைத்துவிட்டது. ஆனால் நாடு..? "எங்கட சொந்த நாடு தானே..." என்று நினைத்து கண்களை விழித்துப் பார்த்துக் கொண்டு வந்தான் செல்லையா.

அவன் இப்போது பாரிஸ் சிட்டிசன். தான் அவதிப்படும் மனக்குழப்பத்துக்கு முடிவு காணத்தான் மீள வந்து கொண்டிருக்கிறான். இந்தப் புறப்பாடு அவசர அவசரமானது. சத்தியமாக நல்ல காரியம் என்று சொல்ல முடியாது. தலதா மாளிகை இரவு ஊர்வலத்தில் காணாமல் போன குழந்தை போல, அவன் கண் கலங்குவதற்கும் கலங்காமல் இருப்பதற்கும் இடைநடுவில் இருந்தது.

இந்த நகரமெல்லாம் மாறிப் போய்விட்டது. அங்கு போகின்றவர்களெல்லாம் மீண்டும் மீண்டும் பார்த்தாலும் யாரோ போலத் தான் தெரிகின்றார்கள்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இறங்கி தாயக மண்ணில் பாதம் வைத்த செல்லையாவின் உள்ளம் வார்த்தைகளால் விபரிக்க முடியாத மனக்குமுறலைத் தந்தது.

அங்கிருந்து வாடகைக் கார்ப் பயணம் யாழ்ப்பாணம் நோக்கித் தொடர்கிறது.

செல்லையாவின் கண்கள் அகல விரிந்து சாலை ஓரங்களை கண்டு கொள்கின்றன. வழியெங்கும் புத்தர் சிலைகள். அரசமர நிழல்கள் அவரை வருடிக்கொண்டிருக்கின்றன. எல்லோரது செயல்களிலும் ஒரு அவசரத்தனம். பரபரத்தபடி பறந்து கொண்டிருந்தார்கள். சைக்கிள்களை காணவே முடியவில்லை. கார்கள் தான் பெருகிப் போயிருந்தன வீதிகளில். சந்திக்குச் சந்தி சுப்பர் மார்க்கெட்டுகள் முளைத்திருந்தன. எல்லா வீதிகளிலும் ஒரே வாகன நெரிசல். செல்லையாவின் பார்வை வீதியில் குத்தியிருக்க, நினைவுகள் பொன்னம்மாவிடம் அடிக்கடி இடம் பெயரத் தொடங்கின.

பொன்னம்மாவுக்கு திடகாத்திரமான தோற்றம். நீளமாக வளர்ந்த கருமை சூடிய தலை மயிர். கருப்பட்டித் தேத்தண்ணியும், சீனி போட்ட அப்பமும் பொன்னம்மாவின் கைபட்டால் தனி ருசி. அந்த ருசி இப்போதும் செல்லையாவின் நாவில் வழியத் தொடங்கியது. பின்னர் அந்த ருசியின் நினைவில் தோன்றிய பொன்னம்மாவின் உருவம் அவன் கண்களில் நீரைக் கசியச் செய்தது.

இப்போது அவள் வீட்டில் இருக்க மாட்டாள்.

நிலைகுத்திய வெறித்த பார்வையோடு, நீட்டி நிமிர்ந்து படுத்திருப்பாள். "செல்லையா வருவான், என் மகன் செல்லையா வருவான். பேரக்குழந்தைகளை கூட்டி வந்து என் மடியில் தவழவிடுவான்." என்ற ஏக்கம் தீராமலே அவளின் உயிர் தீர்ந்து போயிருந்தது.

பாரிஸில் வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்த நேரம். அப்போது சூரியனும் இல்லை. அசைந்து போகும் காற்றும் இல்லை. செல்லையாவுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு.

"பொன்னம்மாக்கா தவறிட்டா ..."

அந்த அழைப்போடு, செல்லையா இரண்டு பிள்ளைகளையும், மனிசியையும் விட்டுட்டு, தான் மட்டும் தனியே இலங்கைக்குப் புறப்பட்டான்.

இதற்கு முன்னரும் அவன் பொன்னம்மாவைப் பார்க்கப் போயிருக்கலாம். ஆனால் போகவில்லை. காரணம், பொன்னம்மா அவனுக்கு ஊட்டிய பாலில் அதிகளவில் ரோசமும், இறுமாப்பும் கலந்திருந்தது. அந்த ரோசம் தாயைப் பார்க்கப்போகவிடாமல் செய்துவிட்டது.

பொன்னம்மாவும் சளைத்தவளில்லை. அதே ரோசமும், இறுமாப்பும் தான் அவளுக்கும். கூடவே சாதித்தடிப்பும். அதுமட்டும் செல்லையாவிடம் ஏனோ ஒட்டிக் கொள்ள மறுத்தது. ஆனால் பொன்னம்மா சாதிக்காக எதுவும் செய்யும் ஒருத்தியாக இருந்தாள். உயிரை விடவும் அவளுக்கு சாதி முக்கியமாக இருந்தது.

பொன்னம்மாவுக்கு எந்தளவு திமிரோ அந்தளவு அழகும் இருந்தது. வெள்ளையோ! வெள்ளை அப்பிடியொரு வெள்ளை. 'யாழ்ப்பாணத்து பெண்களும் உந்த நிறத்தில் இருக்கினமோ? 'என்று கேட்கும் அளவு நிறம்.

**பொன்னம்மாவும் சளைத்தவளில்லை. அதே ரோசமும், இறுமாப்பும் தான் அவளுக்கும். கூடவே சாதித்தடிப்பும். அதுமட்டும் செல்லையாவிடம் ஏனோ ஒட்டிக்கொள்ள மறுத்தது. ஆனால் பொன்னம்மா சாதிக்காக எதுவும் செய்யும் ஒருத்தியாக இருந்தாள். உயிரை விடவும் அவளுக்கு சாதி முக்கியமாக இருந்தது.**

பொன்னம்மாவின் கணவர் கைலாசபிள்ளை. இரண்டு மகன்கள். இரண்டு பேரும் வளர்ந்து இளந்தாரியாக மாறுகையில், கைலாசபிள்ளை வருத்தம் வந்து ஒருநாள் இறந்து போனார். மூத்தவன் கனகய்யா. அவன் இயக்கத்துக்கு போய் சேர்ந்திட்டான். கொஞ்சக் காலம் தொடர்பு இருந்தது. பிறகு தொடர்பே இல்லாமல் போய்விட்டான். இன்னும் அவன் இருக்கிறானா இல்லையா என்பது எவருக்கும் தெரியாது.

இளையவன் செல்லையா. பொன்னம்மாக்கு அவன் மீது தான் பாசம் அதிகம். செல்லையாவும் அப்படித்தான். "பொண்ணாச்சி...பொண்ணாச்சி..." என்று தாயைக் கொஞ்சி குலாவுவான். மூத்தவன் போல இளையவனும் இயக்கத்துக்கு போடுவானோ? என்ற அச்சமும் பொன்னம்மாவுக்கு இருந்தது. எப்படியாவது செல்லையாவை வெளிநாடு அனுப்ப வேணும் என்ற ஏற்பாடுகளையும் மேற்கொண்டாள். அதற்குள் இன்னொரு விபரீதம். செல்லையாவின் காதல் தான் அது. அந்தக் காதல்கதையைக் கேட்டதும் பொன்னம்மா பத்திரகாளியானாள்.

இதற்கு முன்னரும் அவள் இதேபோல உக்கிரம் கொண்டிருந்தாள். தனது தம்பி நடேசபிள்ளையின் மகள் தாரணி, தம்மைவிட ஒரு சாதியில் குறைந்த பெடியனைக் காதலிப்பதாக கேள்விப்பட்டதும் பொன்னம்மா கொண்ட கோபத்தை ஊரே அறியும். அப்போது தாரணிக்கு வெறும் இருபது வயதுதான். வீட்டில் பிரச்சினை. அதனால் தன் காதலனோடு சொல்லாமல் கொள்ளாமல் ஒருநாள் ஓடிப் போய் விட்டாள். வேலணையில் அவள் இருப்பதாக தகவல் கிடைத்ததும் நடேசபிள்ளை, தமக்கையிடம் தான் ஓடி வந்தார்.

"அக்கா, இப்பிடிச் செய்துபோட்டாளே அவள்! எங்கட குடும்ப மானமே போட்டுதே. உவளைக் கொண்டாலும் ஆத்திரம் தீராது" என்று புலம்பினார். தாரணியின் காதல் விவகாரத்தைக் கேட்டதும் பொங்கியெழுந்த பொன்னம்மா, இப்போது அவள் ஓடிவிட்டாள் என்ற செய்தி வந்தபோது, மிக அமைதியாக இருந்தாள். அவளின் அமைதி ஊர்க்காரர்களுக்கு பெரும் ஆச்சரியம். அதைவிட ஆச்சரியம், ஓடிப்போன தாரணி இருக்குமிடத்துக்கு போய்,

"சரிபிள்ளை, நடந்தது நடந்திட்டு. அதுக்காக இப்பிடி ஓடிப் போறதோ? நீ வீட்ட வா. நான் அண்ணையிட்ட சொல்லி, உந்தப் பெடியனை முறையாக் கலியாணம் கட்டி வைக்கிறன்" என்று வாக்குறுதியளித்து, அவளைத் தன்னோடு கூட்டி வந்ததுதான்.

ஆனால் அந்த ஆச்சரியமெல்லாம் ஒருநாள் உடைந்து போனது. அன்றைக்கு தாரணி கிணற்றில் வீழ்ந்து இறந்து போனாள். தாரணியின் வயிற்றில் இருந்த கருவை பொன்னம்மா இரகசியாமாகக் கலைத்ததும், தனது சாதியைச் சேர்ந்த இன்னொரு பெடியனுக்கு அவளைக் கலியாணம் கட்டிக் கொடுக்க பொன்னம்மா போட்ட திட்டமும் தெரியவந்ததாலேயே, தாரணி இப்படி ஒரு முடிவை எடுத்தாள் என்று ஊரவர்கள் பேசிக் கொண்டார்கள்.

தம்பியின் மகள் விடயத்திலேயே இப்படி நடந்து கொண்ட பொன்னம்மா, மகனின் விடயத்தில் சாதாரணமாக நடந்து கொள்வாளா?

செல்லையாவுக்கு பயம் வந்தது. ஆனாலும் பொன்னம்மாவின் வியூகம் வேறாக இருந்தது.

'இஞ்ச இருந்தால் தானே சாதி குறைஞ்ச பெட்டையைக் காதலிச்சுக் கட்டுவான். வெளிநாட்டுக்கு அனுப்பினால் எல்லாம் முடிஞ்சிடும்"

அவசரமாக காசு ஒழுங்கு பண்ணினாள். அவனை வெளிநாட்டுக்கு போகச் சொன்னாள்

"ஏன் என்னை அனுப்பிறாய்? நான் இயக்கத்துக்கு போடுவன் எண்டோ இல்லாட்டி சாதி குறைஞ்ச பெட்டையை காதலிக்கிறன் எண்டோ? நான் இஞ்ச படிச்சு இஞ்சையே உழைக்கிறன். உன்னோட இருக்கோணும் அம்மா நான்" என்று செல்லையா எவ்வளவோ கேட்டும் அவள் மசியவில்லை.

"நீ வெளிநாடு போகாட்டி என்னை உயிரோட பாக்கேலாது..." பொன்னம்மா ஒரு கௌரவப் பேய். அவள் முடிவெடுத்தால் எடுத்ததுதான். நாகத்தைப் போல சீறும் அவளிடம் இரக்கத்தை எதிர்பார்க்க முடியாது. வெளிநாடு போகச் சம்மதித்தான். காதல் அத்தோடு போயிற்று என பொன்னம்மா நினைத்தாள். ஆனால் வெளிநாடு போனவன், அந்தப் பிள்ளையை அடுத்த சில வருடங்களிலேயே அங்கே கூப்பிட்டான். க... ...ணமும் கட்டினான். இதைப் பொன்னம்மா எதிர்பார்க்கவில்லை. அத்தோடு அவனோடு பேசுவதை நிறுத்தினாள். அவனும் போன் எடுப்பதில்லை. ஆனால் பின்னர் பொன்னம்மா தனிமையில் மகனுக்காக உருகியதும், அவன் மனம் மாறி வருவான் என ஏங்கியதும் செல்லையாவுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இப்போது 24 வருடங்களுக்கு பிறகு மீண்டும் ஊருக்குள் நுழைகிறான் செல்லையா.

இருபத்து நான்கு வருடக் கோபமும் கொப்பளிக்க, இறங்கி உள்ளே ஓடினான். "எடி அம்மா, என்னை ஏன் கலைச்சனீ? இஞ்ச இருந்தால் உன்னோட இருந்திருப்பனே. நீயும் இப்பிடி அநாதை மாதிரி செத்திருக்க மாட்டியே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியின் இரகசியம் என்ன?



○ ஆர்.லயனல்

இந்திய அணிக்குள் ஏற்பட்ட பிடுங்குப்பாடுகள் இன்னும் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை. இப்படியிருக்கையில், தற்போது ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்குள்ளும் ஏகப்பட்ட பிடுங்குப்பாடுகள் புதிதாக வெடித்துள்ளன.

ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளராகச் செயற்பட்ட ஜஸ்ரின் லாங்கர் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் பதவி விலகினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆஸ்திரேலிய அணிக்கு லாங்கர் வழங்கிய பங்களிப்பு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆஸ்திரேலிய அணி விளையாடியபோது பந்தைச் சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கியது. இதையடுத்து அப்போதைய அணித் தலைவர் ஸ்மித், உபதலைவர் வோர்ணர், பந்தைச் சேதப்படுத்திய வீரரான பான்குரொப்ட் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டனர். அப்போதைய பயிற்சியாளராக இருந்த டெரன் லீமனும் பதவி விலகினார். இதையடுத்து அணியைப் பொறுப்பேற்றார் லாங்கர்.

லாங்கர் அணியைப் பொறுப்பேற்ற போது முழுக்கமுழுக்க மாறுபாடான உளவியல் போரை ஆஸ்திரேலிய அணி சந்தித்தது.

இந்தப் பின்னடைவான நிலையில் இருந்து அணியை மீட்டெடுக்க வேண்டிய பெரும்பொறுப்பு லாங்கரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஊடகங்களின் சொற்கணைகள், ரசிகர்களின் சீண்டல்கள் இவையனைத்தையும் லாங்கர் தன் நெஞ்சில் தாங்கிக்கொண்டார். ரிம் பெய்ன் தலைமையில் முற்றிலும் மாறுபாடான பலமற்ற அணியை அவர் திரும்பக் கட்டமைத்தார். ஆஸ்திரேலியக் கிரிக்கெட்டில் அதுவரை இல்லாத 'மைதான ஒழுக்கம்' என்பதை லாங்கர் தன் பயிற்சியின் முதன்மைச் சித்தாந்தமாகக் கொண்டார். இந்த மைதான ஒழுக்கத்துக்காக பல நெருக்குவாரங்களை லாங்கர் வீரர்களுக்குக் கொடுத்தார்.

'கடுமையான பயிற்சியாளர்' என்ற பெயருடன் ஆஷஸ், ரி-20 உலகக் கிண்ணம் உள்ளிட்ட முக்கிய கிண்ணங்களை லாங்கர் கைப்பற்றினார். ஆனால், அணியின் ஓய்வறையில் வீரர்களுக்கும் லாங்கருக்கும் இடையிலான உறவானது, இலங்கை அணிக்கும் மிக்கி ஆர்தருக்கும் இடையிலான உறவைப்போன்றோ அல்லது, இந்திய அணிக்கும் ரவிசாஸ்திரிக்கும் இடையிலான உறவைப்போன்றோ நெருக்கமானதாக இருக்கவில்லை. ஒரு இடைவெளி = விரிசல் = விழுந்தேயிருந்தது.

இந்த விரிசல்தான் இன்று மெல்ல மெல்லத் தீவிரம்பெற்று கடந்த ஆஷஸ் தொடருடன் லாங்கரின் பதவிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. அணித்தலைவர் கம்மின்ஸுக்கும் லாங்கருக்கும் இடையிலான மோதல்தான் இந்தப் பதவி விலகலுக்கு முதன்மைக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. மிச்செல் ஜோன்சன், ஹைடன் உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் இந்தக் குற்றச்சாட்டை வெளிப்படையாகவே முன் வைத்துள்ளனர். ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களை கம்மின்ஸ் திட்டவட்டமாக மறுக்கவில்லை.

'லாங்கரே தனது பயிற்சி கடுமையானது என்று ஏற்றுக்கொண்டுவிட்டார். வீரர்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார். அவர் மன்னிப்புக் கேட்கத்தேவையில்லை. அவரை நாம் புரிந்துகொள்கின்றோம். நீங்கள் (முன்னாள் வீரர்கள்) உங்கள் வீரர்களுக்காகப் போராடியது போன்று நான் எனது வீரர்களுக்காகப் போராடுகின்றேன்' என்று தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் கம்மின்ஸ். ஆக, ஏதோவொரு புகைச்சல் இந்தப் பதவி விலகலுக்குப் பின்னால் இருக்கின்றது என்பதை கம்மின்ஸின் கருத்துக் கட்டியம் செய்கின்றது.

பந்தைச் சேதப்படுத்தி தடைபெற்ற ஸ்மித், வோர்ணர் மீண்டும் தலைமைத்துவங்களைப் பெறுவதை எதிர்ப்பவர்களில் லாங்கரும் ஒருவர். ஆஷஸ் தொடருக்கான ஆஸ்திரேலிய அணிக்கு கம்மின்ஸின் தலைமையின் கீழ் ஸ்மித் உபதலைவராக நியமிக்கப்பட்டார்.

கம்மின்ஸ் ஓர் ஆட்டத்தில் விலக ஸ்மித் அணியை வழிநடத்தினார். இதுதான் இந்தக் கருத்து மோதல்களுக்கான விதையா? என்ற கேள்வி எழுகின்றது. கம்மின்ஸ் குறிப்பிடும், 'நீங்கள் (முன்னாள் வீரர்கள்) உங்கள் வீரர்களுக்காகப் போராடியது போன்று நான் எனது வீரர்களுக்காகப் போராடுகின்றேன்' என்ற கூற்று ஸ்மித்துக்கானதா? என்பது இன்னும் சில நாள்களில் தெரிந்துவிடும். ஏனெனில் ஆஸ்திரேலிய கிரிக்கெட்டில் இரகசியங்களுக்கு ஆயுள் மிகக்குறைவு. ■

# ஆயுள் அதிகம்தான்!



○ ஆர்.பிரகாஷ்

கொரோனாப் பெருந்தொற்றுக்கு இந்த வருடத்துடன் முடிவு கட்டப்படும் என்று அறிவித்துள்ள உலக சுகாதார நிறுவனம், அதற்குரிய திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த நிலையில், உலக சுகாதார நிறுவனத்தினதும் உலக நாடுகளதும் முதன்மை நோக்கமான 'கொரோனா அற்ற 2023' சந்தேகமே என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது கனடாவில் பாரவூர்தி ஓட்டுநர்கள் முன்னெடுத்துள்ள போராட்டம்.

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கட்டாயத் தடுப்பூசித் திட்டத்தை கனடாவில் அறிவித்துள்ளார். அங்கு பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த வேண்டுமாயின் கட்டாயம் தடுப்பூசியைப் பெற்றிருக்க வேண்டும்.

தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத பாரவூர்தி ஓட்டுநர்கள் பணியில் ஈடுபட முடியாது. அவர்கள் கட்டாயத் தனிமைக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்தச் சட்டம் தமது வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றது என்று தெரிவித்து பாரவூர்தி ஓட்டுநர்கள் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக அங்கு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆரம்பத்தில் கனடாவின் புறநகர்களில் இடம்பெற்ற இந்தப் போராட்டம் தற்போது தலைநகர் ஒட்டாவாவில் தீவிரம் பெற்றுள்ளது. இதையடுத்து பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ பாதுகாப்புக் காரணங்களுக்காக இரகசிய அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்தே தன் அலுவலகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

தடுப்பூசித் திட்டத்தைக் கைவிடும் எண்ணம் இல்லை என்று ஜஸ்ரின் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், போராட்டத்தைக் கைவிடும் எண்ணமும் தமக்கில்லை என்று பதிலளித்துள்ளனர் ஓட்டுநர்கள்.

இதையடுத்து போராட்டம் நாளுக்கு நாள் தீவிரம் பெறுவதற்கான அனைத்து முகாந்திரங்களும் அங்கு தீவிரமாகத் தென்படுகின்றன.

கனடாவில்தான் இந்த நிலையென்றால், அமெரிக்கா, நியூஸிலாந்திலும் கட்டாயத் தடுப்பூசித் திட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ளன. அதிலும் கொரோனாவின் முதலாவது அலையைத் திறமையாகக் கட்டுப்படுத்திய நாடு என்ற பெருமையை முதன்முதல் பெற்றிருந்த நியூஸிலாந்தில் தடுப்பூசிக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ளமையானது, இந்தத் திட்டத்தை படுதோல்வியை நோக்கித் தள்ளும் அதே வேளை, உலகளாவிய ரீதியில் கட்டாயத் தடுப்பூசித் திட்டத்துக்கு ஏற்பட்ட ஆதரவு அலைகளை அடியோடு இல்லாமற் செய்துவிடக் கூடும்.

கட்டாயத் தடுப்பூசித் திட்டங்களில் இந்தப் போராட்டங்கள் தொய்வு நிலையை ஏற்படுத்தியுள்ள நிலையில், மறுபுறம் கொரோனாக் கொத்தணிகள் ஏற்படக்கூடிய ஏதுநிலைக [illegible] ன. [illegible] அமெரிக்கா, நியூஸிலாந்து, கனடா ஆகிய நாடுகள் பெரும் பங்காற்றுவதென்று உறுதியளித்திருந்தன. எந்தவொரு நாடும் தன் நாட்டில் தடுப்பூசித் தேவை இருக்கையில் அதைப் பிற நாடுகளுக்குப் பகிர்வதற்கு முன்வரமாட்டாது. இந்தப் போராட்டங்களால் ஏற்படப்போகும் கொத்தணிகள் பெருமளவு தடுப்பூசிகளுக்கான தேவையை ஏற்படுத்தப்போகும் அதேவேளை மேற்படி நாடுகள் பிற நாடுகளுக்குப் பகிர்வதற்கு ஒப்புக்கொண்ட தடுப்பூசிகளை உரியவாறு பகிர்ந்தளிப்பது எவ்வாறு சாத்தியம் என்ற கேள்வியையும் ஏற்படுத்தியுள்ளது. ஆக, கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் கடந்த இரு வாரங்கள் தோற்றம் பெற்ற தடுப்பூசிக்கு எதிரான 'உலகளாவிய' போராட்டம் பெரும் பின்னடைவை- எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது நிதர்சனம். இந்த பிற்போக்குத்தனத்தால் - போராட்டங்களால் - அடுத்த ஆண்டிலும் மாஸ்க்குகளும் தொற்றுநீக்கித் திரவங்களும் தொடர்கதையாகலாம். கொரோனாவின் ஆயுள் அதிகம் தான்போலும்...! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





● தி.செல்வமனோகரன்

# ஊஞ்சல்

"வீசி ஆடும் ஊஞ்சலாம்
விண்ணில் ஆடும் ஊஞ்சலாம்
ஆசை யக்கா பார்க்கவே
அன்புத் தம்பி ஆடுவான்

பாலர் ஏறி ஆடலாம்
பாடிப் பாடி ஆடலாம்
நீல வானில் தாவியே
நிலாவில் ஊஞ்சல் ஆடலாம்"




தயவுசெய்து நீங்கள் எல்லோரும் கண்களை மூடுங்கள். மனதால் உங்களின் பத்துவயதுக்கு முந்திய பராயத்துக்குப் பயணம் செய்யுங்கள். வீட்டு முற்றத்தில் அல்லது பின்புறத்தில் வளைந்து தாழ்ந்த மரக்கொப்பில் அந்த ஊஞ்சல் .அதில் நீங்கள். உங்களை ஊஞ்சலில் வைத்து யாரோ உயர உயர ஆட்டுகிறார்கள். மனதில் பீதியும் மகிழ்ச்சியும் கண்களில் கண்ணீரும் எதுவெனச் சொல்லமுடியாத உணர்வு நிலையுமாகக் கத்திக்கொண்டோ அல்லது கத்தவும் முடியாமலோ நீங்கள் ஆடிக்கொண்டிருக்கிறீர்கள். அந்தக்காலத்தில் ஊஞ்சல்தானே எங்களுக்கு எல்லாமுமாக இருந்தது.

தொன்மை மனிதனின் முதல் ஊஞ்சல் ஆல் முதலானவற்றின் விழுதுகளாகவோ அன்றி மேலிருந்து கீழ்நோக்கித் தொங்கும் கொடிகளாகவோ இருந்திருக்கவேண்டும். ஆலம் விழுதை கைகளால் இறுக்கப் பிடித்தபடி காலால் உன்னி ( உந்தி அல்லது உதைத்து) காற்றில் தாவும் குரங்குத்தனம் இன்னும் எம்மிடம் இருக்கிறது. அது தரும் மகிழ்ச்சியே அலாதியானதுதான். அதேபோல மரத்தின் பதிவாயுள்ள கொப்பு, சிறிய தென்னையில் தொங்கும் ஓலை போன்றவை சிறுவர் ,சிறுமியரின் இயற்கை ஊஞ்சல்களாகத் திகழ்கின்றன.

ஊசல் - ஊஞ்சல் இது அலைதல் எனப்பொருள்படும் சிறுவயதில் விஞ்ஞான ஆசிரியர் படிப்பித்த "ஊசல் குண்டை"ஞாபகம் கொண்டால் இது விளங்கிவிடும். ஊஞ்சலை "துரிவை, துடுப்பு, தூரி, விண்டாடு" எனும் சொற்களால் சுட்டும் வழக்கமுண்டு ஊஞ்சல் முதலில் ஆடலாக விளங்கிப் பின் ஊஞ்சல் பாடலாகியது. காலவோட்டத்தில் அது ஆடலாகவும் பாடலாகவும் திகழ்கிறது.

வீட்டில் அல்லது வளவுகளில் நிற்கும் மா, வேம்பு, இலுப்பை மற்றும் ஆல், புளி, வேங்கை மரங்களிலும் உள்ள உறுதியான தாழ்ந்த கொப்புக்களில் ஊஞ்சல்கள் கட்டப்பட்டன. முன்பு, தாழைநார், பனை நார் போன்றவற்றாலும் வைரமான கொடிகளாலும் ஊஞ்சல்கள் கட்டப்பட்டன. பின்பு தாம்புக்கயிறு, தேடா வளையக்கயிறு, நைலோன் கயிறு முதலியன பயன்படுத்தப்பட்டன. நாரும் கயிறும் ஊஞ்சல் ஆடும் போதோ வேகமாக இறங்கும் போதோ தொடைகளை வெட்டியோ அன்றி கண்டற்படுத்தியோ விடுவதும் உண்டு. நீண்ட நேரம் ஊஞ்சல் ஆடும் போது பின்புறத்தில் நோவெடுக்கும். இதனால் மரத்தில் இருந்து விழுந்த தென்னம்மட்டையை ஊஞ்சலின் அகலத்துக்கேற்ப வெட்டி அத்துண்டின் இரு கரையினதும் நடுப்பகுதியில் சற்றுப் பள்ளத்தை ஏற்படுத்தி கயிற்றில் செருகி ஆடுவர். சிலவேளைகளில் மட்டை பிளந்து கயிறு எமது பின்புறத்தில் காயத்தை ஏற்படுத்தும். அதேபோல கருக்கு வெட்டிய மட்டையை வைத்து ஆடுதலுமுண்டு. சிலவேளைகளில் அது வழுக்கி விழுத்திவிடும். கை கால்களில் சிராய்ப்பு ஏற்பட்டு ஏச்சு, அடிவிழும் என வீட்டுக்குப் பயந்து அழாமல் அடக்கி வாசித்தலும் உண்டு. இவற்றுக்குப் பதிலாக சாக்கு, உரப்பை, தலையணை என்பவற்றை வைத்து ஊஞ்சல் ஆடப்பட்டது. குறிப்பாக குழந்தைகளுக்குப் பாதுகாப்பானதாக இவை கருதப்பட்டன. எவ்வளவு பயம் என்றாலும் காயங்கள் வந்தாலும் ஊஞ்சல் ஆடும் ஆசை எம்மை விட்டு விடப்போவதில்லை.

சிறுவர், சிறுமியரை ஊஞ்சலில் வைத்து ஆட்டியபடி பாடம் சொல்லிக் கொடுப்பர்: பாடல்களைப் பயில்விப்பர். சகோதரர்கள், அயல் சிறுவர், சிறுமியர் கூடிவிளையாடும் உல்லாசப் பொழுதுபோக்கிடமாக, வெயிலில் அலைதலில்லாததாக ஊஞ்சல் விளையாட்டு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. வளர்ந்தவர்கள் ஊஞ்சலில் சிறிது ஆடியபடி படிப்பதுமுண்டு. ஒற்றைக்கயிற்றில் வாகனங்களின் ஒற்றை ரயர், றிம் மற்றும் மரம், இரும்பு என்பவற்றாலான சக்கரங்களைக் கட்டி அதனுள் இருந்தபடி ஊஞ்சல் ஆடுதலும் உண்டு.

ஊஞ்சலில் ஆடுதல் மனச்சோர்வில் இருந்து விடுபடவும் மகிழ்ச்சியான மனநிலையைப் பேணவும் உதவுகின்றது. இரத்தோட்டம், மூச்சுவிடுதல் என்பன சீராகின்றன. தானாக உந்திப்பறந்து ஆடுதல் தன்னம்பிக்கையை வளர்க்கிறது. வசதிகுறைந்த மக்களின் சிம்மாசனம் ஊஞ்சல் எனலாம்.

வசதி வாய்ப்புக்கேற்பவும் காலத்திற்கேற்பவும் ஊஞ்சல் உருமாறத் தொடங்கியது. மரத்தில் கட்டும் ஊஞ்சல்களில் இருக்கையான தடித்த மரப்பலகைகள் பொருத்தப்பட்டன. பலகையின் இருமருங்கும் துவாரமிட்டு அதனுள் கயிற்றைச் செலுத்தி முடிச்சிட்டு அல்லது பலகையில் சிறிய இரும்பு வளையம் பொருத்தி அதில் கயிற்றை முடிச்சிட்டு ஊஞ்சலை அமைத்தனர். கல்வீடுகள் உருவான போது வரவேற்பறையில் பலகை ஊஞ்சல்கள் அமைக்கப்பட்டன.

வீட்டு வளையில் சங்கிலி பொருத்தி ஒருவர் கால் மடக்கிப் படுக்கக்கூடிய நீள அகலமுடைய பலகையை இரும்புச் சட்டகத்தில் பொருத்தி அதனை சங்கிலியோடு பிணைத்து அவை உருவாக்கப்பட்டன. பின்பு இரும்பில் அல்லது மரத்தில் உருவாக்கப்பட்ட கால்களில் பொருத்தப்பட்ட வளையில் இவ்வூஞ்சல்கள் பிணைக்கப்பட்டன. தேவையற்ற காலத்தில் கழற்றியும், தேவைப்படும் போது பொருத்தியும் இவை உபயோகிக்கப்பட்டன. முதியவர்களின் குட்டித்தூக்கம், சிறுவர்களின் கல்விக்கூடம், உணவுக்கூடம், உண்டபின் இளைப்பாறும் இடம் என இம்மர வூஞ்சல் பல்வகையில் அவ்வவ்வீடுகளில் செல்வாக்குப் பெற்றது.

பிறந்த குழந்தைகளின் ஊஞ்சல் - தாய்மார்களின் மடிக்கும் தோளுக்கும் ஓய்வு கொடுக்கும் அருஞ்சாதனம் "ஏணை" ஆகும். மனிதக் குழந்தைகள் யாவரினதும் கருவறைக்கடுத்த வசிப்பிடம் இது என்று கூறலாம். விவசாய நிலங்களில் பணிசெய்யும் பெண்கள் தங்கள் கைக்குழந்தைகளை தம்மோடு பாதுகாப்பாக வைத்திருக்கும் இடம் அந்நிலத்து பெருமரத்தில் கட்டிய ஏணைகளே எனில் அது மிகையாகாது. ஏணை தூழி எனவும் அழைக்கப்பட்டது. இன்று ஊஞ்சல்கள் மரவூஞ்சல், பொன்னூஞ்சல், மூங்கிலூஞ்சல், பிளாஸ்ரிக் ஊஞ்சல் எனப்பலவாறு வசதிக்கேற்ற தேவைப்பொருளாகவும் அந்தஸ்தைக் காட்டும் அலங்காரப் பொருளாகவும் மாறிவருகின்றன. சுற்றுலாக்கள்,, சாகசப் பயணங்கள் என்பவற்றின் போது ஓய்வெடுக்கும் வகையிலான வலை ஊஞ்சல்கள் இப்போது பிரபலமாகிவிட்டன. வீட்டு நிலத்தின் குறுக்கம், மனவழுத்தத்தை நீக்குதல் என்பதனால் பூங்காக்களும் பூங்காக்களில் பலவகையான ஊஞ்சல்களும் பெருகிவிட்டன.

> ❝
> ஊஞ்சலில் ஆடுதல் மனச்சோர்வில் இருந்து விடுபடவும் மகிழ்ச்சியான மனநிலையைப் பேணவும் உதவுகின்றது. இரத் தோட்டம், மூச்சுவிடுதல் என்பன சீராகின்றன. தானாக உந்திப் பறந்து ஆடுதல் தன்னம்பிக்கையை வளர்க்கிறது. வசதிகுறைந்த மக்களின் சிம்மாசனம் ஊஞ்சல் எனலாம்.

பக்திமை நிலையில் கடவுளை மகிழ்ச்சிப்படுத்த ஊஞ்சல் பாக்கள் இயற்றப்பட்டு மகோற்சவ இறுதியில் இறைவன் ஊஞ்சலாட்டப்படுகின்றான். பூங்காவன நிகழ்விலும் ஊஞ்சல் உண்டு. ஈழத்தில் அதிகம் இயற்றப்பட்ட சிற்றிலக்கிய வடிவங்களில் ஊஞ்சலும் ஒன்று. வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளி அம்மன் ஊஞ்சலே ஈழத்தில் கிடைக்கின்ற பத்திமைசார்ந்த முதல் ஊஞ்சல்பா ஆகும். ஊசல் என்பது "ஒத்தமக்களை, சுற்றம் பொலிய சுகமொடு வாழ்க என்று, ஆசிரிய விருத்தம், கலித்தாழிசையில் "ஆடீர் ஊசல் ஆடோமோ ஊசல்"என்று பத்துச்செய்யுள்களால் பாடப்படுவதாக" என்று பிரபந்த தீபம் கூறுகிறது. இன்று கணினியில்தம் காலத்தை விரும்பியோ விருப்பமின்றியோ தொலைக்கும் மனிதர்களுக்கு ஏற்படும் உடல், உள உபாதைக்கு ஊஞ்சலும் ஊஞ்சலாடுதலும் சிறந்த மாற்றத்தை நல்க வல்லன. ஊஞ்சலாட்டலும் ஊஞ்சலாடலும் மனிதர்க்கிடையே அன்பையும் ஆரோக் கியத்தையும் வளர்க்கவல்லன. அதைத் துறந்து எம் மனமோ இயந்திரகதியில் பொருளின் பின்னால் ஊசலாடிக்கொண்டலைகிறது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
13 பெப்ரவரி 2022



# கறவை மாடுகளில் ஏற்படும் வெப்ப அயர்ச்சி

Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா

**கோடை காலத்தில் உணவின்றி கால்நடைகள் மெலிவதோடு நிர்ப்பீடணநோய் எதிர்ப்புச் சக்தியையும் இழப்பதால், இலகுவில் நோய்த் தாக்கத்துக்கு உட்படுகின்றன. இதனால் கால்வாய் நோய் [foot and mouth] கருங்காலி நோய் [black quarter] போன்றவற்றுக்கான தடுப்பூசிகளை தகுந்த நேரத்தில் போடவேண்டும்.**



## கொட்டகை மேலாண்மை

வெக்கை காலத்தில் கால்நடைகளை பாதுகாக்க, சிறந்த கொட்டகை மேலாண்மை அவசியம். வெளி வெப்பநிலையைவிட கொட்டகையினுள் வெப்பநிலை குறைவாக அமைய வேண்டும். கொட்டகை நல்ல காற்றோட்டம் மிக்கதாகவும் சூரிய ஒளி நேரடியாக விழாதவாறும் அகலப் பக்கம் கிழக்கு - மேற்கு நோக்கியதாக அமையவேண்டும். கொட்டகையின் அகலம் அதிகமாக இருந்தால் காற்றோட்டம் தடைப்படும்.

அகலம் 25 - 30 அடிக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். நீளம் மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாறுபடலாம். எனினும் அதிகபட்சம் 100 அடிக்கு மேல் இருப்பது கவனிப்பில் சிரமத்தை ஏற்படுத்தலாம். உயரத்தை 12 அடிக்கு மேல் வைத்திருப்பது பிரயோசனமற்றது. ஒரு மாட்டுக்கு 50-60 சதுரஅடி வரும் வகையில் பார்க்கவேண்டும். ஒரு கொட்டகைக்கும் மற்றைய கொட்டகைக்கும் இடையிலான தூரம், எவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ அவ்வளவுக்கு காற்றோட்டம் சிறப்பாக இருக்கும்.

பனை,தென்னை ஓலை மற்றும் வைக்கோல் கொண்டு கூரையை வேய்வது சிறப்பானது.தகரம் மற்றும் அஸ்பெஸ்டோஸ் கொண்டு கூரையை வேயும்போது அதற்கு மேல் ஓலைகள், வைக்கோலைப் போட வேண்டும். கீரைக் கொடி, பயற்றம் கொடி, அழகு மலர்க் கொடி போன்ற படர் தாவரங்களை வளரவிடலாம். தண்ணீர் தெளிப்பான்களையும் பயன்படுத்தலாம். கொட்டகையைச் சுற்றி நிழல் மரங்களை நட வேண்டும்.

வெயில் நேரங்களில் ஈரச் சாக்குகளை சுவரின் இரு பக்கமும் தொங்கவிடலாம். கொட்டகையின் உள்ளே தெளிப்பான்களையும் மின் விசிறிகளையும் உபயோகிக்கலாம். நவீன பண்ணைகளில் நவீன நீர் தெளிப்பான்கள் பாவிக்கப்படுகின்றன. பகல்வேளையில் மர நிழல்களில் மாடுகளை கட்டி வைக்கலாம். இரவு வேளையில் வலுக்குறைந்த அதிகம் வெப்பத்தை வெளிவிடாத மின்குமிழ்களைப் பாவிக்கலாம். கொட்டகை இல்லாதவர்களுக்கும், மிகக் குறைந்த மாடுகளை கொண்டவர்களுக்கும் மர நிழல்கள் மிகவும் பயன்மிக்கவை.



- வெப்பம் அதிகமுள்ள நாள்களில் குறைந்தது இரண்டுமுறையாவது மாடுகளைக் குளிப்பாட்ட வேண்டும்.
- மேய்ச்சலுக்கு விடும் நேரத்தை காலை 7 மணி தொடக்கம் 10 மணிவரையும் மாலை 4 தொடக்கம் 6 மணி வரையும் ஒழுங்குபடுத்தலாம்.
- சூழலின் வெப்பநிலை கூடினால் மாடுகள் தீவனத்தை உட்கொள்வது குறைவடைகிறது.
- பண்ணையைச் சுற்றி மா, பலா,பூவரசு,அரசு, ஆலமரம், கிளுவை போன்ற மரங்களை நட்டு வைத்தால் புல் கிடைக்காத வறட்சி நாட்களில் இவற்றின் இலைகளை வழங்கலாம்.

மேய்ச்சலுக்கு விடும் நேரத்தை காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரையும் மாலை 4 தொடக்கம் 6 மணி வரையும் ஒழுங்குபடுத்தலாம். அதிக வெப்பமுள்ள மதிய வேலையில் மேய்ச்சலில் விடுவது சாதகமற்றது.

வெப்பம் அதிகமுள்ள நாள்களில் குறைந்தது இரண்டு முறையாவது மாடுகளைக் குளிப்பாட்ட வேண்டும். எருமை மாடுகளை குறைந்தது ஐந்து முறையாவது குளிப்பாட்ட வேண்டும். எருமை மாட்டுக்கு வியர்வைச் சுரப்பிகள் அதிகம் இல்லாததாலும் அவற்றின் நிறம் கறுப்பு நிறமாக இருப்பதால் வெப்பத்தால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன.

## தீவன மேலாண்மை

சூழலின் வெப்பநிலைகூடினால் மாடுகள் தீவனத்தை உட்கொள்வது குறைவடைகிறது. கோடையில் வறட்சி காணப்படுவதால் பசும் புல் கிடைப்பது சிரமமாகிறது. நல்லினப் புற்களில் கோடைகாலத்தில் , போதிய நீர் இல்லாத படியால் அந்தப்புற்களில் உள்ள ஊட்டச்சத்துகள் குன்றி நார்ச்சத்து அதிகரிக்கும். இதனால் உடல் எடை குறையும். அத்துடன் பால் உற்பத்தியும் குறையும். எனவே அதற்குத் தகுந்தது போல பசுக்களுக்கு பசுந்தீவனம்,உலர் தீவனம் செறிவு தீவனம் வழங்கி கனியுப்பு இழப்பை ஈடு செய்ய வேண்டும். அதிக மாடுகள் காணப்படும் பண்ணைகளில் வயதான ,




உற்பத்தி குறைந்த, சினைப்பட சிரமப்படும் மாடுகளைக் கழிக்க வேண்டும்.

இல்லாது போனால் அவை ஏனைய மாடுகளுடன் உணவு தண்ணீருக்கு போட்டி போட்டு அனைத்து விலங்குகளுக்கும் தகுந்த உணவு ,தண்ணீர் கிடைக்காமல் போய்விடும்.

பண்ணையைச் சுற்றி மா,பலா,பூவரசு,அரசு,ஆலமரம், கிளுவை போன்ற மரங்களை நட்டு வைத்தால் புல் கிடைக்காத வறட்சி நாட்களில் இவற்றின் இலைகளை வழங்கலாம். இவற்றில் கணிசமான அளவு புரதச் சத்து காணப்படுகிறது.

வைக்கோல், கடலை, உளுந்துக் கொடி, கரும்புத்தோகை, கரும்புச்சக்கை போன்றன அதிகம் கிடைக்கும் காலப்பகுதிகளில் அவற்றைச் சேமித்து வைத்தால், அவற்றை வறட்சி காலத்தில் மாற்றுத் தீவனமாகப் பாவிக்கலாம்.

சொட்டு நீர்ப் பாசனம் மூலம் புல் வளர்ப்பில் ஈடுபட்டு நீர் விரயத்தைத் தவிர்க்கலாம்.உயரமான இடத்தில் கொட்டகையை அமைத்தால் , அந்தக் கொட்டகையைக் கழுவும் நீரை புல் வளரும் பகுதிக்கு வடியவிட்டால், நீர் விரயம் தவிர்க்கப்படும். புற்களை வழங்கும்போது புல் வெட்டும் இயந்திரம் மூலம், சிறிய துண்டுகளாக வெட்டிக் கொடுப்பதால் விரயமாதல் கணிசமாகக் குறைக்கப்படுகிறது. அசோலா மற்றும் ஹைட்ரோபோனிக்ஸ் [ hydroponics ] எனும் மண்ணில்லா பயிர்ச்செய்கையை மேற்கொண்டும், மாடுகளுக்கு வழங்க முடியும். அத்துடன் புற்கள் அதிகமாகக் கிடைக்கும் காலத்தில் அவற்றை உலர்த்தி , உலர் புல்லாகவும் [hay] பதப்படுத்தி ஊறுகாய் புல்லாகவும் [silage] வறட்சி காலத்தில் கொடுக்க முடியும். அதிகமாக தீவன மூலப் பொருட்கள் கிடைக்கும் போது அவற்றைப் பாதுகாக்கும் அதே வேளை உணவு நஞ்சாகாமலும் பாதுகாக்க வேண்டும்.


கோடையில் மாடுகள் வெப்ப உற்பத்தியைக் குறைக்கும் விதமாக அடர்வு தீவனத்தை குறைத்தே உண்கின்றன. எனவே உட்கொள்ளும் அடர்வு தீவனம் , சத்துக்கள் நிறைந்ததாகப் பார்த்துக் கொள்ளும் அதேவேளை அதனை காலை, மாலை என்று பிரித்து வழங்கலாம்.புற்களின் சத்துக் குறைவதாலும் அசையூன் வயிற்றில் வாழும் நுண்ணுயிர்களின் வளர்ச்சி பாதிப்படைவதாலும் ஏற்படும் அமில அதிகரிப்பை ஈடு செய்ய , சோடா உப்பு மற்றும் மக்னீசியம் பால் கொடுக்கலாம். தாது உப்புகளையும் கொடுக்க வேண்டும்.

## நோய் மேலாண்மை

கோடை காலத்தில் உணவின்றி கால்நடைகள் மெலிவதோடு நிர்ப்பீடண நோய் எதிர்ப்பு சக்தியையும் இழப்பதால், இலகுவில் நோய்த் தாக்கத்துக்கு உட்படுகின்றன. இதனால் கால்வாய் நோய் [foot and mouth] கருங்காலி நோய் [black quarter] போன்றவற்றுக்கான தடுப்பூசிகளை தகுந்த நேரத்தில் போட வேண்டும். மேலும் சிறந்த அக ஒட்டுண்ணி மருந்துகளை சரியான அளவில் கொடுப்பதோடு புற ஒட்டுண்ணிகளை இல்லாது செய்ய வேண்டும். நீர் வற்றிய குளம் குட்டைகளில் ஒட்டுண்ணிப் பெருக்கம் அதிகம் காணப்படுவதால் அவற்றை அங்கு நீர் அருந்த விடக்கூடாது.

மேற்கூறிய சகல மேலாண்மை முறைகளையும் சரியாகக் கையாண்டு கோடைகாலத்தில் கறவைமாடுகளின் ஏற்படும் வெப்ப அயர்ச்சியை குறைத்து சிறந்த உற்பத்திகளைப் பெறமுடியும்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமும் விவேகமும்!

○ ம.மயூரபாலன்

ஒரு நாள் மனிதன் ஒருவன் நகரத்துக்கு செல்வதற்காக அதிகாலை ஐந்து மணிக்கு பேருந்து நிலையத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. அங்கு செல்வதற்கு அதிக நேரம் எடுக்கும் என்பதால் அவன் தனது அயலில் உள்ள தோட்டக்காரனிடம் சென்று , அவனது தோட்டத்தில் உள்ள குறுக்குப் பாதையின் ஊடாகப் பயணிப்பதற்கு அனுமதி கேட்டான். அதற்கு அந்தத் தோட்டக்காரனும் "நீங்கள் தாராளமாக எனது தோட்டத்தின் ஊடாகச் செல்லலாம். ஆனால் தற்செயலாக எனது நாய் உங்களைக் கண்டுவிட்டால் நீங்கள் நாலரை மணி பஸ்ஸைக் கூட பிடிக்க முடியும்" எனக் கூறினான்.
அந்த மனிதனை நாய் துரத்தும் சூழ்நிலையை சற்று கற்பனை பண்ணிப் பார்த்தால், அந்த மனிதனின் நிலை நன்றாக இருக்கப்போவதில்லை என்பது எங்களுக்கு புலப்படும். அது போலவே எங்களது வாழ்விலும் எங்களை எது துரத்துகின்றது, எதற்காக ஓடுகிறோம் என்பதனைப் பார்க்க வேண்டியது அவசியமாகும். எங்களது வாழ்க்கை, 'நாங்கள் பிறந்தோம் உலகத்து விஷயங்களால் துரத்தப்பட்டோம் ,பின்னர் இறந்து போனோம் 'என்று இருக்கக் கூடாது. நீர்க்குமிழி போல நிரந்தரமற்ற ,மட்டுப்படுத்தப்பட்ட எங்களது வாழ்வின் அத்திபாரமாக ஆனந்தமும் அமைதியும் இருக்கவேண்டும். நாங்கள் செய்கின்ற காரியங்கள் எங்களுக்குப் பிடித்திருந்தால் அதனை ஆர்வத்துடன் செய்கிறோம். அப்பொழுது நாங்கள் சோர்வு அடைவதில்லை. அது எங்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கின்றது.
ஆனால் எங்களுக்கு பிடிக்காத விஷயங்களை நாங்கள் வெறுப்புடன் செய்கிறோம். அப்பொழுது அவை எங்களுக்கு மன அழுத்தத்தையும் கவலையையும் கொடுக்கின்றன. "எங்களது எண்ணமெல்லாம் இறைவன் நாமத்தை பற்றியதாக இருக்க வேண்டும். இறைவன் நாமம் அல்லாது நாம் எண்ணுகின்ற மற்றைய எண்ணங்கள் எல்லாம் காலன் நமது கழுத்தில் போடும் தூக்குக் கயிறு" என பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கபீர் எனும் ஞானி கூறியிருக்கிறார். மனிதன் நோய்வாய்ப்படுவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாக மன அழுத்தம் உள்ளது என இன்றைய வளர்ச்சி அடைந்த விஞ்ஞான ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
"சிந்தித்துப் பார்த்து செய்கையை மாத்து, சிறுசாய் இருக்கையில் திருத்திக்கோ.." என ஒரு சினிமாப் பாடல் உள்ளது. எங்களது வாழ்வில் மெதுவாக அடிக்கின்ற சில எச்சரிக்கை மணிகளை நாங்கள் உதாசீனப்படுத்தும் பொழுது அதன் விளைவுகள் மிகவும் மோசமாக அமைந்து விடுகின்றன.
ஒருநாள் சட்டத்தரணி ஒருவர் தனது புத்தம் புதுக் காரிலே போக்குவரத்து நெரிசல் இல்லாத தெரு ஒன்றில் மகிழ்ச்சியாக போய்க் கொண்டிருந்தார். அவர் போகும் வழியில் ஒரு சிறுவன் தெருவின் நடுவில் நின்று கொண்டு காரை நிறுத்துமாறு கையை அசைத்துக் கொண்டிருந்தான். ஆயினும் அந்த சட்டத்தரணி அதனைப் பொருட்படுத்தாது அவனைத் தாண்டிச் சென்றார். திடீரென்று பார்த்தால் அந்தச் சிறுவன் வீசிய கல் வந்து அவரது புத்தம் புதிய காரில் அடித்துவிட்டது. அந்த சட்டத்தரணியும் காரை நிறுத்தி மிகவும் கோபத்துடன் அந்தச் சிறுவனை நோக்கிச் சென்றார். அப்பொழுது அந்தச் சிறுவனும் "ஐயா நான் எனது வயது முதிர்ந்த தாயாரை தள்ளுவண்டியிலே தள்ளிக்கொண்டு வந்தேன். அந்தத் தள்ளுவண்டி பள்ளத்தில் விழுந்துவிட்டது. எனக்கு வேறு வழி தெரியாது உங்களது காரை கல்லால் அடித்துவிட்டேன். தயவு செய்து என்னை மன்னித்து உதவி செய்யுங்கள்" எனச் சொன்னான். அதனைக் கேட்டு மனம் உருகிப் போன சட்டத்தரணியும் அவனுக்கு உதவி செய்தார். அத்துடன் இந்த சம்பவத்தை ஒருபோதும் மறக்கக்கூடாது என்பதற்காக தனது காரில் கல் பட்டதால் உண்டான உராய்வு அடையாளத்தைச் சரிசெய்யாமலே விட்டுவிட்டார்.
நாங்கள் மெதுவான கை அசைப்பினை உதாசீனம் செய்தால் கல்லடி நம்மை நிறுத்தும் என்பது கசப்பான உண்மையாகும். நாங்கள் எல்லோரும் எங்கே போகிறோம் எனத் தெரியாமல் மிகவும் விரைவாக ஓடிக்கொண்டிருக்கிறோம்.
இந்த காலகட்டத்தில் எங்களது வேகத்தைச் சிறிது குறைத்து எங்களது உள்ளமும் உடலும் என்ன சொல்கின்றது என்பதைக் கேட்க வேண்டியது அவசியமாகும்.
இங்கே விஷயம் எங்களது வாழ்க்கை எவ்வாறு உள்ளது என்பதை விட, எங்களது வாழ்க்கையில் நாங்கள் எவ்வாறு இருக்கிறோம் என்பதனைப் பற்றியதுதான். எங்களது வாழ்க்கையில் எங்களுக்கு என்னவெல்லாம் தரப்பட்டு உள்ளனவோ அவற்றின் மதிப்பை உணர்ந்து அதற்கு நன்றி உள்ளவர்களாக இருக்கிறோமா? அல்லது எங்களிடம் இல்லாதவற்றை பட்டியலிட்டு அவற்றுக்காக ஏங்கிக் கொண்டு இருக்கின்றோமா? எங்களது வாழ்க்கைக்கும், வாழ்க்கையில் நடைபெறும் விஷயங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை எங்களால் காணக் கூடியதாக உள்ளதா? ஏனெனில் இவைகள் எல்லாம் எங்களது கண்ணோட்டத்தில் தங்கியுள்ளன.
ஒரே சிறையில் இருக்கும் இரண்டு கைதிகளிடம் அந்த சிறையில் உள்ள ஜன்னலின் ஊடாக பார்த்து அவர்கள் காண்கின்ற காட்சியை வரையும்படி கூறினார்கள். ஒரு சிறைக்கைதி ஜன்னலின் கம்பிகளை மட்டும் வரைந்தான். மற்றய கைதி அந்த சிறைக் கம்பிக்கு அப்பாலுள்ள சூரிய அஸ்தமனம், மரங்கள், செடிகள், பூக்கள் என்பவற்றை வரைந்தான். அவர்கள் இரண்டு பேரும் இருக்கின்ற இடம் ஒன்றுதான். ஆனால் அவர்கள் பார்க்கின்ற விதத்தில் தான் வித்தியாசம் உள்ளது.
இந்த வாழ்க்கையின் ஓட்டத்தில் பாறைகளில் மோதாமல் எமது படகை எடுத்துச் செல்வது என்பது, முக்கியமாக இந்தக் கொரோனாப் பெருந் தொற்றுக்காலத்தில் மிகவும் சிரமமாக உள்ளது. ஆனால் ஒருபோதும் இல்லாதவாறு, பொறுமையுடனும் [illegible] வேலை [illegible] வேண்டியது இப்பொழுது தான் அவசியமும்கூட. ■



எங்களது வாழ்க்கையில் எங்களுக்கு என்னவெல்லாம் தரப்பட்டு உள்ளனவோ அவற்றின் மதிப்பை உணர்ந்து அதற்கு நன்றி உள்ளவர்களாக இருக்கிறோமா? அல்லது எங்களிடம் இல்லாதவற்றை பட்டியலிட்டு அவற்றுக்காக ஏங்கிக் கொண்டு இருக்கின்றோமா?

மனிதன் நோய்வாய்ப் படுவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாக மன அழுத்தம் உள்ளது என இன்றைய வளர்ச்சி அடைந்த விஞ்ஞான ஆராய்ச்சிகள் கூறுகின்றன.



# ஊர்ப்புதினம்

○ இராகவன்

26

இழவு சொல்லுறதிலை இன்னொரு வகையிருக்கு. செத்தாளின்ரை வீட்டுக்காரர் ஊருக்குள்ள கொஞ்சஞ் கௌரவமான ஆக்கள் நாலைஞ்சு பேரைப் பிடிச்சு இன்ன இன்னாருக்கு இழவு சொல்லிப் போட்டு வாங்கோ எண்டு திக்குத் திக்காய்ச் சைக்கிள்களும் கொடுத்தனுப்புவினம். அநேகமாய் இழவு சொல்லப் போறாக்கள் தங்கடை சைக்கிளில தான் போவினம். சைக்கிள் இல்லாத ஆக்கள்தான் செத்த வீட்டுக்காரர் ஒழுங்கு செய்து குடுக்கிற சைக்கிளில போவினம். இப்படி இழவு சொல்லப் போறாக்களுக்கு தண்ணிவென்னிக்குக் காசுங் குடுத்து விடுவினம். இழவு சொல்லப் போறாக்கள் சிலர் தண்ணியப் போட்டுட்டு இழவு சொல்லாமல் மட்டையான கதையளுமிருக்கு.
புளுவெட்டிச் சின்னையாப்பா செத்திட்டார் எண்டு விடியப்பறம் இழவு வந்தவுடன, அம்மா என்னையெழுப்பி "நீ இண்டைக்கு நேசறிக்குப் போக வேண்டாம். குலமக்கா வின்ர தேப்பன் செத்ததாம். நான் போறன். கொஞ்ச நேரத்தில கொப்பா வேலையால வந்திடுவார். நீ சாப்பிட்டுட்டு அவரோட சேர்ந்து வா. நான் இப்ப போறன். அயலுக்குள்ள சரியில்லை" எண்டு சொல்லிப் போட்டு போகிட்டா.



அந்த மூட்டம் அப்பா ஊர்க்காவல்துறைப் பொலிஸ்ரேசனில வேலை செய்தவர். அவருக்கு நைட் டியூட்டி. அவர் வேலை முடிச்சுக் காலமை ஒரெட்டு மணி போல வீட்டை வந்தார்.
அண்ணையாக்கள் அப்பாக்கு விசயத்தைச் சொல்லிப்போட்டு செத்தவீட்டுக்குப் போகிட்டினம். அப்பா சாப்பிட்டுட்டு என்னையும் சாப்பிடப் பண்ணி ,வெளிக்கிடுத்தி, தானும் வேட்டியைக் கட்டிச் சேட்டைப் போட்டுக் கொண்டு என்னையும் தூக்கிக் கொண்டு வெளிக்கிட்டார். நான் இதுக்கு முந்தி அப்பாவை பொலிஸ் யூனிபோமில அல்லது ட்ரவுசர் சேட்டிலதான் பாத்திருக்கிறன். இப்பதான் முதன்முதலாய் வேட்டி சேட்டோட பாக்கிறன். இதெனக்கு நல்ல வேடிக்கையாயும் முசுப்பாத்தியாயுமிருந்தது. நான் வாயைப் பொத்திக் கொண்டு சிரிச்சன்.
"ஏன்ரா சிரிக்கிறாய்?" எண்டவர் கேட்டார். "அப்பா! நீங்கள் வேட்டி கட்டியிருக்கிறியள். அதுதான்" எண்டு சொன்னன். "இதில சிரிக்கிறதுக்கு என்ன இருக்கு? செத்த வீட்டுக்கு வேட்டியோடதான் போகோணும். செத்த வீட்டை போகேக்குள்ள சிரிக்கக்கூடாது. அங்கை வந்து கண்டபடி ஓடித்திரியாமலுக்கு என்ர மடியிலேயே இருக்கோணும். விளங்கிச்சுதோ?" எண்டு கொஞ்சம் உறுக்கிறமாதிரி சொன்னார். நானும் தலையாட்டினன். பிறகு நான் சிரிக்கேல்ல. குலமக்கா வீட்டை பெரிய கீற்றுப் பந்தல் போட்டிருந்தினம். இப்பவெல்லோ தகரப் பந்தல் கொண்டுவந்து கொழுவுறது. முந்தி எதுக்கும் கீற்றுப்பந்தல்தானே போடுறவை. குலமக்கா "என்ர ஐயா! என்ர ஐயா" எண்டு குழறிக் கொண்டிருந்தா. மற்றப் பொம்பிளையள் ஒப்பாரி வைச்சுக் கட்டிப்பிடிச்சு அழுதினம். துரைமாமாவும்சதாமாமாவும்மூலைக்கொருத்தராய் கவலை தோஞ்ச முகங்களோட இருந்தினம். பந்தலுக்குள்ள போட்டிருந்த பாயில அப்பா இருக்க நான் அவரின்ர மடியில இருந்து புதினம் பாத்தன். ஒரு பெரிய பாடை கட்டி நாலு பக்கமும் தென்னம் பூவைச் சிலர் செருகிக் கொண்டிருந்தினம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடடே! அப்படியா?

ஆதங்கன்



# 3 முறை அடக்கம் செய்யப்பட்ட மும்தாஜ்!

காதலின் சின்னமாகக் கொள்ளப்படும் தாஜ் மஹாலைப் பற்றியும், மன்னன் ஷாஜஹான் தன்னுடைய காதலியான மும்தாஜின் நினைவாகவே அதனைக் கட்டினான் என்பதும் பலருக்கும் தெரிந்த விடயங்களே. அந்தத் தாஜ்மஹாலில் தான் முதாஜின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்பதுகூட எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால், மும்தாஜின் உடல் முதலில் புதைக்கப்பட்டது தாஜ்மஹால் அமைந்துள்ள இடத்தில் அல்ல.

1631 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17 ஆம் திகதி மும்தாஜ் உயிரிழந்தார். அவரது சடலம் முதலில் புர்ஹான்பூரில், தப்தி நதிக்கரையில் உள்ள தோட்டத்திலேயே புதைக்கப்பட்டது.

ஆனால் ஆறு மாதங்களுக்குப் பிறகு, மும்தாஜின் உடல் அங்கிருந்து தோண்டி எடுக்கப்பட்டு, 15 வயதேயான இளவரசர் ஷா ஷுஜாவின் மேற்பார்வையில், ஆக்ராவுக்குக் கொண்டுவரப்பட்டு, யமுனை ஆற்றின் கரையில் இரண்டாவது முறையாக அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடமும் தன் வாழ்க்கைத் துணைக்கான இறுதி ஓய்விடமாக, ஷாஜஹானுக்குத் திருப்தியளிக்கவில்லை.

எனவேதான் அவர் இன்னொரு கல்லறையைக் கட்டி, மூன்றாவது முறையாக மும்தாஜின் உடலை அடக்கம் செய்து, அதற்கு 'ரவுசாஇமுனவ்வரா' என்றும் பெயரிட்டார். அந்தக் கல்லறைதான் இப்போதைய தாஜ்மஹால்

மும்தாஜைப் பற்றி இன்னொரு விடயமும் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏதோ மும்தாஜ், ஷாஜஹானின் காதலியாக இருக்கும் போதே இறந்துவிட்டார் என்றுதானே அநேக காதலர்கள் உருட்டுகிறார்கள். ஆனால் உண்மையில் ஷாஜஹானின் மனைவியாக வாழ்ந்து, 14 குழந்தைகளைப் பெற்றெடுத்த பின்னர்தான் மும்தாஜ் உயிர் துறந்தார்.

அதுவும், "வேறு பெண்கள் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளக்கூடாது" என்று ஷாஜகானிடம் சத்தியம் வாங்கிய பின்னர் தான் மும்தாஜின் உயிரே பிரிந்ததாம்.

அரிமாநேத்ரன்

# துப்பறியும்


13



'காமிக்ஸ்' தொடர்

AK 67

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்




(தொடரும்)

# இரகசியம்

கூட்டம் கூட்டமாக
பறவைகள்
படபடத்துப் பறக்க,
நின்று கொண்டிருக்கும்
[illegible]
[illegible]
எல்லாம்
வடிந்த இருப்பு.
அமைதியின்
நிழலில்
எஞ்சியவை
[illegible]
[illegible] போல்
படபடக்கிறது.



ச.அனுக்ரஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org